பக்கங்கள்: பதினாறு

[illegible] படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

Registered as a Newspaper

உதயன்

விலை
ரூபா
15.00

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 சித்திரை 12 சனிக்கிழமை (25.04.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:150

வன்னி சென்று பார்வையிட

ஐ.நா. அதிகாரிகளுக்கு அனுமதி

அரசு கொள்கையளவில் இணக்கம்

கொழும்பு, ஏப்ரல் 25

முல்லைத்தீவு பாதுகாப்பு வலயப் பிரதேசத்துக்கு ஐக்கியநாடுகள் சபையின் மனிதாபிமானக் குழு - அதிகாரிகள் குழு- சென்று பார்வையிடுவதற்கு அனுமதி வழங்குவது என அரசாங்கம் கொள்கையளவில் இணக்கம் தெரிவித்துள்ளது.

அனர்த்த முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் அமைச்சர் இத் தகவலை நேற்றுத் தெரிவித்தார்.

அவர்களின் விஜயத்துக்கான விவரங்கள் தயாரிக்கப்பட்டதும் கொழும்பிலுள்ள ஐ.நா. உயர் அதிகாரிகள் அங்கு செல்வதற்கு அனுமதிக்கப்படுவர் என்றும் அவர் சொன்னார். (16 ஆம் பக்கம் பார்க்க)

ஜோன் ஹேம்ஸ் நாளை வருவார்?

ஜெனீவா, ஏப்.25

இலங்கையில் இடம்பெயர்ந்த மக்களின் மனிதாபிமானப் பிரச்சினைகள் குறித்து நேரில் ஆராய்வதற்காக ஐ.நாவின் மனிதாபிமான விவகாரங்களுக்கான பிரதிச் செயலாளர் நாயகம்(16 ஆம் பக்கம் பார்க்க)

கப்பல் சேவை இன்று

யாழ்ப்பாணம், ஏப்.25

காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை இன்று சனிக்கிழமை நடைபெறும். யாழ் [illegible] க.கணேஷ் இதனை அறிவித்துள்ளார்.(16 ஆம் பக்கம் பார்க்க)

வன்னியில் நான்கு மாதங்களில் 6,500பேர்பலி-ஐ.நா.தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 25

இலங்கையின் வன்னிப் பகுதியில் நடைபெறும் மோதல்களில் கடந்த மூன்று மாதங்களில் 6 ஆயிரத்து 500 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதுடன், 14 ஆயிரம் பேர் காயமடைந்துள்ளனர் என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

இந்த விவரங்கள் ஐ.நாவினால் பகிரங்கமாக வெளியிடப்படாதபோதிலும் கொழும்பில் உள்ள (16 ஆம் பக்கம் பார்க்க)

'உதயன்' ஆசிரியர் விடுதலை

கொழும்பு, ஏப். 25

கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கடந்த இரு மாதங்களாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த 'உதயன்' ஆசிரியரும் 'சுடர் ஒளி'யின் பிரதம ஆசிரியருமான ந. வித்தியாதரன் நேற்று விடுதலை செய்யப்பட்டார்.

கொழும்பு கோட்டை நீதிவான் திஹான் பலப்பிட்டிய முன்னிலையில் நேற்று ஆஜர்படுத்தப்பட்ட போது, அவருக்கு எதிரான குற்றச்சாட்டுகளை நிரூபிப்பதற்குப் போதுமான ஆதாரங்கள் இல்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வித்தியாதரன் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது அவர்மீது எவ்வித சந்தேகமும் இல்லை என்பது கண்டறியப்பட்டதாகவும் அவருக்கு வந்த தொலைபேசி அழைப்புகளை ஆராய்ந்த போது இது உறுதியானதாகவும் கொழும்பு (16 ஆம் பக்கம் பார்க்க)

'உதயன்' ஆசிரியர்வித்தியாதரன் தனது கருத்துக்களை நாளை ஞாயிறன்று வாசகர்களுடன் பகிர்ந்துகொள்வார்.

மனித நடமாட்டமோ, கட்டடங்களோ இல்லாத

வனாந்தரமாகக் காட்சிதரும் பரந்தன் - முல்லைத்தீவுப் பிரதேசம்; போரின் உக்கிரத்தை உணர வைக்கிறது அந்தப் பகுதி

கொழும்பு, ஏப்.25

அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு மக்கள் நேற்று வந்து கொண்டிருந்த போது.....

பரந்தனில் இருந்து முல்லைத்தீவு வரையான நீண்டபிரதேசத்தில் கடும் போர் இடம்பெற்றமைக்கான அடையாளங்களே காணப்படுகின்றன. கட்டடங்கள் எவையும்இன்றி மனித நடமாட்டமே இல்லாத வெளியாக, வனாந்தரப் பிரதேசமாக அது காட்சியளிக்கிறது.

அங்கு சென்று திரும்பிய வெளிநாட்டுச் செய்தி யாளர் ஒருவர் வன்னி நிலை மையை மேற்கண்டவாறு வர்ணித்தார்.

வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுச் செய்தியாளர்கள் அடங்கிய 40பேர்நேற்று களமுனைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, புதுமாத்தளன் ஆகிய பகுதிகளுக்கு செய்தியாளர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர்.

அங்கு இடம்பெற்ற சண்டை தொடர்பாக படைஅதிகாரி கள் செய்தியாளர்களிடம் விவரித்து விளக்கங்களையும் கூறினர்.

மக்கள் பாதுகாப்பு வலயப் பிரதேசத்தில் இருந்து வெளியேறி வந்து இரணைப்பாலைச் சந்தியில் வீதியோரங்களில் (16 ஆம் பக்கம் பார்க்க)

வலைஞர்மடத்தில் நேற்றைய தாக்குதலில் 197 பேர் பலி! மாதா கோயில் பகுதியில் கொத்துக் குண்டுகளும் விழுந்தன!!

கொழும்பு, ஏப்.25

மக்கள் வாழ்விடங்கள் மீது படையினர் நேற்று நடத்திய அகோர ஷெல் தாக்குதல்களில் 197 பேர் கொலையுண்டனர். நூற்றுக்கும் அதிகமானோர் காய மடைந்துள்ளனர். இவர்களை முள்ளிவாய்க்கால் மருத்துவமனைக்கு எடுத்து வரமுடியாத நிலை ஏற்பட்டது என்று இணையத்தளங்கள் நேற்றிரவு தகவல் வெளியிட்டன. நேற்றைய தாக்குதல் சம் பவங்கள் குறித்து இணையத்தளங்கள் வெளியிட்ட விவரங்கள் வருமாறு:

வலைஞர்மடத்தில் தங்கியிருக்கும் மக்கள் வாழ்விடங்கள்(16 ஆம் பக்கம் பார்க்க)

கொசி
உணவகம்
Feel at home

தினந்தோறும்

தம் புரியாணி, நூடில்ஸ், (f)பிறைட்ரைஸ்,
ஸ்பெஷல் நாண், பூரி, சூப் மற்றும்
சைனிஸ், இந்தியன் ஸ்பெஷல் உணவு, கறி வகைகள்

வழி
பலாலி, ஸ்ரான்லி வீதியின் ஊடாக
எமது றெஸ்ரோறன்ரை வந்தடையலாம்

Free Delivery Town Limit

இல:15, சிறாம்பியடி லேன், யாழ்ப்பாணம் T.P.No: 021-2225899

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



முல்லைத்தீவில் மக்கள் பாதுகாப்பு வலயப் பகுதி மீது நேற்று மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் கொல்லப்பட்டவர்களை முதல் இரு படங்களிலும் காயமடைந்தவர்களை அவர்களது உறவினர்கள் கட்டாந்தரையில் வைத்துப் பராமரிப்பதை அடுத்துள்ள படங்களிலும் காணலாம்.

பலாலி ஆசிரிய கலாசாலைக்கு அனுமதிபெற்ற ஆசிரிய மாணவர்கள்

யாழ்ப்பாணம், ஏப்.25

பலாலி ஆசிரிய கலாசாலைக்கு 2009/2010 ஆண்டுக்கு பயிற்சி நெறியை மேற்கொள்ளவுள்ள ஆசிரிய மாணவர்களின் பெயர்ப்பட்டியல் கல்வியமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளது.

புதிய மாணவர்களுக்கான அனுமதிகள் அடுத்த மாதம் 4 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு வழங்கப்படும். மறுநாள் விரிவுரைகள் ஆரம்பமாகும்.

அனுமதி பெறுபவர்களுக்கான கடிதங்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன என கலாசாலை அதிபர் எம். இக்னேஷியஸ் தெரிவித்தார்.

அனுமதிக்கப்பட்டுள்ளவர்களின் விவரம் வருமாறு:-

★ ஆங்கிலம் - திருமதி எம்.வேல் சுலோஜினி - வல்வெட்டித்துறை, பி.பி.சாந்தரூபன் - நல்லூர், டானியல் ஜெயரூபன் - வல்வெட்டித்துறை; திருமதி எஸ்.திருநிறைச்செல்வன் - அளவெட்டி, செல்வி எஸ்.சிவதாரி - கைதடி, வண.சகோ.ஜே.சித்திரா - யாழ்ப்பாணம், செல்வி.எஸ்.செல்லத்துரை - மானிப்பாய், செல்வி.எஸ்.சுதர்தனா - கரவெட்டி, செல்வி.பி.ரோகினி - உரும்பிராய், திருமதி எஸ்.எட்வின் இராஜகுமார் - உரும்பிராய்,செல்வி. கே.சித்திராதேவி - திருநெல்வேலி, திரு.ஆர்.பகீரதன் - வவுனியா.

★ விஞ்ஞானம் - திருமதி.ஆர்.சிவகுமார் - சுழிபுரம், திருமதி.எஸ்.வசீகரன் - நல்லூர்.

★ கணிதம் - எஸ்.ஸ்ரீதரன் - எட்டியாந்தோட்டை.

★ நீருயிர் வளம் - பீ.கமலக்கண்ணன் - பருத்தித்துறை. (1)

மரண அறிவித்தல்கள்

வேலாயுதபிள்ளை விமலாதேவி

கைதடியைப் பிறப்பிடமாகவும் அம்பனை, அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதபிள்ளை விமலாதேவி நேற்று (24.04.2009) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் வேலாயுதபிள்ளையின் அன்பு மனைவியும் செல்லத்துரை - சின்னத்தங்கம் தம்பதியினரின் அன்பு மகளும் அஜந்தன், மதினிகா ஆகியோரின் அன்புத் தாயாரும் ஸ்ரீதரன், மனோகரன், கெளரி, சசிகரன், தயாகரன், சரோஜாதேவி, மல்லிகாதேவி, ரஞ்சனிதேவி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.04.2009) சனிக்கிழமை அவரது இல்லத்தில் இடம்பெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் பி.ப. ஒரு மணிக்கு கேணிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அம்பனை,
அளவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.

திருமதி பவளேஸ்வரி மயில்வாகனம்

வண்ணார்பண்ணை அஞ்சலக ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பவளேஸ்வரி மயில்வாகனம் 23.04.2009 வியாழக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற கூட்டுறவுப் பரிசோதகர் ஆறுமுகம் மயில்வாகனம் அவர்களின் அன்பு மனைவியும் வண்ணார் பண்ணையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - செல்லம்மா தம்பதியினரின் மகளும் மானிப்பாயைச் சேர்ந்த காலஞ்சென்ற ஆறுமுகம் - பாக்கியம் தம்பதியினரின் மருமகளும் காலஞ்சென்ற மோகனதாஸ் மற்றும் குகதாஸ் (அவுஸ்திரேலியா), மதிவதனி, இரதிவதனி (கனடா), சுரேஸ்தாஸ் (கனடா), உருத்திரவதனி (கனடா), ரமேஸ்குமார் (வளிமண்டலவியல் ஆராய்ச்சித் திணைக்களம், வவுனியா) ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவாஜினி (அவுஸ்திரேலியா), சிவராசா (ஓய்வு பெற்ற பிரதம அஞ்சல் அதிபர், யாழ்ப்பாணம்), பாலசுப்பிரமணியம் (கனடா), ராஜினி (கனடா), கழகேந்திரன் (கனடா), பாமினி (Accountant W.K.K. Lanka (Pvt) Ltd) ஆகியோரின் அன்பு மாமியாரும் ரிஷாந், ரஜீந், ஷாமினி, வித்யா (உப அஞ்சல் அதிபர், நாவாந்துறை), சிவஜா (ஆசிரியை, சாவகச்சேரி இந்துக் கல்லூரி), பகீரதன் (வன்முறையற்ற சமாதான அணி), திவ்ஜா (வேம்படி மகளிர் கல்லூரி), சிவதரன் (யாழ்.இந்துக் கல்லூரி) நிஷாந்தி, நிஷாந்தன், சுதர்சன், ரதீஷன், சோபனா, வானதி, சர்மிளா, சுஜிதா, ஆரணி ஆகியோரின் அன்புப் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.04.2009) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

84/4, அஞ்சலக ஒழுங்கை,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

நலன்புரி நிலையங்களில் உள்ள மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் அடுத்த மாதம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப்.25

நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் மே மாதம் ஆரம்பமாகவுள்ளன.

மிருசுவில் நலன்புரி நிலைய மாணவர்களுக்கு யுனிசெவ் நிறுவனத்தினரால் மிருசுவில் றோ.க.த.க. பாடசாலை தற்போது இயங்கும் கட்டடத்திற்கு அருகிலும்-

கைதடி, நாவற்குழி ஆகிய நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மாணவர்களுக்கு இலங்கை சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தினரால் கைதடி மத்திய மருந்தக வளாகத்திற்கு அருகிலும் - வகுப்பறைத் தொகுதிகள் அமைக்கப்பட்டு வருவதாகவும் - பெரும்பாலும் இவை அடுத்த மாத முற்பகுதியில் இயங்குமெனவும் அறியமுடிந்தது. (1-207)

பருத்தித்துறை ஆஸ்பத்திரியில் 19 பேர் அனுமதி

வடமராட்சி, ஏப்.25

முல்லைத்தீவு, புதுமாத்தளன் பகுதியிலிருந்து படகுகள் மூலம் பருத்தித்துறை நோக்கி வந்த ஆயிரக்கணக்கானோரில் காயமடைந்த 19 பேர் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இரு பெண்கள், இருசிறுவர்களைக் கொண்ட இவர்களில் ஒரு சிறுவன் உட்பட 6 பேர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். ஏனையோர் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சாவகச்சேரி மகளிர் கல்லூரி ஆசிரியர்களுக்கு

யாழ்ப்பாணம், ஏப்.25

சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் கற்பிக்கின்ற ஆசிரியர்கள் அனைவரையும் நாளை மறுதினம் திங்கட்கிழமை மு.ப. 9 மணியளவில் பாடசாலைக்குச் சமுகமளிக்குமாறு கல்லூரியின் அதிபர் அறிவித்துள்ளார். (50-9)

விற்பனைக்கு

பாவிக்காத புத்தம்புதிய Honda 2800 மின் பிறப்பாக்கி (ஜெனரேட்டர்) விற்பனைக்குண்டு.

சிறி தணுசிகன் எலக்ரிக்கல்ஸ்,
இல. 385, கே.கே.எஸ். வீதி, சிவன் கோவிலடி, யாழ்ப்பாணம். 0776560594

இறைச்சிக் கோழி விற்பனை

நிறை கூடிய தரமான புறொயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனை செய்யப்படுகின்றன.

செம்மணி பாம்
77/3, செம்மணி வீதி, நாயன்மார்கட்டு.

கோழிக்குஞ்சு விநியோகம்

PIRIMA சிவப்பு, வெள்ளைப் பேட்டுக்குஞ்சுகள் 27.04.2009 விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும்.

★ [illegible]
நவாலி வீதி, ஆனைக்கோட்டை.

அத்தியாவசிய மற்றும் கட்டடப் பொருள்களுடன் 21 லொறிகள் நாவற்குழி வந்தடைந்தன

யாழ்ப்பாணம், ஏப்.25

கொழும்பில் இருந்து அத்தியாவசிய மற்றும் கட்டடப் பொருள்களுடன் ஏ-9 பாதையூடாக 21 லொறிகள் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தன.

நாவற்குழி உணவுக்களஞ்சியத்தை வந்தடைந்த லொறிகளில் இருந்து பொருள்கள் இறக்கும் பணிகள் நேற்றே ஆரம்பமாகின.

கட்டடப் பொருள்கள் மற்றும் சோடா, பிஸ்கட், நானாவிதப் பொருள்கள் எடுத்துவரப்பட்டுள்ளன.

இவற்றில் 18 லொறிகளில் வெங்காயத்தை அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட தேசவள விவசாயிகள் சம்மேளம் தெரிவித்துள்ளது.

விவசாயிகளிடம் இருந்து பெறப்பட்ட வெங்காயம் லொறிகளில் ஏற்றும் பணிகள் நேற்றுப் பிற்பகல் ஆரம்பமானது என்றும் சம்மேளளம் தெரிவித்தது. (1)

மரண அறிவித்தல்கள்

கணபதிப்பிள்ளை சுந்தரமூர்த்தி

அராலி மேற்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சுந்தரமூர்த்தி நேற்று (24.04.2009) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - மனோன்மணி தம்பதியினரின் மகனும் காலஞ்சென்றவர்களான அருணாசலம் - பரமேஸ்வரி தம்பதியினரின் அன்பு மருமகனும் விஜயலட்சுமியின் அன்புக் கணவரும் சுவேந்திரன் (ஊழியர், ஸ்ரீரங்கன் என்ரப்பிறைஸ், குகன் ஸ்ரோர்ஸ்), விஜேந்திரன், ரவீந்திரன் (பிரான்ஸ்), கலைச்செல்வி (ஜேர்மனி), கஜேந்திரன் (சங்கானை, ப.நோ.கூ. சங்கம்), பரிமளா, ரவீந்திரன் (லக்ஸ்மி ஸ்ரோர்ஸ், அராலி) ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்வராணி, அன்பழகன் (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும் கம்சிகா, கஜானிகா (ஜேர்மனி), அயூன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.04.2009) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ந.ப. 12 மணியளவில் அராலி பூனாவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அராலி மேற்கு,
வட்டுக்கோட்டை.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

வேலன் வடிவேலு



வேலணையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது யாழ்ப்பாணம் 187/21, யூனியன் லேன், ஆஸ்பத்திரி வீதியில் வசித்து வந்தவருமான வேலன் வடிவேலு (23.04.2009) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலன் - றோசம்மா தம்பதியினரின் மூத்த மகனும் காலஞ்சென்ற சின்னத்தம்பி - மாரிமுத்து தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற பாக்கியத்தின் அன்புக் கணவரும் பிரபாகரன், கமலதாசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் துளசி, லலிதா ஆகியோரின் அன்பு மாமனாரும் விதுர், ஷதுர்ஸ்ரிக்கா ஆகியோரின் அன்புப் பேரனும் யோகசிவம், மகேந்திரம், வேந்தனார், திருக்கேதீஸ்வரன், குணபாலன், ஜீவராணி ஆகியோரின் மூத்த சகோதரரும் சறோஜாதேவி, அம்பிகாவதி, சாமேஸ்வரி, நாகேஸ்வரி, சுகந்தினி, முருகையா, கந்தப்பு, கனகசபை, பரமேஸ்வரி, கண்மணி, பராசக்தி, பாக்கியலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும் மணி, அன்னரத்தினம், பரமசாமி, காலஞ்சென்ற சின்னையா, தவேந்திரன் ஆகியோரின் அன்புச் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.04.2009) சனிக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வில்லூன்றி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

187/21, யூனியன் லேன்,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தகவல்:
கமல்தாஸ் (மகன்).

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

எல்லாமே அவசரச் சமையல்தானா?

முல்லைத்தீவில் அரசாங்கத்தின் பாதுகாப்பு வலயத்திலிருந்து ஒரு லட்சத்துக்கும் அதிகமான பொதுமக்கள் வெளியேறிவிட்டதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அங்கு இன்னமும் 15 ஆயிரம் முதல் 20 ஆயிரம் பொதுமக்களே மிகுதியாகத் தங்கியுள்ளதாக இராணுவத் தளபதி கூறியிருக்கிறார்.

ஐக்கிய நாடுகள் சபையும் ஏனைய பல நாடுகளும் கேட்டதற்கு இணங்க 48 மணி நேரத் தாக்குதல் இடைநிறுத்தத்தை (போர் இடைநிறுத்தத்தை) நீடிக்காமலேயே பொதுமக்கள் மிகப் பெரும் எண்ணிக்கையில் வெளியே வந்துவிட்டார்கள் என்று காட்டுவதற்காக ''இயற்றப்பட்ட'' புள்ளி விவரமா இது என்பது தொக்கு நிற்பதைத் தவிர்க்கமுடியவில்லை.

சர்வதேசத்தின் மனிதாபிமானப் ''போர் இடைவெளி'' என்ற கோரிக்கைக்கும், அவ்வாறு ஒரு வசதி செய்யப்படாவிடில் பெரும் மனிதப் பேரவலம் - பேரணர்த்தம் - விளையும் என்ற சர்வதேசத் தொண்டர் நிறுவனங்கள் விடுத்த எச்சரிக்கை குறித்தும் எவரும் அலட்டிக்கொள்ளத் தேவையில்லை என்று வாய்ப் பூட்டுப் போடும் வகையிலும் அரசின் புள்ளிவிவரம் அமைகிறது. நிற்க.

அரசாங்கம் தெரிவித்த புள்ளிவிவரப் பிரகாரம் ஒரு லட்சத்துக்கும் அதிகமான பொதுமக்கள் பாதுகாப்பு வலயத்தில் இருந்து வெளியே வந்துவிட்டார்கள் என்பதால், சர்வதேச தொண்டு நிறுவன அதிகாரிகள் மற்றும் வெளிநாட்டு அரசுகள், அதிகாரிகள் எதிர்வு கூறிய மனிதப் பேரவலம் உருவாகாது என்பது வாதத்துக்கு ஏற்புடைத்தல்ல.

அங்கு எஞ்சியிருப்பவர்கள் 25 ஆயிரம் பேர் என்பதால் இறுதிச் சமரை மேற்கொள்ளலாம் என எண்ணுதல் ஒவ்வாதது. அவ்வாறானால் அத்தனை ஆயிரம் தமிழ் மக்களும் போருக்குள் அகப்பட்டு மடிந்தால் பரவாயில்லை என்ற எண்ணக்கருவுடனேயே கடைசிச் சமர் நடத்தப்படும் என்ற தேற்றம் அமையும்.

அது ஒரு புறமிருக்க -

முல்லைத்தீவு பாதுகாப்பு வலயத்தில் உள்ள பொதுமக்களைக் கூவிக் கூவி அழைத்த, அவர்கள் நலன்புரி நிலையங்களைச் சென்றடைய மனிதாபிமானத்துடனும் சகோதரத்துடனும் உதவிய அரசாங்கம் (களத்தில் நிற்கும் இராணுவத்தினர்), மக்கள் வெளியே வந்ததும் உரிய அவசியத் தேவைகளை வழங்க முன்னேற்பாடு செய்திருக்கவேண்டும். உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு, வெளியே வந்து சேரும் மக்களுக்கு உரிய ஆகக் குறைந்த அத்தியாவசியத் தேவைகளை உடன் நிறைவேற்றுவதற்கான வசதிகளை, முன்னேற்பாடுகளைச் செய்திருக்கவேண்டும். அதற்கான ஒழுங்குகளை, வசதிகளை அவசரகால நடவடிக்கைக்கு உரியதாக முன்கூட்டியே செய்திருக்க வேண்டும்.

இயற்கை அனர்த்தங்களும், மனிதானால் திட்டமிடப்பட்டு உருவாக்கப்படும் அனர்த்தங்களும் திடீரென வருபவை. அவற்றின் பாதக விளைவுகளில் இருந்து பாதுகாக்கத் திட்டங்கள் வகுக்கப்பட்டு, அவற்றை அவசர அவசரமாகச் செயற்படுத்துவது ஏனைய நாடுகளில் வழமை.

இயற்கை திடீரெனச் சீற்றம் கொள்வதை முற்கொண்டு அறிவதற்கான நவீன வசதிகளும் பெருகிவிட்டகாலம் இது. அதனால் முன்னேற்பாட்டு அவசர அத்தியாவசியச் சேவைகளும் தயார் நிலையில் வைக்கப்படுவது அரசாங்கங்களினதும் அமைச்சுக்களினதும் கட்டாயமான பொறுப்பு.

ஆனால் -

முல்லைத்தீவில் அரச பாதுகாப்பு வலயத்தில் இருந்து பொதுமக்கள் வெளியே வருவது - விடுவிக்கப்படாத பகுதியில் இருந்து அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குத் தமிழ் மக்கள் வருவது - என்பது அரசாங்கம் எதிர்பார்த்த ஒன்று. அங்குள்ள மக்களுக்கு உயிர்ச்சேதம் உண்டாக்காமல் அவர்களை வெளியே கொண்டு வருவதற்கான ''அதிசயத்'' திட்டம் - அற்புதத் திட்டம் - ஒன்று தம்மிடம் உண்டு என்று அதிகாரிகளும் அமைச்சர்களும் அந்தச் சொற்ப நாள்களில் பிரசித்தப்படுத்தியதை சர்வதேசமே அறியும்.

அவ்வாறிருக்கையில் -

அரசாங்கத்தை நம்பி, தமது உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு வெளியே வந்த பல்லாயிரக்கணக்கான தமிழ்மக்கள், இப்போது அடிப்படை வசதிகளைப் பெறுவதில் கூட பலப்பல சிரமங்களை அனுபவிக்கிறார்கள் என்ற தகவல்கள் வெளிவந்துகொண்டிருக்கின்றன.

இத்தனை ஆயிரம் பேர் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு வந்தார்கள் என்றால் (அவர்கள் உடுத்த உடைகளுடன் தான் வருவர் என்பது எதிர்பார்க்கப் படவேண்டிய ஒன்று) அவர்களுக்கு உடனுக்குடன் செய்ய வேண்டிய அவசர, அவசிய பணிகள் இனங்காணப்பட்டு வசதிகள் தயார் நிலையில் இருந்திருக்கவேண்டும்.

ஆனால் அரசிடம் அதற்கான நன்கு திட்டமிட்டு வகுக்கப்பட்ட செயல்திட்டங்கள் கைவசம் இருக்கவில்லை. வருமுன் காப்போம் என்ற கோட்பாட்டுக்குப் பதிலாக வந்தபின் பார்ப்போம் என்ற போக்கிலே விடுவிக்கப்படாத பகுதிகளில் இருந்து வந்தவர்களுக்கான சேவைகள் இடம்பெறுவதாகத் தோன்றுகின்றது.

அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு வந்து சேரும் தமிழ்மக்கள் எங்கு அனுப்பப்படவேண்டும், அங்குள்ள அதிகாரிகள் உஷார்ப்படுத்தப்படவேண்டும் என்ற அடிப்படைத் திட்டமிடல் எதுவும் வகுக்கப்பட்டு இருந்ததாகக் கருதமுடியவில்லை. எல்லாமே அவசரச் ''சமையலாகவே'' ஒப்பேறுகிறது!

இதனால், ஏற்கனவே நொந்து நலிந்து அரச பிரதேசத்துக்கு வந்த மக்கள், பல கஷ்டங்களையும் சிரமங்களையும் எதிர்கொள்ள நேரிட்டுள்ளது. இத்தனையும் இவர்கள் தமிழர்கள் என்பதாலா, அல்லது தண்டனைக்கு உட்படுத்தப்படவேண்டியவர்கள் என்ற வகுத்தலுக்குள் அகப்பட்டவர்கள் என்பதாலா....?

அவ்வாறு இல்லையெனில், அரசு உடனடியாக விரைந்து அவர்களுக்குரிய அத்தியாவசிய; அவசியத் தேவைகளை, சேவைகளை உடன் செய்ய முன்வர வேண்டும்.

கோரிக்கைகள் நிறைவேற்றப்படும்வரை உண்ணாநிலைப் போராட்டம் தொடரும்

லண்டனில் பரமேஸ்வரன் உறுதிபடத் தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.25

வன்னியில் உள்ள தமிழ்மக்களை காப்பாற்றுவதற்கான கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத பட்சத்தில் பிரித்தானிய நாடாளுமன்றத்தின் முன்பாக உயிர்விடுவதைத் தவிர வேறு வழியில்லை என்று சாகும்வரை உண்ணாநிலைப் போராட்டத்தை முன்னெடுக்கும் சுப்பிரமணியம் பரமேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

பிரித்தானிய நாடாளுமன்றத்திற்கு முன்பாக 18 ஆவது நாளாக அவர் முன்னெடுத்துவரும் இந்தப் போராட்டத்திற்கு பிரித்தானியாவின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் ஆயிரக்கணக்கான மக்கள் சென்ற வண்ணம் உள்ளனர்.

இந்தப் போராட்டத்தில் கலந்துகொள்வதற்கு எனப் பாடசாலைகளை நேற்று முன்தினம் புறக்கணித்த மாணவர்கள் போராட்டம் முன்னெடுக்கப்படும் பகுதிக்குச் சென்று, ஸ்ரீலங்காவில் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்படுவதைக் கண்டித்து வெள்ளைக் கொடிகளை கைகளில் ஏந்தியவண்ணம் முழக்கங்களை எழுப்பியிருந்தனர். மாணவர்கள் மற்றும் பெண்கள் சிறுவர்கள் எனப் பலரும் அப்பகுதியில் திரண்டவண்ணம் உள்ளனர்.

போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வரும் பகுதிக்கு ஆயிரக்கணக்கான மக்கள் வந்து செல்வதால் காவல்துறையினர் பிரித்தானிய நாடாளுமன்றச் சதுக்கத்தை அவர்களுக்காக ஒதுக்கியிருக்கிறது. முதலில் இந்த சதுக்கத்தில் நிற்பதற்கு காவல்துறை தடைவிதித்திருந்தமை குறிப்படத்தக்கதாகும்.

போராட்டத்தில் கலந்துகொள்ளும் மக்கள் அங்கு உண்ணாநிலைப் போராட்டத்தை முன்னெடுக்கும் பரமேஸ்வரனையும் பார்வையிட்டு வருகின்றனர். சாகும்வரையிலான போராட்டத்தை நிறுத்துமாறு அவர்கள் வேண்டுகோள் விடுத்தபோதும் - தனது கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும் இல்லையேல் பிரித்தானிய நாடாளுமன்றத்தின் முன்பாக உயிர்விடுவதைத் தவிர எனக்கு வேறு வழியில்லை என அவர் உறுதிபடத் தெரிவித்தார்.

இதனால் அங்கு திரண்டுள்ள மக்கள் மத்தியில் ஒருவித பதற்றநிலை ஏற்பட்டுள்ளதுடன் - போரைத் தடுத்து நிறுத்தத் தவறும் பிரித்தானிய அரசாங்கத்தின் மீதும் அவர்கள் தமது விசனத்தை தெரிவித்து வருகின்றனர்.

வவுனியா வந்துள்ள மக்களுக்கு உடனடி உதவியைக் கோருகிறது ஐ.நா.

ஜெனீவா, ஏப்.25

இலங்கையில் மோதல்கள் காரணமாக இடம்பெயர்ந்துள்ள ஆயிரக்கணக்கான பொதுமக்களுக்கு நிவாரணங்களை வழங்க உதவுமாறு ஐக்கிய நாடுகள் சபை அவசர கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

சுமார் 80 ஆயிரம் பேர் மோதல்கள் இடம்பெறும் பகுதியில் இருந்து வவுனியாவுக்கு வந்துள்ளதுடன் மிகவும் களைப்படைந்து, பட்டினியால் வாடும் இவர்களுக்கு உணவு, உடுப்புக்கள், கூடாரங்கள், சுத்தமான குடித்தண்ணீர் வழங்க வேண்டியுள்ளதாக ஐ.நாவின் இலங்கைக்கான மனிதாபிமான பணிகளுக்கான இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

கைக்குழந்தைகள் வயிற்றோட்டத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் சிறுவர்கள், பெண்கள் நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் மாதக்கணக்கில் உடுத்திய உடைகளுடன் காணப்படுகின்றனர் எனவும் ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான மனிதாபிமான பணிகளுக்கான இணைப்பாளர் நீல் பூனே குறிப்பிட்டுள்ளார்.

· மருந்து, குடிதண்ணீர், சுகாதார சௌக்கிய நிலைமைகளை பாதுகாத்தல், போஷாக்கு, கூடாரம் மற்றும் உடுப்புக்கள் வழங்குவதற்கு தமக்கு நிதியுதவிகள் தேவைப்படுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

சிறுவர்களை விரைவில் பாடசாலைகளுக்கு அனுப்பி சாதாரண நிலைமைக்கு அவர்களை கொண்டு வர முயற்சித்து வருவதாகவும் நீல் பூனே கூறியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பு இடம்பெயர்ந்த மக்களுக்காக கடந்த பெப்ரவரி மாதம் 155 மில்லியன் அமெரிக்க டொலர்களை கோரியிருந்தது. எனினும் இதில் மூன்றில் ஒரு பகுதி நிதியே கிடைத்துள்ளது.

இந்த நிலையில் கடந்த திங்கட்கிழமை முதல் 90 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் மோதல் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்துள்ளனர்.

உதவி அமைப்புகள் உடனடியாக தேவைப்படும் பொருள்களை விமானம் மூலம் பிராந்தியத்திற்கு கொண்டு சென்றுள்ளன. மோதல்கள் காரணமாக ஒரு வருடத்திற்கும் மேலாக இந்த மக்கள் தமது வீடுகளில் இருந்து பலவந்தமாக வெளியேறிச் செல்லும் நிலை காணப்பட்டது.

இந்த மக்கள் இவ்வளவு காலம் உயிர்பிழைத்திருந்தது அதிசயமானது எனவும் நீல் பூனே தெரிவித்துள்ளார்.

இடம் பெயர்ந்தோர் நலன்களைக் கவனிக்கும் தலைமை அதிகாரியாக மேஜர் ஜெனரல் சந்திரசிறி

கொழும்பு, ஏப்.25

இடம்பெயர்ந்தோரின் நலன்கள் தொடர்பான நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் தலைமை அதிகாரியாக இராணுவ உயர்மட்ட அதிகாரியான மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறி அவசரகாலச் சட்டத்தின் கீழ் அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டுள்ளார். இவரது மேற்பார்வையின் கீழேயே இடம்பெயர்ந்தோர் தொடர்பான சகல நடவடிக்கைகளும் இனிமேல் மேற்கொள்ளப்படும். இடம்பெயர்ந்தோர் நலன் தொடர்பானநடவடிக்கைளைமேற்கொள்ளும் இணைப்பாளராகவவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுதவிர நிவாரணப் பணிகளை மேலும் இலகுபடுத்தும் நோக்கில் கண்டி, அநுராதபுரம் மற்றும் பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களின் அரசாங்க அதிபர்களும் இணைப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி கண்டி மாவட்ட அரசாங்க அதிபர் கோத்தாபய ஜயரத்ன முகாம்கள் அமைத்தல் மற்றும் தங்குமிட வசதிகளை வழங்குதல் என்பவற்றிக்குப் பொறுப்பாகவும், பொலன்ன றுவை மாவட்ட அரசாங்க அதிபர் டீ.ஏ. லால் விமல் உணவு, சுகாதாரம் மற்றும் பொது வசதிகள் என்பவற்றுக்கும் அநுராதபுர மாவட்ட அரசாங்க அதிபர் எச். எம். கே. ஹேரத் நீர்விநியோகம், மின் சாரம் மற்றும் ஏனைய அடிப்படைவசதிகள் என்பவற்றுக்கும் பொறுப்பாளர்காளக நியமிக்கப்பட்டுள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ள மேஜர் ஜெனரல் சந்திரசிறி யாழ்.மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதியாக பணியாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (50)

மீட்கப்பட்ட மக்களின் சுகாதார வசதி கருதி

1,000 கட்டில்களைக் கொண்ட 2 நடமாடும் வைத்தியசாலைகள்

மீட்கப்பட்ட மக்களுக்கான சுகாதார வசதிகளை மேலும் விஸ்தரிக்கும் வகையில் 1000 கட்டில்களைக் கொண்ட இரண்டு நடமாடும் வைத்தியசாலைகளை அமைக்க தமது அமைச்சு தீர்மானித்துள்ளதாகவும் ஜேர்மன் செஞ்சிலுவைச் சங்கம் ஒரு நடமாடும் வைத்தியசாலையை வழங்க முன்வந்திருப்பதாகவும் சுகாதார அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

கொழும்பு, மகாவலி நிலையத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நேற்று முன்தினம் ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார். அமைச்சர் அங்கு தொடர்ந்தும் குறிப்பிடுகையில்,

மீட்கப்பட்ட மக்களுக்கு உச்ச அளவிலான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

வன்னியிலிருந்து வரும் மக்களுக்கு சுகாதார வசதிகளை அளிப்பதற்காக ஏற்கனவே 300க்கும் அதிகமான மருத்துவர்களும் 550க்கும் அதிகமான தாதிமார்களும் அங்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு மேலதிகமாக வதிவிட மருத்துவர்கள் 200 பேரும் வவுனியாவுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். தேவைப்பட்டால் மேலதிக மருத்துவர்களும் தாதிமார்களும் அங்கு அனுப்பப்படுவார்கள். தப்பி வரும் மக்களுக்கு உதவுவதற்காக அரசாங்கம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உதவிகளைப் பெற்றுக்கொள்வது குறித்து ஆராய்ந்து வருகிறது. அம்மக்களுக்கு உதவ நாட்டு மக்கள் அனைவரும் முன்வர வேண்டும் என்றும் அமைச்சர் வேண்டுகோள் விடுத்தார். (50)

நாளை

சித்திரை 13	26.04.2009
	ஞாயிற்றுக்கிழமை
திதி:	பிரதமை
	மு.ப.08.05 வரை
நட்சத்திரம்:	பரணி
	பி.ப.12.33 வரை
சுபநேரம்:	08.59 - 10.29
ராகுகாலம்:	04.29 - 05.59

காப்புறுதிக் கூட்டுத்தாபனப் பணியாளரை விடுவிக்குமாறு கோரிப் பணிப்புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.25

கடந்த 22ஆம் திகதி காணாமல் போன இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் நாகசெல்வம் இராஜ காந்தனை (வயது 35) விடுவிக்குமாறு கோரி அந்த நிறுவனத்தின் யாழ்ப்பாணம், நெல்லியடிக் கிளைகளில் பணிபுரிகின்ற ஊழியர்கள் நேற்றுப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

இந்தப் பணிப்புறக்கணிப்பால் இரண்டு நிறுவனங்களினதும் பணிகள் நேற்று ஸ்தம்பிதமடைந்தன.

கடந்த 22ஆம்திகதி காலை 9 மணிக்கு வட்டுக்கோட்டையில் உள்ள தனது வீட்டிலிருந்து யாழ்ப்பாணத்திலுள்ள அலுவலகம் நோக்கி மோட்டார்சைக்கிளில் வந்துகொண்டிருந்த போது இவர் காணாமல் போயுள்ளார். காணாமல் போயுள்ள தமது சக ஊழியரான இராஜகாந்தன் விடுவிக்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்தி ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

அவரைக் கண்டுபிடித்து விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று ஊழியர்கள் சார்பாக அனைத்துத் தரப்பினரிடமும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இவர் காணாமல் போனது தொடர்பாக யாழ். இராணுவத் தலைமையகம், பொலிஸ்நிலையம், மனித உரிமை ஆணைக்குழு மற்றும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். அலுவலகம் என்பவற்றுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அவரைக் கண்டுபிடிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (50-9)

ஈராக்கில் தற்கொலைத் தாக்குதல்
76 பேர் பலி; பலர் படுகாயம்

பக்தாத், ஏப். 25

ஈராக்கில் இடம்பெற்ற இரு தற்கொலைக் குண்டுத்தாக்குதல்களில் 76 பேர் பலியாகினர். எண்பதுக்கு மேற்பட்டோர் காயமடைந்தனர். பலியானோரில் பெண்களும் குழந்தைகளும் அடங்குவர் என அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

பகுபாவிலுள்ள உணவகமொன்றில் பெருந்தொகையானோர் இருந்தனர். மக்கள் மத்தியில், தற்கொலைக் குண்டுதாரி தான் மறைத்து வைத்திருந்த குண்டை வெடிக்க வைத்துள்ளார். இதில் 48 பேர் பலியாகியுள்ளனர். 63 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

உயிரிழந்தோரில் பெருந்தொகையானோர் ஈரானிய யாத்திரிகர்களாவர். இவர்கள் ஈராக்கிலுள்ள ஷியா புனித ஸ்தலங்களைத் தரிசிக்க வந்தவர்களாவர். பகுபா ஈராக்கின் வட - கிழக்கே தியலா மாகாணத்தில் அமைந்துள்ளது என ஓரதிகாரி விவரித்தார்.

ஈராக்கின் தலைநகரான பக்தாத்தில் நிவாரண உதவிப் பொருள்களைப் பெறக் கூடியிருந்த மக்கள் மத்தியில் மற்றுமொரு குண்டு வெடித்தது. இதில் 28 பேர் பலியாயினர். இவர்களில் 13 பேர் பொலிஸார். 32 பேர் காயமடைந்தனர் என பக்தாத் அதிகாரியொருவர் குறிப்பிட்டார்.

தலைநகரான பக்தாத்தில் சமீபத்தில் ஷியாக்களுக்கும் ஸுனி முஸ்லிம்களுக்குமிடையே மதக் கலவரங்கள் மூண்டன. இவற்றில் பெருந்தொகையானோர் வீடு வாசல்களை இழந்து அகதிகளானார்கள். இந்த அகதிகளே தங்களுக்கான நிவாரணப் பொருள்களை வாங்கிச் செல்ல இங்கு வந்திருந்தார்கள் என்றும் அவர் கூறினார்.

நிவாரண உதவிப் பொருள்களை விநியோகிக்கும் பணியில், பொலிஸார் ஈடுபட்டிருந்தனர். அப்போது மக்கள் மத்தியில் தற்கொலைக் குண்டுதாரியொருவர் தான் மறைத்து வைத்திருந்த குண்டை வெடிக்கவைத்துள்ளார். இக்குண்டு பயங்கர சத்தத்துடன் வெடித்தது என நேரில் கண்டவர் ஒருவர் தெரிவித்தார்.

குண்டு வெடித்ததும் அப்பகுதியில் கரும்புகை மண்டலம் எழுந்தது. அவலக் குரல்களும், அபயக்குரல்களும் ஒலித்தன. அப்பகுதியில் இரத்த வெள்ளத்தில் மனித அவயவங்கள் சிதறிக் கிடந்தன. காயமடைந்தோர் வேதனையில் துடித்துக்கொண்டிருந்தனர் என்றும் அவர் விளக்கினார்.

பகுபா உணவகத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் உணவகம் தகர்ந்து விட்டது. காயமடைந்தவர்கள் உடனடியாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்கள். தியாலா மாகாண ஆளுநர் அப்துல் நஸீர் அல் - முன்டசேர்பில்லா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டவர்களைப் பார்வையிட்டார்.

ஆளுநர் அப்துல் நஸீர் இச்சம்பவம் குறித்து, ரொய்ட்டர் செய்திச் சேவைக்குக் குறிப்பிடுகையில், ''இது ஒரு கோழைத்தனமான பயங்கரவாதத் தாக்குதல். குண்டு வெடித்த இடத்தையும் பார்வையிட்டேன். இந்த அவலத்தை வார்த்தைகளால் வெளிப்படுத்தி விட முடியாது'' - என்றார்.

பிரிட்டனில் கைது செய்யப்பட்ட 11 பாகிஸ்தானியர் விடுவிப்பு

லண்டன், ஏப். 25

பிரிட்டனில் தீவிரவாதிகளுக்கெதிரான தேடுதல் வேட்டையின்போது கைதான 11 பாகிஸ்தானியர் விடுவிக்கப்பட்டனர். இவர்கள் 22 வயது முதல் 38 வயதுக்கு உட்பட்டவர்களாவர்.

பிரிட்டனில் தீவிரவாதிகள் பரவலாகத் தாக்குதல்கள் நடத்தத் திட்டமிட்டு அதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார்கள் என்ற இரகசியத் தகவல் வெளியாகியது. இதையடுத்து, இத்தேடுதல் வேட்டை மேற்கொள்ளப்பட்டது.

லிவர்பூல், மென்செஸ்டர், கிளித்தோர், லங்காஷைர் ஆகிய இடங்களில் இத் தேடுதல் வேட்டை மேற்கொள்ளப்பட்டது. இதில் இந்த 11 பேரும் கைதானார்கள்.

இவர்கள் அனைவரும் தடுத்து வைக்கப்பட்டு, தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். எனினும், தீவிரவாத நடவடிக்கைகளில் இவர்கள் தொடர்புடையவர்கள் என்பதை நிரூபிக்க எந்த ஆதாரமும் கிடைக்கவில்லை. அதனால் இவர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள்.

தாய்லாந்து தலைநகரில் அவசரகால நிலை நீக்கம்

பாங்கொக், ஏப். 25

தாய்லாந்தின் தலைநகரான பங்கொக்கில், இரு வாரங்களுக்கு முன்னர் பிறப்பிக்கப்பட்ட அவசரகால நிலை, பிரதமர் அஜித் விஜேஜீவாவால் நீக்கப்பட்டது. எனினும், தலைநகரிலும் புறநகர்ப் பகுதிகளிலும் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

தலைநகரான பாங்கொக்கில், இரு வாரங்களுக்கு முன்னர், எதிரணியினர் அரசுக்கு எதிரான தொடர்ப் போராட்டங்களை நடத்தி வந்தனர். ஆர்ப்பாட்டக் காரர்களுக்கும், பொலிஸாருக்குமிடையே மூண்ட மோதல்களில் இருவர் கொல்லப்பட்டனர். நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

அச்சமயம் பாங்கொக்கில் ஆரம்பமான பிராந்திய உச்சி மாநாடும் இந்த ஆர்ப்பாட்டங்களால் தடைப்பட்டது.

மாநாட்டு மண்டபத்துக்கு வெளியேயும் ஆர்ப்பாட்டக்காரர்கள் திரண்டு ஆட்சேபப் போராட்டம் நடத்தினார்கள். இதையடுத்து, மாநாடும் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டது.

பாங்கொக்கில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட சிவப்பு ஷேர்ட் அணிந்த ஆர்ப்பாட்டக்காரர்கள், பிரதமர் அஜித் விஜேஜீவாவை பதவி விலகுமாறு கோரிக்கை விடுத்தார்கள். அமைச்சரவையும் கலைக்கப்பட்டு, தேர்தல்கள் நடத்தப்பட வேண்டுமென்றும் கோரிக்கை விடுத்தார்கள். இவர்கள் முன்னாள் பிரதமர் தக்சின் சினவத்ராவின் ஆதரவாளர்களாவர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் வீதிமறியல் போராட்டத்தில் ஈடுபட்டார்கள். போக்குவரத்துகளைத் தடுத்தார்கள். பொலிஸாருடனும், தம்மை எதிர்த்த உள்ளூர் குடியிருப்பாளர்களுடனும் கைகலப்பில் ஈடுபட்டார்கள். இதையடுத்து,பிரதமரால் அவசரகால நிலை பிரகடனம் செய்யப்பட்டது.

உலக அரங்கில்

பாக். புனோ மாவட்டத்தில் பொலிஸார் மீது தாக்குதல்
தலிபான்கள் கைவரிசை

இஸ்லாமாபாத், ஏப். 25

பாகிஸ்தானின் பிரச்சினை மிகுந்த ஸ்வாட் பள்ளத்தாக்குக்கு அடுத்த மாவட்டமான புனோ மாவட்டத்தில் பொலிஸார் மீது தலிபான் தீவிரவாதிகள் மேற்கொண்ட தாக்குதலில் ஒரு பொலிஸார் கொல்லப்பட்டார். தலைநகர் இஸ்லாமாபாத்திலிருந்து நூறு கிலோ மீற்றர் தூரத்தில் இந்த புனோ மாவட்டம் உள்ளது.

ஸ்வாட் பள்ளத்தாக்குப் பகுதியில் தலிபான் கிளர்ச்சியாளர்களை பாதுகாப்புப் படைகளால் கட்டுப்படுத்த முடியவில்லை. அதனால் அங்கு இஸ்லாமிய சட்டமான ஷரியாவை நடைமுறைப்படுத்த பாகிஸ்தான் அரசு உடன்பட்டது. இதையடுத்து, தலிபான் தீவிரவாதிகளுக்கும் பாகிஸ்தான் அரசுக்குமிடையிலான சமாதான உடன்படிக்கை கைச்சாத்தானது.

இந்நடவடிக்கையின் விளைவாக ஸ்வாட் பள்ளத்தாக்கைக் களமாகக் கொண்டு ஆயுததாரிகள் மேலும் பல பகுதிகளை கைப்பற்ற முயலுவார்கள் என விமர்சகர்கள் எச்சரித்திருந்தார்கள் என இஸ்லாமாபாத்திலுள்ள பிபிஸியின் செய்தியாளர் கூறுகிறார்.

இதனிடையே அமெரிக்காவின் தூதர் அட்மிரல் மைக் முல்லன் மூத்த பாகிஸ்தானிய இராணுவ அதிகாரிகளுடன் பேச்சுகளை நடத்தியுள்ளார். ஸ்வாட் பகுதி நிலைவரத்தை பாகிஸ்தான் அரசு கையாண்ட விதம் குறித்து அமெரிக்கா கடுமையாக விமர்சித்து வந்துள்ளது.

பாக். பிரதமரை கொல்லச் சதி

இஸ்லாமாபாத், ஏப். 25

பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரஜா கிலானியை கொல்லத்தீவிரவாத அமைப்புகள் சதித்திட்டம் தீட்டியுள்ளன என்று பாகிஸ் தான் உளவு அமைப்பு தெரிவித்துள்ளது.

லாகூர், முல்தான், இஸ்லாமாபாத் ஆகிய நகரங்களில் ஏதாவது ஒரு நகரில் அவரை மனித குண்டு மூலம் கொல்லத் தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளனர் என்றும் அது குறிப்பிட்டுள்ளது.

அமெரிக்க தென் கரோலினா மாநிலத்தில் துரிதமாகப் பரவிவரும் காட்டுத் தீயை கட்டுப்படுத்தும் பணியில் தீயணைப்புப் படையினர் ஈடுபட்டுள்ளனர். ஒரு தீயணைப்புப் படை வீரர் பரவி வரும்தீயை அவதானிப்பதைப் படத்தில் காணலாம்.

அமெ. ஊடகவியலாளர்கள் வடகொரியாவில் கைது

வாஷிங்டன், ஏப். 25

வடகொரியாவில் இரு அமெரிக்க ஊடகவியலாளர்கள் கைது செய்யப்பட்டார்கள். சீனாவுடன் ஒட்டிய வட கொரிய எல்லையில் கைது செய்யப்பட்ட இவ்விருவரும் விசாரணைக்கு உட்படுத்தப்படவுள்ளார்கள் என வட கொரிய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இவ்விரு ஊடகவியலாளர்களில் ஒருவரான யூனா லீ, ஒரு கொரிய - அமெரிக்கர். மற்றவரான லோரா லிங் ஒரு சீன - அமெரிக்கர். இவ்விருவரும் தொலைக்காட்சி ஊடகவியலாளர்களாகப் பணியாற்றி வருபவர்கள்.

''இவ்விரு பெண் ஊழியர்களும் சட்ட விரோதமாக சீன எல்லையிலிருந்து வட - கொரியாவுக்குள் நுழைந்துள்ளார்கள். தற்போது இவர்கள் பூர்வாங்க விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள். பின்னர் இவர்கள் மீதான குற்றச்சாட்டுகள் சுமத்தப்படும்'' என வட கொரியா தெரிவித்துள்ளது.

இந்தியாவில் கைதான பாகிஸ்தானியர் பொலிஸ் காவலிலிருந்து தப்பி ஓட்டம்!

தவ்சா, ஏப். 25

இந்தியாவின் உத்தர பிரதேச மாநிலத்தின் தலைநகரான லக்னோவிலுள்ள நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்லப்பட்ட இரு பாகிஸ்தானியர் பொலிஸ் காவலிலிருந்து தப்பியோடி விட்டனர்.

குஜராத் மாநில ராஜ்காட்டில் போலி கடவுச்சீட்டுடன் வசித்து வந்த 2 பாகிஸ்தானியர்களைக் குஜராத் மாநில பொலிஸா பிடித்து விசாரணை நடத்தினர். இவ்விசாரணையின் போது பெற்ற வாக்குமூலத்தை அடிப்படையாகக் கொண்டு உத்தரப் பிரதேச மாநிலத் தலைநகரான லக்னோவில் இவர்களுக்குத் தொடர்பு இருக்கலாம் என்ற சந்தேகம் பொலிஸாருக்கு ஏற்பட்டது.

இது குறித்து விசாரணை நடத்த அந்த 2 கைதிகளையும் குஜராத் மாநில ஒரு பொலிஸ் உப அதிகாரியும், 6 பொலிஸாரும் லக்னோவுக்கு ஜீப்பில் ஏற்றிக்கொண்டு வந்தனர். ராஜஸ்தான் மாநிலம் வழியர்க அவர்கள் வரும்போது மினசிம்லா என்ற கிராமத்திற்கு அருகே அந்த 2 பாகிஸ்தான் கைதிகளும் தாங்கள் மலசலம் கழிக்க வேண்டியுள்ளது என தெரிவித்திருக்கிறார்கள்.

இதை நம்பிய பொலிஸார் அந்த 2 கைதிகளையும் ஜீப்பிலிருந்து இறக்கி, ''போய்விட்டு வாருங்கள்'' என்று கூறியுள்ளனர்.அவ்வளவுதான் ஜீப்பிலிருந்து இறங்கிய அந்த இரண்டு கைதிகளும் கைகளில் மாட்டப்பட்ட விலங்குகளுடன் தப்பியோடி தலைமறைவாகிவிட்டனர். தப்பியோடிய அவர்களை பொலிஸார் தேடி வருகின்றனர்.

பொக்கணை நன்னீர் கிணற்றிலிருந்து வலிகாமம் மேற்குப் பகுதிக்கு குடிதண்ணீர்

விரைவில் ஆரம்பிக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.25

தண்ணீர் மட்டம் குறையாத பொக்கணை நன்னீர் கிணற்றில் இருந்து வலிகாமம் மேற்கு பகுதிக்கு குடி தண்ணீர் விநியோகிக்கும் திட்டம் விரைவில் ஆரம்பிக்கப் படவுள்ளது.

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் அதிகாரி ஒருவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

இந்தக் குடிதண்ணீர் விநியோகத்திற்காக பொக்கணை கிணறு புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது.

இக் கிணற்றில் இருந்து நிலத்தடிக் குழாய் மூலம் சுன்னாகத்தில் உள்ள குடிதண்ணீர் தாங்கிக்கு தண்ணீர் நிரப்பட்டு அங்கிருந்து குழாய் வசதி மூலம் குடிதண்ணீர் வழங்கும் பணியினை மேற்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

குழாய் வசதி மூலம் குடி தண்ணீர் சங்குவேலி ஊடாக கட்டுடை மற்றும் மானிப்பாய் பிர தேசங்களுக்கு விநியோகிக்கவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (50-9-224)

புதிய நிர்வாகிகள் தெரிவு

யாழ்ப்பாணம், ஏப்.25

சாவகச்சேரி சங்கத்தானை குமரன் சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கத்தின் பொதுக்கூட்டம் அண்மையில் சங்கத்தானை இத்தியடிப் பிள்ளையார் ஆலய மண்டபத்தில் நடைபெற்றது.

கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் செல்வி மாலினி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் சங்கத்தின் தலைவராக இளைப்பாறிய அதிபர் செ.சுப்பிரமணியம், செயலாளராக ஆ.இராசபானு, பொருளாளராக க.செல்வராசா ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாக மேலும் நால்வர் தெரிவு செய்யப்பட்டனர்.(50-207)



நல்லூர் கொண்டலடி வைரவர் சுவாமி ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா கடந்த 16 ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெற்று வருகின்றது.

நேற்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழா நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தத் திருவிழா நடைபெறவுள்ளது. (201)

* * *

அரியாலை தூய யூதா ததேயு யாத்திரைத் தலத்திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்படவுள்ளது. மேற்படி திருவிழாவுக்கான இறுதி ஆயத்த நாளாகிய இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு செபமாலையுடன் நற்கருணை வழிபாடு ஆரம்பமாகவுள்ளது.

இதேவேளை திருநாள் திருப்பலி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

* * *

வல்வை ஸ்ரீமுத்துமாரி அம்பாள் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா இன்று சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

இதில் அடுத்த மாதம் 25 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (9-253)

இந்துமகளிர் கல்லூரியில் ஆங்கிலப் பாசறை

யாழ்ப்பாணம், ஏப்.25

யாழ்.இந்துமகளிர் கல்லூரியில் ஏற்கனவே தீர்மானித்தபடி நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 8 மணிக்கு ஆங்கில பாசறை நடைபெறவுள்ளதால் தரம் 10, 11இல் கல்வி கற்கும் அனைத்து மாணவர்களையும், ஆசிரியர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இதேவேளை வலயமட்ட மெய்வன்மைப் போட்டிகள் திட்டமிட்டபடி எதிர்வரும் 28, 29, 30ஆம் திகதிகளில் நடை பெறவுள்ளதால் பங்குபற்றும் மாண வர்கள் அனைவரையும் திங்கட்கிழமை தவறாது பாடசாலைக்கு சமுகமளிக்குமாறு மேற்படி கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார். (50-201)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

கைதடிப் பகுதியில் சட்டவிரோத மது விற்பனை

நாவற்குழி, ஏப்.25

கைதடிப் பகுதியிலுள்ள சில பிரதேசங்களில் சட்டவிரோத மதுபான விற்பனை தீவிரமாக நடைபெற்று வருவதாகவும் இதனால் தாம் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்வதாகவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சட்டவிரோத மதுபான விற்பனையினால் தினமும் சண்டை சச்சரவுகள் நடைபெறுவதுடன் வீதியால் செல்லும் பொதுமக்களும் மாணவர்களும் மிகவும் பாதிக்கப்படுவதாகவும் கூறப்படுகின்றது.

இதனை நிறுத்துவதற்கு அப்பகுதிக் கிராம சேவையாளர்கள் உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (50-288)

கமநல சேவை நிலையங்களில் உரங்களின் விலைகள் குறைப்பு

யாழ்ப்பாணம், ஏப்ரல், 25

யாழ்.குடாநாட்டுக் கமநல சேவை விற்பனை நிலையங்களில் யூரியா, அமோனியா ஆகிய உர வகைகளின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளதாகக் கமநல சேவைத் திணைக்களத்தினரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

விலை குறைப்பைத் தொடர்ந்து அமோனியா ஒரு பை 2 ஆயிரத்து 500 ரூபாவாகவும் யூரியா ஒரு பை 3 ஆயிரத்தி 750 ரூபாவாகவும் தற்போது விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

விலைக் குறைப்புக்கு முன்னர் யாழ். குடாநாட்டில் இந்த உர வகைகள் கமத்தொழில் திணைக்களத்தின் விலையிலும் பார்க்க குறைந்த விலையில் தனியார் வர்த்தக நிலையங்களில் பெறக் கூடியதாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

யூரியா, அமோனியா போன்ற உர வகைகளின் விலைகள் குறைக்கபட்டமையை விவசாயிகள் வரவேற்றுள்ளார்கள். (50-9-68)

இசை நாடக நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஏப்.25

பாஷையூர் புனித அந்தோனியார் சன சமூக நிலையத்தின் ஏற்பாட்டில் மதுர கவிப் புலவர் அமரர் நீ.மிக்கோர்சிங்கம் அவர்களால் எழுதப்பட்ட ''பரமபிதாவின் பத்துக் கட்டளைகள்'' என்னும் இசை நாடக நூல் வெளியீட்டு விழா இன்ற சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு பாஷையூர் புனித அந்தோனியார் மகளிர் வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய பங்குத்தந்தை அருட் திரு.யாவீஸ் அடிகள் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராசா பிரதம விருந்தினராகவும், யாழ்ப்பாணப் பிரதேச செயலர் மரியதாசன் ஜெகு சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக் கழக கிறிஸ்தவ நாகரிகத்துறை தலைவர் அருட்கலாநிதி ஞா.பிலேந்திரன் அடிகளாரும், நூல் ஆய்வுரையை திருமறைக் கலாமன்ற பிரதி இயக்குநர் யோ.யோண்சன் ராஜ்குமாரும் நிகழ்த்தவுள்ளனர். (50-9)

தந்தை செல்வநாயகத்தின் 32ஆவது நினைவுநாள் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப்.25

தந்தை செல்வநாயகத்தின் 32ஆவது நினைவு நாள் அஞ்சலி நிகழ்வுகள் நாளை ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யாழ்.தந்தை செல்வா நினைவிடத்தில் நடைபெறவுள்ளது.

தந்தை செல்வா அறங்காவலர் குழுவின் தலைவர் அருட் கலாநிதி சு.ஜெபநேசன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெறும்.

இந்த நிகழ்வில் பட்டப்படிப்புகள் பீட பீடாதிபதி பேராசிரியர் ச.சத்தியசீலன் வரவேற்புரையையும் மௌலவி முகமட் பாஹிர், வண.பிதா எம்.வி.இ. இரவிச் சந்திரன், ஸ்ரீலஸ்ரீசோமசுந்தர தேசிகஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஆகியோர் அஞ்சலி உரையையும் நிகழ்த்துவார்கள். (204-224)

கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வியில் கூட்டுறவு விற்பனை நிலையம் திறப்பு

யாழ்ப்பாணம், ஏப்ரல், 25

கொடிகாமம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில் தங்கியிருக்கும் இடம் பெயர்ந்த மக்களின் அத்தியாவசிய தேவை கருதி விசேட கூட்டுறவு விற்பனை நிலையம் ஒன்றைத் திறந்து வைத்துள்ளதாகச் சங்கத்தின் பொது முகாமையாளர் எஸ்.தேவக்குமார் தெரிவித்தார்.

இந்த விற்பனை நிலையம் கடந்த திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டது என்றும் ஏற்கனவே நாவலடி மற்றும் மிருசுவில் ஆகிய நலன்புரி நிலையங்களில் இரண்டு விற்பனை நிலையங்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன எனவும் அவர் மேலும் கூறினார். (50-224)

சைவசமய அறிவுப் பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம், ஏப்.25

வண்ணை ஸ்ரீஅரசடி விநாயகர் ஆலயத்தில் வருடாந்தம் நடைபெறும் சைவ சமய அறிவுப் பரீட்சை தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது.

இந்தப் பரீட்சை தொடர்பான மேலதிக விவரங்கள், தெரிவு நடைபெறும் நாள், விண்ணப்ப முடிவு நாள் என்பன பின்னர் அறிவிக்கப்படும் எனக் கூறப்பட்டுள்ளது. (204)

சந்நிதியான் ஆச்சிரமத்தில் இலவச மருத்துவ சேவை

கரவெட்டி, ஏப்.25

தொண்டைமானாறு செல்வச்சந்நிதியான் ஆச்சரமத்தில் வாரத்தில் இருநாள்கள் இலவச மருத்துவ சேவை நடைபெற்று வருகின்றது.

வாரந்தோறும் ஞாயிறு, புதன் ஆகிய நாள்களில் இச்சேவை நடைபெற்று வருகிறது.

நூற்றுக்கணக்கான பொதுமக்கள் இந்த மருத்துவ சேவை ஊடாகப் பயன் பெற்று வருகின்றனர். (50-9-70)

மிருதங்க அரங்கேற்றம்

யாழ்ப்பாணம், ஏப்.25

திருமறைக் கலாமன்றக் கலைஞரும் யாழ். பல்கலைக்கழக இசைத்துறை மிருதங்க விரிவுரையாளர் ஞான லயஞான வாரிதி திரு.சி.மகேந்திரனின் மாணவனுமான இரத்தினசிங்கம் ஜெயகாந்தனின் மிருதங்க அரங்கேற்றம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

திருமறைக் கலாமன்ற இயக்குநர் பேராசிரியர் அருட் கலாநிதி நீ.மரியசேவியர் அடிகளாரின் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமான பொ.பாலசுந்தரம்பிள்ளை அவரது பாரியார் திருமதி இராசலட்சுமி பாலசுந்தரம்பிள்ளை ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினராக யாழ்.மறைமாவட்ட குரு முதல்வர் அருட்கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளாரும், சிறப்பு விருந்தினர்களாக பேராசிரியர் இரா.சிவச்சந்திரன், யாழ்.பல்கலைக்கழக இசைத் துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி நா.வி.மு.நவரத்தினம், தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன், யாழ்.பிரதேச செயலர் மரியதாசன் ஜெகு ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (50-9)

தென்மராட்சி அதிபர்களுக்கு அவசர கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஏப்.25

தென்மராட்சிக் கல்விவலய பாடசாலை அதிபர்களுக்கான அவசரக் கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் சகல அதிபர்களையும் தவறாது கலந்துகொள்ளும்படி தென்மராட்சிக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (204-59)

இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் ஒய்வூதியத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் அதிக பங்களிப்பு வழங்கியவர்களுக்கான பரிசளிப்பு விழா அண்மையில் யாழ்.செயலகத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.

நிகழ்வில் யாழ்.மாவட்டத்தில் முதலாம் இடத்தைக் கரவெட்டிப் பிரதேச செயலகம் பெற்றுக்கொண்டது. அதற்கான சான்றிதழையும் வெற்றிக் கேடயத்தையும் யாழ்.அரச அதிபர் க.கணேஷ் கரவெட்டிப் பிரதேச செயலர் சி.சத்தியசீலனுக்கு வழங்குவதை முதலாவது படத்திலும், கரவெட்டிப் பிரதேச செயலக பரிசுபெற்ற [illegible] பிரதேச செயலாளர் சி.சத்தியசீலன், யாழ்.அரச அதிபர் க.கணேஷ் ஆகியோர் நிற்பதை அடுத்துள்ள படத்திலும் காணலாம். *(படம்:சுந்தா)*

31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

பூவுலகில்:
13.06.1945

விண்ணுலுகில்:
27.03.2009



அமரர் செல்லத்துரை அம்பிகைபாலன்

கடந்த (27.03.2009) அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (25.04.2009) சனிக்கிழமை மு.ப.11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளன. அதனைத் தொடர்ந்து இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
சுரேஸ்குமார் (மகன்),
சசீந்திரன் (மகன்),
குடும்பத்தினர்.

பொ.பரமேஸ்வரன்
இல.11, கன்னார லேன்,
நல்லூர், யாழ்ப்பாணம்.

புதிய நிர்வாகசபை தெரிவு

நாவற்குழி • ஏப்,25

பண்டத்தரிப்பு வடலியடைப்பு கலைவாணி சன சமூக நிலையத்தின் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் கடந்த 19 ஆம் திகதி நடைபெற்றது.

இவ்வாண்டுக்கான நிலையத் தலைவராக அருள்நேசராசாவும், செயலாளராக சுதர்சனும் பொருளாளராக செல்வி. சிமீன லக்சுமியும் தெரிவு செய்யப்பட்டனர்.

(50- 288)

கண்ணீர் அஞ்சலி

தோற்றம்	மறைவு
08	23
✸	✸
02	04
✸	✸
1917	2009

கோபாலு குமாரவேலு

(ஓய்வுபெற்ற இலங்கை உள்ளூராட்சி ஆய்வு உத்தியோகத்தர்)

புலோலி கிழக்கு ஞானசம்பந்தர் கலை மன்றத்தின் ஸ்தாபகரும் முன்னைநாள் தலைவருமான கோபாலு குமாரவேலு 23.04.2009 அன்று அவுஸ்திரேலியாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல முதல்வி அம்மனை பிரார்த்திக்கிறோம்.

புலோலி கிழக்கு,
பருத்தித்துறை.

நிர்வாகம்
ஞானசம்பந்தர் கலைமன்றம்.

கண்ணீர் அஞ்சலி

யாழ்.மாவட்ட செயலக புனர்வாழ்வு
புனரமைப்பு செயலகத்தில்
கணக்காளராகக் கடமையாற்றும்
ச.குகதாஸ் அவர்களின் தந்தை

அமரர்
குமாரவேலு சண்முகநாதன்

அவர்கள் 21.04.2009 அன்று
இறைபதம் அடைந்தமையையிட்டு
துயருற்றிருக்கும் அன்னாரது
குடும்பத்தினருக்கு ஆழ்ந்த
அனுதாபங்களைத்
தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இருபாலை சந்தி
கோப்பாய்.

A.M.T.உரிமையாளரும்,
ஊழியர்களும்.

(84687)

சிறி நதியா
நகை மாளிகை

அட்சய திருதியை

27.04.2009 திங்கட்கிழமை அன்று
தங்கப்பவுண் வாங்கும் விசேட தினமாகும்.
அன்றைய தினம் தங்கநகைகள்
வாங்கும் வாடிக்கையாளர்களுக்கு
எமது நிறுவனங்களில் விசேடமாக
அன்பளிப்புகள் வழங்கப்படும் என்பதை
மிகவும் மகிழ்ச்சியுடன் அறியத்
தருகின்றோம்.

அழகிற்கு அழகு செய்யும் தங்க நகைகளுக்கு

சிறி நதியா நகை மாளிகை

01, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே - 021 2222709

கிளை
56, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே - 021 2226744

யாழ்ப்பாணத்தில் மலேரியா நோயின் தாக்கம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது

இரண்டாவது உலக மலேரியா தினம் இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 25ஆம் திகதி அனுசரிக்கப்படுகிறது. உலகளாவிய ரீதியில் மக்கள் மத்தியில் மலேரியா நோய் தொடர்பில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் நோக்கில் இத்தினம் அனுசரிக்கப்படுகிறது. அதனையொட்டி இக் கட்டுரை பிரசுரமாகிறது.

யாழ்ப்பாணத்தின் மலேரியா நோய் நிலைமை அண்மைக் காலமாக கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

இதனைக் கடந்த சில ஆண்டுகளில் இலங்கை மற்றும் யாழ்ப்பாணத்தில் மலேரியா நோயின் தாக்கம் தொடர்பான விவரங்களுடன் கீழே தரப்பட்டுள்ள புள்ளி விவர அட்டவணையிலிருந்து விளங்கிக் கொள்ள முடியும்.

ஆண்டு	யாழ்ப்பாணம்	இலங்கை
1998	47802	211691
1999	32915	264549
2000	7242	210039
2001	1365	66522
2002	1829	41411
2003	413	10510
2004	45	3709
2005	22	1670
2006	02	590
2007	00	198
2008	04	670

கடந்த ஆண்டுகளில் பலருடைய ஒத்துழைப்போடு குறிப்பாக மலேரியா தடை இயக்கப் பணிப்பாளர், மலேரியா தடை இயக்கப் பணிப்பாளர் பணிமனையைச் சார்ந்த உத்தியோகத்தர்கள், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையைச் சார்ந்த உத்தியோகத்தர்கள், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை உத்தியோகத்தர்கள் அத்துடன் யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், பணிமனையின் மலேரியா தடைப்பகுதி உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் அனைவரதும் அயராத முயற்சியினாலும் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள், பொதுமக்களின் ஒத்துழைப்பினாலும் இந்த நிலைமையை அடைய முடிந்துள்ளது. இதற்கு அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் மலேரியா நோயினைத் தொடர்ந்தும் கட்டுப்பாட்டினுள் வைத்துக்கொள்வதற்கு அனைவரும் தமது பொறுப்பினையுணர்ந்து செயற்படவேண்டியது அவசியமாகும். அத்துடன் மலேரியா நோய் தொடர்பில் அனைவரும் விழிப்புணர்வுடனும் பொறுப்புணர்ச்சியுடனும் செயற்படும்போது எமது மாவட்டத்தை மட்டுமன்றி எமது மாகாணத்தை மற்றும் ஒட்டுமொத்த இலங்கையையும் மலேரியா அற்ற பிரதேசமாக மாற்ற அனைவரும் ஒன்றிணைவோம்.

வைத்திய கலாநிதி க.தா.சிவபாதம்,
பிராந்திய மலேரியாத் தடை இயக்க வைத்திய அதிகாரி,
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,
யாழ்ப்பாணம்.

மக்கள் முகம்

வேலணை கிழக்கைச் சேர்ந்த சண்முகரெத்தினம் சண்முகதாசன் அண்மையில் சமாதான நீதிவானாக வவுனியா மாவட்ட நீதிபதி எம்.இளஞ்செழியன் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

வேலணை மத்திய கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரி என்பவற்றின் பழைய மாணவரான இவர் கணக்கியலும் நிதியியலிலும் இளமாணிப் பட்டத்தை முதலாம் வகுப்பில் பெற்றதோடு வியாபார முகாமைத்துவத்தில் முதுமாணிப் பட்டத்தையும் பெற்றவர். தற்போது கொழும்புப் பல்கலைக்கழகத்தில் நூலகமும் தகவல் விஞ்ஞானத்தில் முதுமாணிப் பட்டப் படிப்பை மேற்கொண்டு வரும் இவர் இலங்கை கணக்கியல் தொழில்நுட்பவியலாளர் கழகத்தின் ஆயுட்கால உறுப்பினருமாவார்.

சிறந்த சமூகசேவையாளரான இவர் பல்வேறு பொது அமைப்புகளிலும் பதவி வகித்து வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (95)

குடாநாட்டில் 4ஆயிரத்து 631 சிறுவர்கள் கடந்த ஆண்டு தந்தைமாரை. இழந்துள்ளனர்

யாழ்ப்பாணம்,ஏப்.25

யாழ்.மாவட்டத்தில் கடந்த ஆண்டு 4ஆயிரத்து 631 சிறுவர்கள் தந்தைமாரை இழந்துள்ளதாக மாவட்ட சிறுவர் அபிவிருத்தி அலுவலகத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் இடம்பெற்று வருகின்ற அசாதாரண சூழ்நிலை மற்றும் நோய்வாய்ப்பட்டோர் எனப் பல்வேறு காரணங்களால் இந்தச் சிறுவர்கள் தந்தையை இழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தந்தையை இழந்த சிறுவர்களின் விவரம் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:

யாழ்ப்பாணம் - 616, நல்லூர் - 460, கோப்பாய் - 461, கரவெட்டி - 228, சண்டிலிப்பாய் - 560, சங்கானை - 451, சாவகச்சேரி - 516, தெல்லிப்பழை -235, பருத்தித்துறை - 287, உடுவில் - 290, வேலணை - 130, நெடுந்தீவு - 74, காரைநகர் - 147, ஊர்காவற்றுறை - 152, மருதங்கேணி - 24. (50-9)

நெல்லியடி பஸ் நிலையம் வர்ணம் பூசி புதுப்பொலிவுடன்

வடமராட்சி, ஏப்.25

நெல்லியடி மத்திய பஸ் நிலையத்தில் உள்ள பயணிகள் தங்கி நிற்கும் கட்டடத் தொகுதி வர்ணம் பூசப்பட்டு புதுப்பொலிவுடன் காணப்படுகின்றது.

ஹற்றன் நஷனல் வங்கியின் நெல்லியடிக் கிளையின் ஆண்டு நிறைவை ஒட்டி அந்த வங்கிக்கிளை தனது செலவில் பஸ் நிலையக் கட்டடத்திற்கு வர்ணம் பூசி மெருகூட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (9-236)

நீத்தார் நயப்புரை

வட்டு.இந்துவின் நின்று நிலைத்த ஒளிர்மிகு ஒருவர்

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் ஆசிரியர் குமாரசுவாமி சிவசுப்பிரமணியம் ஆசானாக இருந்த காலம் 38 வருடம். பிறந்த இடம் சிங்கப்பூர். வாழ்ந்த இடம் மூளாய் வீதி, வட்டுக்கோட்டை உடுக்கிவளைப் பிள்ளையார் கோயில் முன்றில். பிற்காலத்தில் கொழும்பு தெஹிவளையில் வாழ்ந்தார்.

வட்டு.இந்துக் கல்லூரியின் பெரும் பெயர் ஆசான்களில் சிறப்பானவர். எக்காலத்திலும் அவர் ஞாபகம் மாணவர் சந்ததியினால் நிலைத்து நின்று போற்றுவதற்குரியதாகும். தன் வாழ்நாளில் மாணவர்களை நன்னெறிப்படுத்தி மேம்பாடடையச் செய்த பண்பாளர். எந்நிலை மாணவர்களையும் முன்னிலைப்படுத்தி முதல் நிலைக்கு இட்டுச் சென்ற செம்மல். ஆசிரிய இலக்கணத்திற்கு அருங்கலமாகத் திகழ்ந்தவர்.

பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியராக மிளிர்ந்தவர். ஆங்கிலம் போதிக்கும் ஆசிரியனாக இருந்ததுடன் சுகாதாரம், சைவ சமயம் இவற்றையும் பெரு விருப்புடன் மாணவர்களைக் கவரும்படி போதிப்பார். இப்பாடங்கள் இவருக்குக் கைவந்த கலை எனலாம். வகுப்பறைக்கு வரும் போது முகமலர்ச்சியுடன் வந்து பாடங்களைப் போதித்து, முகமலர்ச்சியுடன் செல்வார். தலை, இடை, கடை மாணாக்கர் என்ற பேதம் பாராட்டாத பண்பாளர். ஐயம் திரிபறக் கற்றுக்கொடுத்த ஆசான். எவ்வகை வினாக்களைக் கேட்டாலும் முனியாது முகமலர்ச்சியுடன் உத்தரம் தரும் உத்தமர். ஒழுக்க விழுமியங்களில் மிகவும் கண்டிப்பானவர். சைவசமயம் கற்பித்ததினால் தானே முன்னோடியாக இருந்தும், வாழ்ந்தும் காட்டிய செம்மல். தூய வெண்ணிற அடையணிந்து காட்சிக்கு எளிமையானவர். உள்ளமும் உட்லும் பரிசுத்தமான பண்பாளர். ஏறக்குறைய நாற்பது வருடச் சேவையில் மூன்று தலைமுறையினருக்குக் கற்றுக்கொடுத்த பழமரம். பல்வகைத் துறைகளிலும் பெரும் பதவிகளையும் பொறுப்புகளையும் வகித்து கல்லூரிக்கும் ஊருக்கும் புகழ் தேடிக் கொடுத்தார்கள் அம்மாணவர்கள். இன்றும் இம்மாணவ சந்ததியினரில் பலர் பல்வேறு அந்நிய நாடுகளில் சிறப்பாக வாழ்கின்றார்கள். தாம் பிறந்த ஊரையும் வளம் படுத்துகிறார்கள்.

வட்டுக்கோட்டை கோயிற்பற்றில் உள்ள கோயில்களில் சமயப் பிரசங்கங்களை ஆற்றி மக்களை நன்னெறிப்படுத்திய மகான். தனது கிராமத்திலுள்ள கோயில் பரிபாலன சபைகளில் போசகராகவும் ஆயுள்கால அங்கத்தவராகவும் இருந்து அரிய அறப்பணிகளை வளர்த்தவர். தேர்த் திருவிழாக் காலங்களில் முன்னின்று எல்லோரும் உலாக் காட்சியைக் கண்டு இன்புறச் செய்தவர். சாம்பவி தீட்டை எல்லோரும் பெறவேண்டும் என்ற பெரு விருப்புக் கொண்ட பெருந்தகை.

காலதேய வர்த்தமான நிலையால் கொழும்பு தெஹிவளை இரத்தினாகரபதியில் வசித்தார். இக்காலத்தில் மன உறுதியுடனும் நிலைத்த கொள்கையுடனும் சீரியராக வாழ்ந்தார். புற உலகத் தொடர்புகளை அறவே விலக்கிவிட்டு அகத்திலே இறைவனை அல்லும் பகலும் கண்டார். இவற்றுக்கெல்லாம் மூலகாரணமாக அமைந்தது யாழ்.சிவயோக சுவாமிகளைக் குருவாக வரித்த சிவாயசுப்பிரமணி அவர்களை குருவாக வரித்துக் கொண்டமையே யாகும்; பௌர்ணமித் தினங்களில் அளவெட்டியில் அமைந்த ஆச்சிரமத்தில் பயின்ற யோகசாதனையேயாகும். ''சும்மா இரு'' என்ற மெய்ப்பதத்திற்கு தன்னையே ஆளாக்கிய அன்புடைச் செம்மல். சைவ சித்தாந்தத்தையும் வேதாந்தத்தையும் நன்கு கற்றுத் தெளிந்தவர். இரண்டிற்கும் உள்ள தொடர்பை இலகுவில் புரியும்படி உவகை காட்டிய உத்தமர். அதாவது கொழுக்கட்டைக்கும் மோதகத்திற்கும் உள்ள தொடர்புதான் இரண்டிற்கும் உள்ள வேறுபாடு என்ற உண்மையை உணரச் செய்தவர். புலன்வழிச் செல்லாது புறக் கிரிகைகளை நீக்கி அகமுகமாக இறை ஒளியைத் தியானித்துப் பேரின்பப் பெரு வாழ்வைப் பெற்று வாழ்ந்தார்.

''இன்பினில் இனிதென்றல்
இன்புண்டேல் இன்று உண்டாம்
அன்பு நிலையேயது'

என்ற திருவருட் பயனுக்கு இணங்க, தன்னை ஆளாக்கி அரனார் திருவடிக்கு ஐக்கியமாகி அமையலானார்.

வைத்திய கலாநிதி
நாகரத்தினம் க[illegible],
டீ.ஏ.எம்.[illegible]
(சித்தமருத்துவம்).

வாசகர் திருமுகம்

இடம்பெயர்ந்த மக்களுக்கு இதயபூர்வமாக உதவுவோம்

உலகிற்கே உணவளித்த மண் இன்று ''சா'' விளைச்சலைச் சந்தித்துச் சோற்றுக்கே கையேந்தும் நிலை உருவாகி உள்ளது. இடம்பெயர்வுகள் சுற்றுலாக்கள் அல்ல. 'பதி எழு அறியாப் பழங்குடிகள்' இன்று காலங்காலமாக வாழ்ந்த இடத்திலிருந்து இடம் பெயர்ந்துள்ளனர். இவர்கள் ஊரை இழந்தார்கள். உடைமைகளை இழந்தார்கள். உறவுகளை இழந்தார்கள். இவர்களுக்கு நாம் ஆறுதல் கூறவேண்டாமா?

வர்த்தகர் சங்கம், ஆலயங்கள், சனசமூக அமைப்புகள், மகளிர் அமைப்புகள், இளைஞர் மன்றங்கள், மத அமைப்புகள், தொழிற்சங்கங்கள், பல்கலைக்கழக மாணவர்கள் தனித்தனியாகவோ கூட்டாகவோ இடம்பெயர்ந்த மக்களுக்குத் தன்னலமற்ற சேவையாற்றவேண்டும்.

உடுபுடைவைகள், உள்ளாடைகள், போர்வைகள், பால்மா வகைகள், பிஸ்கட்டுக்கள், உலர் உணவுகள், துவாய், சுகாதாரத் துவாய்கள், பாய், தலையணை, சுடுநீர் போத்தல், உண்கலம், குடிகலம், சவர்க்காரம், வாளி, மருந்து வகை, குழந்தைகளுக்கான பொருள்கள் என்பவற்றை வழங்கவேண்டும்.

கிராமசேவகர், சமுர்த்தி உத்தியோகத்தர், பிரதேச செயலக ஊழியர், வைத்தியர்கள், சுகாதாரப் பணியாளர்கள், பிரதேச சபை ஊழியர்கள் போன்ற பலதரப்பட்ட அரச ஊழியர்களும், அரச சார்பற்ற ஊழியர்களும் அகதிமுகாம்களில் போதிய சேவையாற்ற வேண்டும்.

யுத்த இடம்பெயர்வினால், இழப்புகளால் உளச்சோர்வு அடைந்த மக்களுக்கு உளவியியலாளர்கள், உளவியல் மருத்துவர்கள் ஆற்றுப்படுத்தல் ஆலோசனை வழங்கவேண்டும். அரங்கச் செயல்திறன் இயக்கம், யாழ்.பல்கலைக்கழக நாடகமும் அரங்கியலும் துறையினர், வெறுவெளி அரங்க இயக்கம், திருமறைக் கலாமன்றம் போன்ற நாடக நிறுவனங்கள் அகதி முகாம்களுக்குச் சென்று நாடக ஆற்றுகைமூலம் ஆற்றுப்படுத்தல்களைச் செய்யவேண்டும்.

குண்டுவீச்சினால் காயமடைந்த மக்களை வைத்தியசாலைக்குச் சென்று பார்த்து அத்தியாவசியப் பொருள்களை வழங்கி ஆறுதல் கூறவேண்டும்.

இந்து ஆலயங்கள் மகோற்சவங்களை ஆடம்பரமாக, கேளிக்கையாக, ஓகோ என நடத்துவதை விட்டு திருவிழாப் பணத்தை மீதப்படுத்தி, இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவி புரியவேண்டும். ஆலயத்தில் அகதிகளுக்கு என உண்டியல் வைக்கலாம். நிதி சேகரிக்கலாம்.

தமிழ் அரசியற் கட்சிகள் தமது அரசியல் இலாபம் கருதாது, பலனை எதிர்பாராது இடம் பெயர்ந்த மக்களுக்குக் கடமையைச் செய்யவேண்டும்.

புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் மக்களும் தமிழக மக்களும் தமது உதவிகளை உரிய முறையில் அனுப்பிவைக்கவேண்டும்.

முகாம்களில் வாழும் மக்களுக்கு வேண்டியதும் போதியளவுமான வசதிகள் செய்து கொடுக்கப்படவேண்டும். குறிப்பாகத் தொலைபேசி வசதிகள் செய்யப்படவேண்டும். விசாரணைகள் முடிந்த பின் உறவினர் வீடுகளுக்குச் செல்ல அனுமதி அளிக்க வேண்டும். இயன்றவரை விரைவாக அவர்களைச் சொந்த இடங்களில் சுதந்திரமாக மீள்குடியேற்ற அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். ஐ.நா.அமைப்புகள் வேண்டிய உதவி புரியவேண்டும். உதவி புரிவோர் தமது உதவிகளை நேரடியாகவோ, செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மூலமோ, நல்லை ஆதீனத்தின் ஊடாகவோ, அரச அதிபர் மூலமோ, பிரதேச செயலகங்கள் மூலமோ, அரசியல் கட்சிகள் மூலமோ, கிராமசேவகர் மூலமோ செய்துகொள்ளலாம்.

''உறவுகளுக்கு கரம் கொடுப்போம்
உணர்வுகளுக்கு மதிப்பளிப்போம்''

யாழ்ப்பாணம்.

ஜே.அலன்.

மீட்கப்படாத தங்க அடகு நகைகளின் ஏல விற்பனை அறிவித்தல்

சுன்னாகம் இலங்கை வங்கியில் 10.07.2008 இற்கு முன்னர் 06 மாதங்களுக்கும் 10.01.2008 இற்கு முன்னர் 12 மாதங்களுக்கும் அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத அல்லது வட்டி செலுத்தப்பட்டு புதுப்பிக்கப்படாத அடகு நகைகள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஏல விற்பனைத் திகதி: 26.04.2009 (ஞாயிற்றுக்கிழமை)
காலை 8.30 மணி

ஏல விற்பனை நடைபெறும் இடம்:
சுன்னாகம் மேற்றரக்கிளை
காங்கேசன்துறை வீதி,சுன்னாகம்.

ஏல்விற்பனையை இரத்துச் செய்யும்/ ஒத்திவைக்கும் உரிமை வங்கிக்கு உண்டு.

உதவிப் பொது முகாமையாளர்,
இலங்கை வங்கி,
வடமாகாணக் காரியாலயம், யாழ்ப்பாணம்.

[illegible]

---

41 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

திருமதி
நாகராசா இரத்தினம்

பிறப்பு: 09.03.1927
இறப்பு: 16.03.2009

இன்று (25.04.2009) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

காலையடி தெற்கு,
பண்டத்தரிப்பு.

(51633)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

9ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
சின்னத்தம்பி பொன்னுராசா

மண்ணில்: 09.12.1927
விண்ணில்: 04.05.2000
திதி: அமாவாசை
(25.04.2009)

பாசத்துடன் எம்மைப் பாரினில் வளர்த்தவரே!
உமது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

958/19, தலையாழி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

(84671)

பிரிவால் துயருறும்:
மனைவி, மகன், மருமகள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
16★08★1944

இறப்பு
06★05★2008

அமரர் சிவகுருநாதர் கணேசபிள்ளை

(வேரக்குளம், கருங்காலி - காரைநகர்)

அன்பாய் பேசி, பண்பாய் வளர்த்து, பாசமுடன்
எம்மையெல்லாம் அரவணைத்தீரே - அப்பா!
ஆண்டு ஒன்று சென்றாலும் உம் நினைவுகள்
நெஞ்சைவிட்டு அகலவில்லை
உமது ஆத்மா சாந்தி அடைய வாரிவளவு
கற்பக விநாயகரை வேண்டுகின்றோம்.

(84679)

42/3A, அம்மன் வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

மந்துவிலில் கோப்சிற்றி திறப்பு விழா நாளை

யாழ்ப்பாணம், ஏப்.25

தென்மராட்சி கிழக்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் சிறப்புக் கூட்டுறவு நகர் (கோப் சிற்றி) நாளை ஞாயிற்றுக் கிழமை மந்துவில் மத்தியில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

சங்கத் தலைவர் வே.விநாயகமூர்த்தி தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுக்கு யாழ்.மாவட்ட உதவிக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பொ.சிவலிங்கம் கலந்துகொண்டு கூட்டுறவு நகரை ஆரம்பித்து வைப்பார்.

நிகழ்வுக்கு சிறப்பு விருந்தினர்களாக மக்கள் வங்கி சாவகச்சேரிக் கிளை முகாமையாளர் க.சண்முகலிங்கமும், சாவகச்சேரி பிரதேசசபை செயலாளர் வே.சிவராஜலிங்கமும் கலந்து கொள்வார்.

(50-207-224)

நலன்புரி நிலையங்களில் நடமாடும் கூட்டுறவு விற்பனை நிலையங்கள்

யாழ்ப்பாணம், ஏப்.25

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் சாவகச்சேரி நகர்ப் பகுதியில் உள்ள நலன்புரி நிலையங்களில் நடமாடும் கூட்டுறவு நகர் சேவையினை ஆரம்பித்துள்ளனர்.

சாவகச்சேரி இந்துக்கல்லூரி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி ஆகியவற்றில் உள்ள நலன்புரி நிலைய மக்களுக்கு அத்தியாவசியப் பொருள்களை விநியோகித்து வருகின்றனர்.

நலன்புரி நிலைய மக்களுக்குத் தேவையான உடுப்பு வகைகள், அத்தியாவசிய உணவுப் பொருள்கள், பாத்திரங்கள் போன்ற பொருள்களை விநியோகித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (50-207)

நலன்புரி நிலையங்களில் உள்ளோருக்குச் சமையல் பாத்திரங்கள்

யாழ்ப்பாணம், ஏப்.25

சாவகச்சேரி நகர்ப்பகுதியில் உள்ள நலன்புரி நிலையங்களில் உணவு தயாரிப்பதற்கான பாரிய சமையல்ப் பாத்திரங்களை 'லீட்ஸ்' நிறுவனத்தினர் வழங்கியுள்ளனர்.

சாவகச்சேரி இந்துக்கல்லூரி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி ஆகிய நலன்புரி நிலையங்களுக்கு விநியோகிக்கவென கிடாரங்கள், அலுமினியப் பாத்திரங்கள், இடியப்பம் தயாரிக்கும் பாத்திரங்கள் போன்றவற்றை தென்மராட்சி பிரதேச செயலகத்தில் கையளித்துள்ளனர்.

(50-207)

காணி தேவை

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் பிரதான வீதிகளில் 1-2 பரப்புக் காணிதேவை.
இடைத்தரகர் தேவையில்லை.
தொடர்பு: 0771744581

வரலாறு

A/L 2011

மாணவர்களுக்கு

புதிய பிரிவு ஆரம்பம்

இன்று : 25.04.2009
நேரம்: காலை 10-11
ஆசிரியர் K.சுதன்
B.A.(Hons) History (Spl)

யாழ்.பொருளியற் கல்லூரி

(சி/558176)

பரிசுத்த ஆவிக்குச் செபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே! உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக, உமது அருட்கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்குத் தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள் புரிபவரே, என் வாழ்வின் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்றதுணையான உமக்கு இச் சிறிய செபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்திற்கும் நன்றி கூறுகின்றேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும் எக்காரணம் கொண்டும் உம்மிலிருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேனென உறுதி கூறுகின்றேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்குபெற வேண்டுகின்றேன்.

[illegible] [illegible]

தந்தை செல்வநாயகம் 32 ஆவது நினைவு நாள்

அஞ்சலி நிகழ்வு

காலம் : நாளை 26.04.2009
ஞாயிற்றுக்கிழமை
முற்பகல் 9.30 மணி

இடம் : தந்தை செல்வா நினைவிடம்
தந்தை செல்வா சதுக்கம், யாழ்ப்பாணம்.

தலைவர்: அருட்கலாநிதி சு.ஜெபநேசன்
(தலைவர், தந்தை செல்வா அறங்காவலர் குழு)

சர்வமதப் பிரார்த்தனை

வரவேற்புரை: பேராசிரியர் ச.சத்தியசீலன்
(பீடாதிபதி, பட்டப்படிப்புகள் பீடம்)

அஞ்சலியுரை: மௌலவி முகமட் பாஹிர்
வண.பிதா எம்.வி.இ.இரவிச்சந்திரன்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்

நன்றி : திரு.பொ.கனகசபாபதி
(தந்தை செல்வா அறங்காவலர் குழு உறுப்பினர்)

அஞ்சலி நிகழ்வில் கலந்து
தந்தை அவர்களை நினைந்து
அமைதி காண்போம் வாரீர்.

யாழ்ப்பாணம். (84668)

தந்தைசெல்வா
நினைவு
அறங்காவலர் குழு

நெஞ்சினை உருக்கும் ஓராண்டு நினைவலைகள்

தோற்றம்
26
.
10
.
1974

மறைவு
25
.
04
.
2008

அமரர் முருகையா தேவி உதயராணி (குட்டி)

ஆண்டொன்று சென்றதோ.... உங்களுடைய
பிரிவை எமக்குள் புதைத்துவிட்டு
வெகுதூரம் சென்றுவிட்டீர்களே!
உங்கள் அழகான முகம், உங்கள் நினைவுகள்
எம்முடன் வாழ்ந்து கொண்டிருக்கிறது
நீங்கள் எம்மைத் தவிக்கவிட்டு உங்கள்
மூச்சை ஏன் நிறுத்தினீர்கள் தெய்வமே!
உங்கள் வரவிற்காக எதிர்பார்த்து
நிற்கின்றோம்! வேண்டி நிற்கின்றோம்.

(84683)

04, ஸ்ரான்லிக் கல்லூரி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்...
குடும்பத்தினர்.

நீங்கா நினைவலையில் 8ஆம் ஆண்டு



அமரர்
கபிரியேல் அன்ரனி பெர்ணாண்டோ

அன்பால் அரவணைத்து அறிவூட்டி எமது உயர்வுக்காய்
அத்தனையும் ஈந்து உயிராகி உறவாகி நின்றவரே!
என்றும் நீங்காத நினைவுகளில்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்.....

(84665)

ஆர்க் லேன்,
உடுவில்.

அன்பு மனைவி,
பிள்ளைகள் குடும்பத்தினர்.

படங்கள் தரும் பதிவுகள்

உள்ளூராட்சி மறுசீரமைப்புக் கொள்கையின் கீழ் காரைநகர் பிரதேச சபை நூலக ஆலோசனைக் குழுவின் ஏற்பாட்டில் எழுத்தாளர்களைக் கௌரவிக்கும் வரிசையில் எழுத்தாளரும், ஓய்வுபெற்ற அதிபருமான சி.பொன்னம்பலத்தைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் விழா நாயகன் சி.பொன்னம்பலம், காரைநகர் பிரதேச சபை செயலாளர் இரா.லோகநாதன், உதவி அரசாங்க அதிபர் ரி.ஜெயசீலன், இலங்கை வங்கி முகாமையாளர் ரி.ஸ்ரீஸ்கந்த ராஜா, யாழ்ற்ரன் கல்லூரி அதிபர் ந.பரமசிவம், காரைநகர் பிரதேசசபை பொதுசன தொடர்பு அதிகாரி சு.சிவஞானம் ஆகியோர் நிற்பதைப் படத்தில் காணலாம். (250)

ஆனைக்கோட்டை கரைப்பிரான் ஆலய மண்டபத்திலுள்ள சமூக சேவை அமைச்சின் தொழிற் பயிற்சி நிலையத்தில் கடந்த ஆண்டுக்கான மின் இணைப்பு பயிற்சி, நீர்க்குழாய் பொருத்தல் போன்ற பயிற்சிகளில் செய்யப்பட்ட உபகரணங்களின் கண்காட்சி அண்மையில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்ட சண்டிலிப்பாய் பிரதேச செயலர் ரூபினி வரதலிங்கம் உரையாற்றுவதையும் அருகில் அபிவிருத்தி உதவியாளர் டினேஸ் குணரத்தினம், அபிவிருத்தி இணைப்பாளர் பொன்மதி, நிர்வாக உத்தியோகத்தர் முரளி ஆகியோர் அமர்ந்திருப்பதைப் படத்தில் காணலாம்.

(படம் - நவாலி செய்தியாளர்)



பண்டத்தரிப்பு ஜே.ஆர்.எஸ்.கணனி நிலையத்தில் இரத்ததான நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டவர்கள் இரத்ததானம் செய்வதைப் படத்தில் காணலாம்.

வலி.மேற்கு முன்பள்ளி ஆசிரியர் சங்கத்தினர் வலி.மேற்கு பிரதேச சபையுடன் இணைந்து முன்பள்ளிச் சிறார்களின் அபிநயப் பாடல்திறன் விழாவை அண்மையில் நடத்தினர்.

இந்த விழாவில் பங்குபற்றிய சிறார்களையும், முன்பள்ளி ஆசிரிய சங்க நிர்வாகத்தினரையும் படத்தில் காணலாம். (28)

தெல்லிப்பழை மல்லாகம் லயன்ஸ் கழகத்தைச் சேர்ந்த கலாபூசணம் லயன் ஏ.சீ.ஆனந்தனின் சேவையைப் பாராட்டி அமெரிக்காவைத் தளமாகக் கொண்டு இயங்கும் மெர்வின் ஜோன்ஸ் பலோ நிதி நிறுவனத்தின் உயர் விருது வழங்கப்பட்டது.

இவ்விருதினை மல்லாகம்,தெல்லிப்பழை லயன்ஸ் கழகத்திற்கு அண்மையில் விஜயம் செய்த அகில இலங்கை லயன்ஸ் கழக ஆளுநர் லயன் நிமால் ராஜபக்ஷ உயர் விருதினை வழங்கி கௌரவிப்பதைப் படத்தில் காணலாம். (படம்:நேசன்)

உலக மகளிர் தினத்தை முன்னிட்டு சாவகச்சேரி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் மகளிர் தின விழா அண்மையில் நடைபெற்றது.

இந்த விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட சாவகச்சேரி மகளிர் கல்லூரி உப அதிபர் திருமதி ரு.இராசரத்தினம் அழைத்து வரப்படுவதையும் சங்கத்தின் செயலாளர், தலைவி, பொருளாளர் ஆகியோர் அருகில் வருவதையும் படத்தில் காணலாம். (59)

ஜனாதிபதி சாரணர் செயற்றிட்டத்தின்கீழ் வட இலங்கை ஸ்ரீபரமானந்த [illegible] இல்லத்தில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய சாரணர் பா.அகிலன் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட சிரமதான நிகழ்வைப் படத்தில் காணலாம்.

பெற்றோர்கள் பிள்ளைகளுக்கான
கல்வி விழிப்புணர்வு செயற்றிட்டம்
2009

வலிகாமம் கல்விவலய முறைசாராக் கல்விப் பிரிவின் ஏற்பாட்டில் பெற்றோர்கள், பிள்ளைகளுக்கான கல்வி விழிப்புணர்வு செயற்றிட்டம் வசாவிளான் சுதந்திரபுரம் நலன்புரி நிலைய பாரதி பொதுமண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தெல்லிப்பழை பிரதேச செயலர் சு.முரளிதரன் உரையாற்றுவதையும், செயற் [illegible] முகராஜா, குட்டியப்புலம் அ.த.க பாடசாலை அதிபர் எஸ்.கந்தசாமி, பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ்.நாகராஜா, ஆசிரிய நிலைய முகாமையாளர் த.சிவகுமாரன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

இனப் பிரச்சினை தீவிரமடையக் காரணம் அரசியல் வாதிகளின் இனவாதப் போக்கே

சில தசாப்தங்களாக தொடர்ந்து சென்று இன்று பெரும் சிக்கல் நிறைந்த பிரச்சினையாக பூதாகார உருவில் பய முறுத்திவரும் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வொன்றுக்கான மார்க்கம் கிட்டுமா? என ஆராயும் விதத்தில் அமைகிறது இக்கட்டுரை.

கலாநிதி ''மைக்கல் பிரணாந்து'' என்பவரால் எழுதப்பட்டு ''ராவய'' பத்திரிகையில் வெளிவந்துள்ள அக்கட்டுரையின் தமிழ் வடிவம் இங்கு தரப்படுகிறது.

துரதிஷ்டம் மிக்கதொரு நாடு என்றே இலங்கையை அறிமுகப்படுத்த வேண்டி யுள்ளது. ஏனெனில் 1948ஆம் ஆண்டில் இந்த நாடு பிரித்தானிய ஏகாதிபத்தியவாத அடிமைத்தளை ஆட்சியிலிருந்து விடுபட்டு சுதந்திரமடைந்ததன் பின்னரும்கூட, பின்நோக்கியே நகர்ந்து சென் றுள்ளது. இலங்கையென்ற இந்த நாடு இன்றைய வரையிலும் சீர்கெட்டுப் பின் நோக்கியே பயணித்துவரும் இந்த நிலைப்பாடு எம்மால் உருவாக்கிக் கொள்ளப்பட்டதொன்றேயல்லாது, எமது பூர்வ ஜென்மப் பலனோ அல்லது இந்த நாட்டுக்கு விதிக்கப்பட்ட தலைவிதி காரணமாக உருவாகியுள்ள நிலைப்பாடோ அல்ல.

இந்த நாட்டில் வாழ்ந்துவரும் பல்வேறு இனச்சமூகங்களைச் சேர்ந்த மக்களைப் பற்றிய ஆராய்ச்சி கண்கொண்டு நோக்கும்போது, துரதிஷ்டம் மிக்க அபாக்கியசாலிகள், இந்து சமயிகளான-தமிழ்மொழியைப் பேசும் இந்நாட்டின் தமிழர்களேயாவர்- தமிழ் இனமேயாகும்.

தமிழ் மக்கள் சம்பந்தமும் இந்நாட்டின் இனப்பிரச்சினை காரணமாக இன்றைய அளவில் நிகழ்ந்துவரும் கடுமையான யுத்த மோதல்களில் பல்லாயிரக் கணக்கில் ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் உயிரிழந்து வருகின்றனர். மதிப்பிட்டுக் கூறஇயலாத அளவில் வளங்கள் அழிவுற்று வருகின்றன. யுத்தம் ஒன்றினால் மட்டுமே இந்த நிலைப்பாட்டை வெற்றிகொள்ள முடியும். அதாவது ''யுத்தரீதியிலான தீர்வொன்றே'' இதற்கு நல்லதொரு மருந்து என்று சிலர் எண்ணுகின்றனர். இல்லை அது தவறு, அரசியல் ரீதியிலானதொரு தீர்வும் கூட மிக அவசியமானதாகும் என்று இந்நாட்டின் ஆழ்ந்த அறிவுள்ள தரப்பினர் வாதிட்டு நிற்கின்றனர்.

எவ்வாறான போதிலும், 1956ஆம் ஆண்டில் இந்நாட்டில் கொண்டுவரப்பட்ட மொழிச்சட்டமே இப்பிரச்சினைக்குக் காலாக அமைந்த முக்கியமானதொரு திருப்புமுனை- தீர்க்கமானதொரு கட்டம் எனக் கூறமுடிந்தாலும் கூட, சில தரப்புக்கள் வாதிடுவது போன்று அதுவே பிரச்சினைக்கான ஆரம்பமல்ல.

இலங்கையில், பிரித்தானியர்களது நிர்வாகத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட டொனமூர் அரசியல் சீர்திருத்தத்தின் மூலமும் கூட இந்நாட்டின் சிங்கள அரசியல் தலைவர்களால், தமிழ் அரசியல் தலைவர்கள் ஏமாற்றப்பட்டனர். அது மட்டுமல்லாது, சில தமிழ் அரசியல் தலைவர்களின் ஆலோசனைகளையும் கூடப் பெற்றுக்கொண்ட அவர்கள் 1936 ஆம் ஆண்டில் ''முழுச்சிங்கள'' அமைச்சரவையொன்றை நிறுவி, தமிழ் அரசியல் தலைவர்களை ஏமாற்றினர். தமிழ் அரசியல் தலைவர்களோ, அதற்குத் தமது தரப்பின் மாற்றுச் செயற்பாடொன்றாகத் தமிழ் மக்களை ஏமாற்றித் தமது அதிகாரபலத்தை உறுதி செய்துகொள்வதை முன்னிட்டு தமிழ் இனவாதம் என்றொரு வித்தை விதைத்து விட்டனர்.

இந்த சிங்கள- தமிழ் இனவாதத்தைக் கைக்கொண்ட இரு தரப்பினதும் ஏமாற்றுவேலை காரணமாக ஏற்கனவே நான்கு தடவைகளில் (1958, 1977, 1981, 1983) இந்நாட்டின் சிங்கள, தமிழ் மக்கள் தமக்குள் மோதிக்கொண்டு தம்மைக் கொன்றொழித்துக் கொண்டனர். தத்தமது கலாசார உரிமைகளையும் அழித்துக் கொண்டனர். பொருளாதாரத்தையும் அழித்துக் கொண்டனர். 1983 இல் இந்நாட்டில் உருவான நிலைப்பாடானது தமிழ் இனத்தைக் கொடூரமாக வதைத்துப் பெரும் அழிவுகளை ஏற்படுத்தியதுடன், முடிவுற்றது. அந்தவகையில், இலங்கையென்பது, உலகிலேயே மனிதத்தன்மையற்ற மக்கள் வாழும் பூமி என உலகப் பிரசித்தத்தைப் பெற்றுக் கொண்டது.

இலங்கையில் தமிழ் மக்களுக்கு ஏற்படுத்தப்பட்ட இந்த அழிவுகளைப் பயன்படுத்திக் கொண்ட வடபுலத்தின் இளைஞர் தரப்பொன்று, பிரபாகரனின் தலைமையின் கீழ் அந்த 1983ஆம் ஆண்டில் ஆயுதப் போராட்டத்துக்குத் தம்மைத் தயார்ப்படுத்திக்கொண்டது.

மேற்குறிப்பிட்ட 1983 இன் கலவரமானது , அன்று நிர்வாகத்திலிருந்த அரசினால் திட்டமிடப்பட்ட அடக்குமுறைச் செயற்பாடொன்றேயல்லாது, பதின்மூன்று இராணுவச் சிப்பாய்கள் உயிரிழக்க நேர்ந்ததன் காரணமாகத் திடீரெனத் தலைதூக்கியதொன்றல்ல.

இறுதியாக இந்நாட்டின் தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டது, விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனாலேயே ஆகும். உண்மையில், உலகில் இதுவரையில் உருவாகியுள்ள பலம்பொருந்திய அதேபோன்று செயற்திறன் மிக்க பயங்கரவாத அமைப்பொன்றான விடுதலைப்புலிகள் அமைப்பினால் ஆரம்பிக்கப்பட்ட யுத்தத்தில் தமிழ்த்தேசிய அரசியலின் அரசியல் தலைவர்கள் உள்ளடங்கும் தமிழ் இளைஞர் தரப்பொன்றும் நாட்டின் ஏனைய இனங்களைச் சேர்ந்த தரப்பொன்றும் கொலைசெய்யப்பட்டன.

இதுவரையில் விடுதலைப்புலிகள் அமைப்பினால் கொண்டுசெல்லப்பட்ட கொள்கை வழியை நோக்கும்போது, மாறுபட்ட - தமது அதிகார ஆசையென்ற மனவமைப்பிற்கு இரையாக ஒட்டுமொத்த தமிழ்மக்களும் பிரபாகரனால் பயன்படுத்திக்கொள்ளப்பட்டிருப்பதைத் தெளிவாகப் புரிந்துகொள்ளமுடிகிறது.

யுத்தம் காரணமாக தமிழ்ப் பொது மக்கள் சொல்லொணாத் துன்பம் அனுபவிப்பது நிஜமே

சில கட்டங்களைத் தாண்டிச் சென்றுள்ள இந்நாட்டின் சிவில் யுத்தத்தின் சுயரூபம் இன்று மாற்றமடைந்து வருமொரு நிலையே தென்படுகிறது. யுத்தமய வெற்றிகள் போன்றே யுத்தமானது மாறுபட்டதொரு சுயரூபத்தைக் கொள்ளக் கூடியதொரு நிலைப்பாடு உருவாகி வருகிறதென்பதும் இன்று தெளிவாகத் தெரிகிறது.

இன்றைய அளவில் இலட்சக்கணக்கான தமிழ்மக்கள் அநாதைகளாக்கப்பட்டு வார்த்தைகளால் விவரிக்க இயலாத அவலங்களுக்கும் துன்பங்களுக்கும் ஆளாகி உயிர்வாழ்ந்து வருகின்றனர்.

யுத்த நடவடிக்கைகள் என்ற ரீதியில் நோக்கும்போது இலங்கையென்ற நாடு, இன்றைய அளவில் விடுதலைப் புலிகளின் பயங்கரவாதமென்ற பிடியிலிருந்து விடுபட்டு வருகிறது எனக் கூறினால் அது பொய்யாகமாட்டாது.

ஆனாலும், இன்றைய நிலைப்பாட்டின் மூலம் சுமுகமான மற்றும் ஜனநாயக ரீதியிலான தீர்வொன்றை ஈட்டிக் கொள்ள முடியுமா? அல்லாதுவிடின் பயங்கரவாதத்தைக் களைந்தெறிந்ததன் பின்னரும்கூட வடபுலம் தொடர்ச்சியாக இராணுவ நிர்வாகமொன்றின் கீழேயே வைக்கப்பட்டு அடக்கியாளப்பட வேண்டியுள்ளதா? இந்த வினாக்களுக்கு நாடு உடனடியாகவே பதில் வழங்க வேண்டியுள்ளது.

இச்சிக்கல் குறித்து கவனம் செலுத்தப்படும்போது, குறிப்பாக அதற்குத் தீர்வைக் கண்டறியும் அணுகலின்போது, மறந்து விடக்கூடாத காரணிகள் சிலவுள்ளன.

1. பிரித்தானிய ஆட்சியிலிருந்து அரசியல் சுதந்திரம் கிடைத்ததன் பின்னர், இந்நாட்டின் தமிழ் மக்களுக்கு பாரிய அளவில் அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்பதை இந்நாட்டின் அனைத்து அரசியல் கட்சிகளும் போன்றே சிங்கள மக்களும் நேர்மையுடன் தெளிந்துணர்ந்து கொள்ளவேண்டியுள்ளது.

2. இந்நாட்டின் தமிழ்மக்கள் இவ்வாறு நியாயமற்ற விதத்திலான புறச்சூழல்களுக்குள் தள்ளி வீழ்த்தப்பட்டுள்ள விடயத்தில் இந்நாட்டின் அனைத்து அரசியல் கட்சிகளுமே (இடதுசாரி கட்சிகளும் கூட) பங்களிப்பு வழங்கியுள்ளன என்பது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

3. தமிழ் மக்கள் தமிழர்களாகப் பிறந்துவிட்டுள்ளதன் காரணமாகவே அவர்களுக்குப் பிரச்சினைகள் உள்ளனவா? எனச் சவால்விடுக்கும் தொனியில் வினவும் சந்தர்ப்பவாதிகள் போன்றே அரசியல் கட்சிகளும் தமது தவறுகளைத் திருத்திக்கொள்ள வேண்டியுள்ளது. அதேபோன்று சமாதானத்தை விரும்பும் சக்திகளால் அவர்கள் யாரென வெளிப்படுத்திக் காட்டப்பட வேண்டியுள்ளது.

4. இந்நாட்டில் வாழும் சிங்கள மற்றும் முஸ்லிம் இனங்களைச் சேர்ந்த மக்களும்கூட அவர்களுக்கென்றே குறிப்பிட்டுக் கூறக்கூடிய பிரச்சினைகளும் பீதிகளும் உண்டு என்பதோடு, அவை தொடர்பாக தமிழ் மக்களும்கூட தெளிந்துணர்ந்துகொள்ள வேண்டியுள்ளது. அவர்களால் அப்பீதிகளை நீக்கிவிட இயலும்.

5. இன்று இடம்பெற்றுவரும் நேரடியாக மோதிக்கொள்ளும் யுத்தம் முடிவுக்கு வந்தாலும்கூட வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இராணுவ நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்படக் கூடாது. தமிழ் மக்கள் மீதான இவ்வித அடக்குமுறையானது, அவர்களது நியாயமான எதிர்பார்ப்புகளுக்கு வழங்கப்பட வேண்டிய பதிலாக அமையமாட்டா.

6.பயங்கரவாதத்தைக் களைந்தெறிந்துவிடுவது தொடர்பாகத் தைரியமாக நிமிர்ந்துநின்று, மற்றும் தயவுதாட்சண்யமற்ற நடைமுறையைக் கையாண்டு வந்துள்ள ஜனாதிபதி தாம் மிகச் சரியான மார்க்கத்தில் பயணிப்பதாகத் தொடர்ச்சியாகக் கூறிவருவதற்கு அமைவாக யுத்தம் நிலவிய பிரதேசங்களில் ஜனநாயக ரீதியிலான நிறுவனங்களை நிலைப்படுத்த வேண்டியுள்ளது. ஜனநாயகத்தை உறுதிப்படுத்திக் கொடுக்க வேண்டியுள்ளது.

மேற்குறிப்பிட்ட முக்கியத்துவம் பெறும் சாதகத் தன்மைகள் நிறைவேற்றி வைக்கப்படும் பட்சத்தில் திடமான நிரந்தர சமாதானம் தொடர்பான சில எதிர்பார்ப்புக்கள் குறித்து நம்பிக்கை கொள்வதற்கான வாய்ப்பமைய இடமுள்ளது.

தமிழ் மக்கள் இன்று, விடுதலைப் புலிகள்அமைப்பு மற்றும் பிரபாகரனைக் கவனத்தில்கொள்ளாததொரு நிலைப்பாட்டைக் கொண்டுள்ளனர் என்பதில் சந்தேகத்துக்கு இடமில்லை.

ஆனாலும் தமிழ் மக்களுடன் சம்பந்தப்பட்ட அநீதியான செயற்பாடுகளுக்கு எதிராகப் போராடும் விடுதலைப் போராட்டமொன்றாகவே விடுதலைப் புலிகள் அமைப்பு தனது ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்து முன்னெடுத்துச் சென்றுள்ளது என்பதை மறந்துவிடக் கூடாது.

அதேபோன்று விடுதலைப்புலிகள் அமைப்பின் கைஓங்கி, அது திடமான நிலையில் செயற்பட்ட காலகட்டத்தில் தமிழ் மக்களுக்கு சிங்களப் பெரும்பான்மைத் தரப்பிலிருந்து தாக்குதல்கள் எவையும் விடுக்கப்பட்டதில்லை. அதேவேளை, தமிழ்மக்கள் தொடர்பான உரிமைப் போராட்டத்தின் ஆரம்பகாலத்தில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளை ''Our boys'' அதாவது, ''எமது பையன்கள்'' எனக் குறிப்பிட்டு அவர்கள் மீது நம்பிக்கை வைத்து எதிர்பார்ப்புக்களை மனதில் கொண்டிருந்தனர்.

இன்றைய அளவில் விடுதலைப் புலிகள் அமைப்பு, போர் ரீதியில் தோற்கடிக்கப்பட்டு விட்டிருந்தாலும் கூட, அவர்கள் பலமான நிலையில் செயற்பட்ட காலகட்டத்தில் தமக்குச் சிங்களவர்களிடமிருந்து ''அச்சுறுத்தல் நிலை''க்கோ தாக்குதலொன்றுக்கோ இடமிருந்ததில்லை என்பதையும் அவர்கள் மறக்காதிருக்கக்கூடும்.

எவ்வாறான போதிலும் இந்நாட்டின்தமிழ் மக்களுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள அநீதிகள் எதிர்காலத்தில் தீர்த்து வைக்கப்படாது போகுமானால், அவர்கள் மத்தியிலிருந்து ஆயுதமேந்திய விடுதலைப் போராட்டவாதிகள் தலையெடுப்பதைத் தடுத்து நிறுத்திவிட இயலாது என்பதையும் மறந்துவிடக்கூடாது.

மறுபுறத்தில் தமிழ் மொழியைப் பேசும் மக்களுள் 61 சதவீதமானோர் தென்புலத்துச் சிங்கள மக்களுடன் சுமுகமானதொரு சுகவாழ்வை மேற்கொண்டு வருகிறார்களே என்றவாறு சில அரசியல் வாதிகள் தொடர்ச்சியாகவே சுட்டிக்காட்டி வாதிட்டு வருவதையும் காண முடிகிறது. ஆனாலும் அது முற்றுமுழுவதுமான மிகச் சரியானதொரு சித்திரம் அல்ல.

அவர்கள், எத்தகைய திருப்தியற்றதொரு மனவமைப்புடன் அவ்வாறு வாழ்ந்து வருகிறார்கள் என்பது தேடித் துளாவிக் கண்டறிந்து கொள்ளப்பட வேண்டியுள்ளது. அதாவது அவர்களது அந்த வாழ்க்கையானது தொடர்ச்சியாக அடிக்கடி நிகழும் ''இராணுவச் சோதனைகள்'' ''பதிவு செய்தல்கள்'' சிறை செய்யப்படுதல்கள் போன்ற அவலப்படுத்தல்களுக்கு மத்தியிலல்லவா ஓடிக் கொண்டிருக்கிறது. எந்த நிமிடத்தில் மீண்டுமொரு 1983 கறுப்பு ஜூலையின் 23ஆம் திகதி போன்றதொரு திகில் மிக்க அனர்த்தம் சூழ்ந்து விடுமோ என்ற பீதி இந்நாட்டின் தமிழ் மக்களிடத்தில் இல்லையென்று கூறிவிட இயலுமா? எனவே, அவர்களுக்குள்ள அந்தப் பீதிநிலை மற்றும் துன்பியல் மிக்க தொந்தரவுகள், தொல்லைகள் இல்லாதொழிந்து விடப்படும் வரையில், இந்நாட்டுக்கு நிரந்தர சமாதானம் என்றதொன்று கிட்டிவிடப் போவதில்லை.

இந்நாட்டின் அனைத்து அரசியல் கட்சிகள், குடிமக்கள், பாதுகாப்புப் படைப் பிரிவுகள் என்போர் அந்த நிலைப்பாட்டைத் தெளிவாகப் புரிந்துணர்ந்து கொண்டு அந்த மக்களது அந்த ஆதங்கத்தை - பீதியை மனப்புழுக்கத்தை இல்லாதொழித்துவிடும் வரையில் இந்நாட்டில் ''நிரந்தர'' சமாதானம் உருவாவது சாத்தியமில்லை. ஐ.நா.சபையின் 1948ஆம் ஆண்டின் மனித உரிமைகள் பிரகடனம் மற்றும் 2002ஆம் ஆண்டின் கலாசார சுதந்திரம் தொடர்பான பிரகடனம் ஆகிய ஆவணங்கள் மூலமாக நிரந்தர சமாதானமொன்றுக்கான அடித்தளத்தை தற்போது பெற்றுக்கொள்ள முடியும். ஒட்டுமொத்த மானுட இனங்களின் உரிமைகள் போன்றே கலாசாரக் குழுக்களின் சுதந்திரமான இயக்கம் தொடர்பாகவும்கூட அந்த ஆவணங்களில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அவற்றைப் பின்பற்றுவோம், நடைமுறைக்குக் கொண்டுவருவோமாக.

இரண்டாவது தடவையாகவும்

சபாலிங்கம் வெற்றிக்கிண்ணத்தை யாழ்.இந்துக் கல்லூரி சுவீகரித்தது

வலி.வடக்கு,ஏப்.25

அமரர் இ.சபாலிங்கம் வெற்றிக்கிண்ணத்தை இரண்டாவது தடவையாகவும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி கைப்பற்றிக்கொண்டது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும் கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற 'இந்துக்களின் பெரும் போர்' துடுப்பாட்டப் போட்டியைத் தொடர்ந்து இடம்பெறும் 50 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய துடுப்பாட்டப் போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆறு விக்கெட்டுக்களினால் வெற்றி பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரியும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கொக்குவில் இந்துக் கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாடியது. 50 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 261 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

உத்தமகுமாரன் 114 பந்துகளில் பதினொரு நான்குகள், ஓர் ஆறுடன் 101 ஓட்டங்களையும், இராகுலன் 43 ஓட்டங்களையும், ஜனுதாஸ் 39 ஓட்டங்களையும், பங்குஜன், பவிந்திரன் ஆகியோர் தலா 18 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டார்கள்.

உத்தமகுமாரன் முதல் தடவையாக இச் சுற்றுப் போட்டியில் சதத்தைப் பெற்றுக்கொண்டார். 5ஆவது விக்கெட்டுக்காக இணைந்துகொண்ட உத்தமகுமாரனும் இராகுலனும் பெற்ற 110 ஓட்டங்கள் இப்போட்டியின் ஒரு ஜோடி பெற்ற அதிகூடிய ஓட்ட எண்ணிக்கையாகும்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த உமாதரன் 10 ஓவர்கள் பந்துவீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 40 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளையும், திருத்தணிகன், நிரூஜன் தலா இரண்டு விக்கெட்டுகளையும் கைப்பற்றினார்கள்.

262 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 49.1 ஓவரில் 4 விக்கெட்டுகளை இழந்து 262 ஓட்டங்களைப் பெற்று வெற்றிக்கிண்ணத்தைச் சுவீகரித்துக்கொண்டது.

டிலக்சன் எட்டு நான்குகளுடன் 92 ஓட்டங்களையும், உமாதரன் ஆட்டமிழக்காது 60 ஓட்டங்களையும், சுதாகரன் 42 ஓட்டங்களையும், நிரூஜன் 18 ஓட்டங்களையும், செந்தூரன் 18 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டார்கள்.

கொக்குவில் இந்துக் கல்லூரி சார்பில் பந்துவீசிய கார்த்திக், நிரோஜன், ஜனுதாஸ் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார்கள்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த கே.டிலக்சன் ஆட்டநாயகனாவும், உமாதரன் சிறந்த பந்துவீச்சாளராகவும், கொக்குவில் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த உத்தமகுமாரன் சிறந்த துடுப்பாட்ட வீரராகவும், பவசுதன் சிறந்த களத்தடுப்பாளராகவும் தெரிவுசெய்யப்பட்டார்கள். (50-86)

17 வயதுப் பெண்கள் வலைப்பந்தாட்டம்: தெல்லிப்பழை யூனியன் அணி சம்பியன்

வலி.வடக்கு,ஏப்.25

யாழ்.மாவட்ட கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 17 வயதுப் பிரிவு பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாவட்டச் சம்பியனாகியது.

உடுவில் மகளிர் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப்போட்டியில் பருத்தித்துறை மெதடிஸ் பெண்கள் உயர்தரப் பர்டசாலை அணியும் யூனியன் கல்லூரி அணியும் மோதிக்கொண்டன.

மெதடிஸ்த பெண்கள் அணியினர் ஆரம்பத்தில் இருந்த விறுவிறுப்பைத் தொடர்ந்து காட்டாமையால் யூனியன் கல்லூரி தனது வெற்றியைத் தொடர்ந்து உறுதிப்படுத்திய நிலையில் விளையாடியது.

ஆட்ட நிறைவில் யூனியன் கல்லூரி அணி 30:17 புள்ளிகள் என்ற அடிப்படையில் பருத்தித்துறை மெதடிஸ் பெண்கள் உயர்தரப் பாடசாலையை வெற்றிகொண்டு சம்பியனாகியது.

மூன்றாம் இடத்திற்கான போட்டியில் கோப்பாய் கிறிஸ்தவக் கீல்லூரியும் யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர்மடம் பாடசாலையும் மோதிக்கொண்டன.

இரு அணிகளும் கடுமையாக மோதிக்கொண்டபோதிலும் ஆட்டநிறைவில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி 18:11 என்ற புள்ளிகள் என்ற அடிப்படையில் திருக்குடும்ப கன்னியர்மடம் பாடசாலையை வெற்றிகொண்டு மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. (50-86)

விளையாட்டு நிகழ்வுகள்

வலி.வடக்கு,ஏப்.25

யாழ்.மாவட்டச் செயலக விளையாட்டுப் பிரிவு வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையே நடத்தும் பெண்களுக்கான எல்லே விளையாட்டுப் போட்டிகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு புத்தூர் வீனஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளன. போட்டியில் பங்குபற்றும் பிரதேச செயலக அணிகளின் விவரம் வருமாறு:

- மருதங்கேணி எதிர் யாழ்ப்பாணம்
- காரைநகர் எதிர் தெல்லிப்பழை
- உடுவில் பிரதேச செயலகம் எதிர் நெடுந்தீவு
- ஊர்காவற்றுறை எதிர் கரவெட்டி
- கோப்பாய் எதிர் சண்டிலிப்பாய்
- வேலணை எதிர் சங்கானை
- நல்லூர் எதிர் சாவகச்சேரி

பருத்தித்துறை பிரதேச செயலக அணி இரண்டாம் சுற்றிலிருந்து விளையாடும். (50-86)

மாவட்ட மட்டக் கபடிப் போட்டியில் இளவாலை மெய்கண்டான் சம்பியன்

வலி.வடக்கு, ஏப்.25

யாழ்.மாவட்ட பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற கபடிப் போட்டியில் இளவாலை மெய்கண்டான் வித்தியாலயம் மாவட்டச் சம்பியனாகியது.

மல்லாகம் மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் பருத்தித்துறை கலட்டி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையும், இளவாலை மெய்கண்டான் வித்தியாலயமும் மோதிக்கொண்டன.

போட்டி ஆரம்பமாகி சில நிமிடங்கள் றோமன் கத்தோலிக்கப் பாடசாலை போட்டியாக விளையாடியபோதிலும் மெய்கண்டான் வித்தியாலயம் சுறுசுறுப்பாக விளையாடி முதல்பாதி ஆட்டம் நிறைவுபெறும் போது 39:19 என்ற புள்ளிகள் அடிப்படையில் இருந்து இரண்டாம் பாதி ஆட்டத்திலும் ஆதிக்கம் செலுத்தமுடியும் என்ற நம்பிக்கையில் களமிறங்கிய மெய்கண்டான் வித்தியாலயத்திற்கு அந்த நிலைமையை பேணமுடியாதவாறு றோமன் கத்தோலிக்க வித்தியாலயம் கடும் எதிர்ப்பைக் காட்டியதுடன் மைதானத்தில் தமது ஆதிக்கத்தையும் நிலைநாட்டியது.

இரண்டாம்பாதி ஆட்ட நிறைவில் றோமன் கத்தோலிக்க வித்தியாலயம் 37:13 என்ற புள்ளிகள் அடிப்படையில் முன்னணியில் காணப்பட்டது.

மூன்றாவது பாதி ஆட்டத்தில் மெய்கண்டான் வெற்றியீட்டியது.

ஆட்ட முடிவில் இளவாலை மெய்கண்டான் வித்தியாலயம் 56:50 புள்ளிகள் என்ற அடிப்படையில் பருத்தித்துறை கலட்டி றோமன் கத்[illegible]க தமிழ் கலவன் பாடசாலையை வெ[illegible]பற்றது.

பருத்தித்துறை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை முதல் தடவையாக மாவட்ட மட்டத்தில் இடம்பெற்ற குழுநிலைப் போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றியீட்டியமை குறிப்பிடத்தக்கதாகும்.

மூன்றாம்இடத்திற்கான போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியும், நெடுந்தீவு மத்திய மகாவித்தியாலயமும் மோதிக்கொண்டதில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. (50-86)

சிறந்த தடகள வீரர்கள் தெரிவு

வலி.வடக்கு,ஏப்.25

தெல்லிப்பழைப் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடைபெற்ற தடகள விளையாட்டுப் போட்டிகளில் பின்வருவோர் சிறந்த வீர, வீராங்கனைகளாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள்.

சிறந்த கள வீரனாகத் தெல்லிப்பழை பூமா விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த ம.கோகுலதாஸும்,

சிறந்த தடகளவீரனாக அளவெட்டி டயானா விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த ப.மதுசாந்தும், சிறந்த கள வீராங்கனையாக மல்லாகம் ஆர்.டி.எஸ். விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த செ. கீர்த்திகாவும்,

சிறந்த தட வீராங்கனையாக அளவெட்டி விநாயகர் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த இ.ஜக்சனாவும்,

சிறந்த தடகள வீரனாக டயானா விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த ப.மதுசாந்தும் தெரிவுசெய்யப்பட்டார்கள். (50-86)

குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

நோயல் விமலேந்திரன் வெற்றிக்கிண்ணம்: கொக்குவில் இந்து அணி அதிர்ச்சித் தோல்வி

வலி.வடக்கு,ஏப்.25

நோயல் விமலேந்திரன் வெற்றிக்கிண்ணத்திற்காக வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி நடத்திய இருபதுக்கு இருபது கிரிக்கெட் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி அரையிறுதி ஆட்டத்தில் அதிர்ச்சித் தோல்விக்கு உள்ளாகியது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரியும் யாழ்ப்பாணக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி 09 விக்கெட்டுகளை இழந்து 159 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

ஆர்.நிருஜன் 50 ஓட்டங்களையும், பங்குஜன் 27 ஓட்டங்களையும், கே.நிரோஜன் 20 ஓட்டங்களையும், ஜனார்த்தனன் 17 ஓட்டங்களையும், ஜனுதாஸ் 12 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டார்கள்.

யாழ்ப்பாணக் கல்லூரியைச் சேர்ந்த நிரோஜன் 4 ஓவர்கள் பந்துவீசி 16 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், ஜோஜல்பிரன் 3 ஓவர்கள் பந்துவீசி 28 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும், கஜநாதன் 3 ஓவர்கள் பந்துவீசி 18 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி 18:3 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 160 ஓட்டங்களை பெற்று வெற்றி இலக்கை அடைந்தது.

12 பந்துகளில் 18 ஓட்டங்களை யாழ்ப்பாணக் கல்லூரி பெறவேண்டும் என்ற நிலையில் குறிப்பிட்ட நேரத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி பந்துகளை வீசவில்லையெனத் திடீரென 12 ஓட்டங்கள் தண்டனையாக எதிரணிக்கு வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

பிரசாந் ஆட்டமிழக்காது 52 ஓட்டங்களையும், நிகேதன் 29 ஓட்டங்களையும், கோமளதரன் 18 ஓட்டங்களையும், ஜோஜல்சிகான் 14 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டார்கள்.

கொக்குவில் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த கே.நிரோஜன் 4 ஓவர்கள் பந்துவீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 21 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும், பவீந்திரன், தீபன், எஸ்.நிரோஜன், கார்த்திக் முறையே 20, 25, 26, 28 ஓட்டங்களைக் கொடுத்துத் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார்கள். (50-86)

நெடுந்தீவு கடற்படையினரால் புதுவருடத்தை முன்னிட்டு நடத்திய விளையாட்டுப் போட்டிகளில் கரப்பந்தாட்டம், கிடுகு பின்னுதல், சாக்கு ஓட்டப் போட்டிகளில் கலந்துகொண்டவர்களையும், நெடுந்தீவு கடற்படை அதிகாரி யானைக்குக் கண்வைக்கும் போட்டியில் கலந்துகொள்வதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: லக்ஸ்மன்)

யாழ். ஆஸ்பத்திரியில் இருந்து 4 வைத்தியர்கள் சாவகச்சேரிக்கு நேற்று அனுப்பிவைப்பு

யாழ்ப்பாணம், ஏப்.25

தென்மராட்சிப் பிரதேச நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கான மருத்துவ சேவைக்கென யாழ்போதனா வைத்திய சாலையில் இருந்து நான்கு மருத்துவ அதிகாரிகள் நேற்று முதல் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் மூவர் நேற்று கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர். இவர்கள் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் இருந்து தினமும் நலன்புரி நிலையங்களுக்கு செல்வதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

(1-207)

ஆலோசகர் தேவை

கல் உடைக்கும் ஆலை (STONE CRUSHER), அரிசி ஆலை (RICE MILL) ஆரம்பிப்பதற்கு ஆலோசனை வழங்கக் கூடியவர்கள் தேவை.

தொடர்பு:0041 792950595-(SMS)
0041 783029130-SMS

மல்டிமீடியா பயிற்சிநெறிகள்

கொம்ப்யூட்டர் டிப்ளோமா கற்கை நெறிகளுக்கான விசேட பிரிவுகள் நாளை முதல் ஆரம்பமாகின்றன.

நீங்களும் கிராபிக்ஸ் துறையில் No 1 ஆகனுமா..?
Video Editing & other Effects
காலம் : 3 மாதம்

இன்றைய உலகில் எவ்விடத்திற்கு சென்றாலும் உடனடி வேலைவாய்ப்பை வழங்கும் ஒரே கல்வியாக திகழ்வது மல்டிமீடியா மட்டுமே....

இந்தியாவில் கிராபிக்ஸ் அனிமேஷன் துறைக்காக போட்டி நடாத்தும் ஒரே நிறுவனமான... CSC-SOFTVIEW VISUAL COMMUNICATION வழங்கும் சர்வதேச தரச் சான்றிதழ்களை பெற்றுக்கொள்ளக் கூடிய பயிற்சி நெறியை எமது யாழ்நகரம் மற்றும் நெல்லியடி பயிற்சி மையங்களில் மேற்கொள்ளலாம்.

Advanced Diploma in Digital Pre-Press
ADDP

இலவச பாடநூல்களுடன் கூடிய கற்கை நெறி
100% Practical

Diploma in Digital Video Production
DVP

Certificate in Adobe Photoshop
2 Months

ASIAN- CSC COMPUTER EDUCATION

2G,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் Tel 222-5677

கிளை : கொடிகாமம் வீதி, நெல்லியடி
Tel 077-3122198

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், இலங்கை.

பட்டப்பின் படிப்புகள் பீடம்

முதுகலைமாணி சைவசித்தாந்தம்

முதுகலைமாணி தமிழ்

கல்வியாண்டு 2009/2010 (அணி II)

புதிய அனுமதிகள்

மேற்படி சுயகொடுப்பனவுக் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

அனுமதிக்கான தகைமைகள்

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் ஏதாவது ஒரு கற்கைநெறியிற் பட்டதாரியாக உள்ள எவரும் விண்ணப்பிக்கலாம். மேலும் பல்கலைக்கழக மூதவையால் ஏற்கப்படக்கூடிய வேறு தகுதிகளும் அனுபவமும் உடையவர்களின் விண்ணப்பங்களும் பரிசீலிக்கப்படலாம்.

கற்கைக் காலம் : ஒரு வருடம்

சனி, ஞாயிறு கிழமைகளில் விரிவுரைகள் நடைபெறும்

மொழி மூலம்: தமிழ்

அனுமதி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் நடத்தும் நேர்முகப் பரீட்சையின் அடிப்படையில் மாணவர்கள் தெரிவுசெய்யப்படுவர்.

விண்ணப்பப் படிவம் பெறும்முறை

பட்டப்பின் படிப்புகள் பீட அலுவலகத்தில் பணம் கட்டும் பத்திரத்தைப் பெற்று மக்கள் வங்கி, யாழ்.பல்கலைக்கழக கிளையில் ரூபா 100/- செலுத்திய பற்றுச்சீட்டை பீட அலுவலகத்தில் சமர்ப்பிப்பதன் மூலம் விண்ணப்பப்படிவங்களை நேரில் பெற்றுக் கொள்ளலாம்.

தபால் மூலம் பெற விரும்புவோர் நிதியாளர், யாழ்.பல்கலைக்கழகம் எனும் பெயருக்கு ரூபா 100/- பெறுமதியான காசுக்கட்டளையுடன் ரூபா 5/- பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட சுய முகவரியிடப்பட்ட 23 X 10 செ.மீ. அளவுள்ள கடித உறையை உதவிப் பதிவாளர், பட்டப்பின் படிப்புகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்புவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் கற்கைநெறியைக் குறிப்பிட்டு பதிவுத் தபால் மூலம் அல்லது நேரில் 22.05.2009 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்புதல் வேண்டும்.

23.04.2009 பதிவாளர்.

கைதடி விக்னேஸ்வரா மாணவர்களுக்கு

யாழ்ப்பாணம், ஏப்.25

கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் தரம் 05, தரம் 09, தரம் 11 ஆகிய வகுப்புக்களில் கற்கும் மாணவர்களையும் கற்பிக்கும் ஆசிரியர்களையும் நாளை மறுதினம் திங்கட்கிழமை பாடசாலைக்கு வருகை தருமாறு அதிபர் ச.ஞானலிங்கம் கேட்டுள்ளார்.

(1-207)

மரண அறிவித்தல்

சுப்பிரமணியம் கனகசபை

புங்குடுதீவு, 2 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் கனகசபை (24.04.2009) வெள்ளிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் கனடாவை வசிப்பிடமாகக் கொண்ட நாகம்மாவின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் -தில்லையம்மா தம்பதியரின் மகனும் வைத்திலிங்கம் -சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் கனடாவை வசிப்பிடமாகக்கொண்ட காலஞ்சென்ற பரமேஸ்வரன் மற்றும் ஜெகதீஸ்வரன், ஸ்ரீ கௌரி, மகேஸ்வரன், ஜெயகௌரி ஆகியோரின் தந்தையும் கௌசல்யா, சறோஜினிதேவி, தெய்வகுமாரன், உஷா, சசீகரன் ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற இராசம்மா மற்றும் இரத்தினம், சண்முகம் ஆகியோரின் சகோதரரும் மயில்வாகனம் காலஞ்சென்ற சின்னையா மற்றும் பரமேஸ்வரியின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் கனடாவில்நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மயில்வாகனம்
(மைத்துனர்).

பழைய தபாற்கந்தோர்,
குளப்பிட்டிச் சந்தி, கொக்குவில்.

இலங்கை வங்கி

சுன்னாகம் மேற்தரக் கிளை

சனிக்கிழமை வங்கிச் சேவை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு

இடம்: இலங்கை வங்கி, சுன்னாகம் மேற்தரக்கிளை
காலம்: இன்று (25.04.2009) சனிக்கிழமை
நேரம்: காலை 9.30 மணி

நிகழ்வை ஆரம்பித்து வைப்பவர்: ந.சிவரட்ணம் அவர்கள்
(உதவிப் பொதுமுகாமையாளர், இலங்கை வங்கி, வடபிராந்தியம்)

மேற்படி வங்கிச் சேவையில் சகலவிதமான வங்கி நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். எனவே இலங்கை வங்கி வாடிக்கையாளர்கள் அனைவரும் இச்சேவையைப் பயன்படுத்தி உங்கள் வளர்ச்சியை மேம்படுத்த அழைக்கின்றோம்.

தேசத்தின் வங்கியாளர் இலங்கை வங்கி முகாமையாளர்

31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

அமரர் குண்டுமணி திரவியநாதன்

(உப அதிபர், யா/இமையாணன் அ.த.க.வித்தியாலயம்)

தோற்றம் 22.06.1956 மறைவு 27.03.2009

கடந்த 27.03.2009 அன்று இறைபதம் அடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (26.04.2009) ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணி அளவில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும்மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

குடும்பத்தினர்.
நாவலடி, உடுப்பிட்டி.

கல்லறையா கண்ணீரா....!

31 ஆம் நாள் கண்ணீரலைகள்

பிறப்புக் கடல்
12
*
04
*
1932

அமைதிக் கடல்
26
*
03
*
2009

திருமதி இரத்தினம்மா துரை

(இணுவில் மணியக்கா)

அன் பெனும் உருவிலே பண்பெனும் வடிவிலே
பரணி என்னும் உலகிலே பார் போன்றவளே...!
பத்துமாதம் எமை சுமந்து இன்று பரிதவித்து நிற்கும்
உன் பிள்ளைகளின் முகம் காணாது
எங்கே அம்மா பறந்து சென்றாயம்மா...! சொல்லம்மா
ஈர் நான்கு திசையிலும் உம் பிள்ளைகளின் முகம் காணாது
அனிச்சம் பூக்களாக உறங்கி விட்டோமம்மா...? அன்று
வழிமேல் விழி வைத்து எம் வரவை எதிர்பார்த்து நிற்கும்
அந்தக் காலங்களை எப்படியம்மா மறக்கமுடியுமம்மா
சொல்லம்மா...! சொல்லிலே வடிக்க முடியாதம்மா!

அன்னாரின் ஆத்ம சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

மஞ்சத்தடி, இணுவில் கிழக்கு,
இணுவில்.

பிள்ளைகள், மருமக்கள்,
சகோதரர்கள், பேரப்பிள்ளைகள்.

மோதல் பகுதியிலிருந்து சிவிலியன்கள் வெளியேற இரு தரப்பினரும் அனுமதிக்காவிட்டால் உயிரிழப்புகள் அதிகரிக்கும் நிலை உருவாகும்

அவுஸ்திரேலியா எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 25

''இலங்கையின் வட பகுதியில் மோதல்கள் நடைபெறும் பிரதேசத்திலிருந்து கடந்த 20 ஆம் திகதி முதல் பல்லாயிரக் கணக்கான சிவிலியன்கள் வெளியேறுவதற்கு வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கது.''

- இவ்வாறு அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் ஸ்டீபன் ஸ்மித் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஸ்டீபன் ஸ்மித்தால் வெளியிடப்பட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

இலங்கை அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே புதிதாக மோதல்கள் நடைபெறுவது அதிகரித்துள்ள நிலையில், அப்பிராந்தியங்களில் தொடர்ந்தும் பல சிவிலியன்கள் சிக்கியுள்ளமை குறித்து அவுஸ்திரேலியா ஆழ்ந்த கவலையடைந்துள்ளது.

ஏற்கனவே, பல சிவிலியன்கள் கொல்லப்பட்டுள்ளமை வருந்தத்தக்கது. மோதல்கள் நடைபெறும் வலயத்திலிருந்து சிவிலியன்களை வெளியேற இரு தரப்பினரும் அனுமதிக்காவிட்டால் மேலும் உயிரிழப்புகள் இடம்பெறுவது தவிர்க்க முடியாதது.

தாக்குதல்களை நடத்துவதை நிறுத்தவும் மோதல்கள் நடைபெறும் இடங்களிலிருந்து சிவிலியன்களை பாதுகாப்பாக வெளியேற அனுமதிக்கும் வகையில் புதிய போர் நிறுத்தமொன்றை அறிவிக்கவும் இலங்கை அரசிற்கு அவுஸ்திரேலியா மீள அழைப்பு விடுக்கிறது. அத்துடன், அரசு உள்ளூரில் இடம்பெயர்ந்தவர்களுக்கான முகாம்களை சிவிலியன்கள் பாதுகாப்பாக சென்றடைவதை உறுதிப்படுத்தவும் வேண்டும்.

அத்துடன், மேற்படி முகாம்கள் சர்வதேச மனிதாபிமான நியமத் தராதரங்களுக்கு அமைவாக நிர்வகிக்கப்படவும் வேண்டும்.

மேலும், மோதல்கள் நடைபெறும் வலயத்திலிருந்து சிவிலியன்களை வெளியேற்றும் செயற்குழுமமும் முகாம்களை நிர்வகிப்பதும் செஞ்சிலுவைச் சங்கத்தின் சர்வதேச சபை மற்றும் ஐக்கிய நாடுகள் அதிகாரிகளால் கண்காணிப்புக்குட்படுத்தப்பட வேண்டும்.

மேற்படி நடவடிக்கைகள் தனது சிவிலியன்களை பாதுகாப்பதற்கான இலங்கை அரசின் அர்ப்பணிப்பை எடுத்துக் காட்டுவதாக அமையும்.

அத்துடன், விடுதலைப் புலிகளும் சிவிலியன்களை வெளியேறுவதற்கு அனுமதிக்க வேண்டும். மோதல்கள் நடைபெறும் வலயத்திலோ அன்றி அதற்கு வெளியிலோ சிவிலியன்கள் இலக்கு வைக்கப்படுவது உள்ளடங்கலான பயங்கரவாத தந்திரோபாயங்கள் பயன்படுத்துவதை நாம் மீளவும் கண்டிக்கிறோம்.

மோதல்கள் நடைபெறும் பகுதியில் இருப்பவர்களின் சுகாதாரம் மற்றும் நலன்கள் என்பன தொடர்பில் அவுஸ்திரேலியா மிகுந்த கவலையடைந்துள்ளதுடன் மேற்படி பிரதேசங்களுக்கு சரியான உணவு மற்றும் மருத்துவ விநியோகங்கள் சென்றடைவதை உறுதிப்படுத்த முக்கிய முன்னுரிமை கொடுக்குமாறு அனைத்து தரப்பினருக்கும் அழைப்பு விடுக்கிறது.

அவுஸ்திரேலியாவானது இந்த பிரச்சினை குறித்து சர்வதேச 'ரீதியான பங்கேற்பை பேணி வருவதுடன், ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்தின் பிரதிநிதி விஜய் நம்பியாரின் விஜயம் உட்பட இலங்கையின் நிலைமை குறித்து ஐக்கிய நாடுகள் சபை நெருங்கிய கவனத்தை செலுத்தி வருவதற்கு வரவேற்பளிக்கிறது.

இலங்கைத் தமிழ்ப் பிரஜைகள் மற்றும் ஏனைய சிறுபான்மை சமூகங்களை இணைத்து பயனளிக்கக் கூடிய அரசியல் சீர்திருத்தம் ஒன்றை முன்னெடுக்க வேண்டும் என இலங்கை அரசிற்கு மீளவும் அழைப்பு விடுக்கிறோம்.

அனைத்து இலங்கையர்களினதும் நியாயமான அபிலாஷைகளுக்கு இணங்க அரசியல் தீர்வொன்றை எட்டுவது இலங்கையின் நீண்டகால பாதுகாப்புக்கும் சுபீட்சத்துக்கும் அவசியமாகும் என அந்த அறிக்கையில் ஸ்டீபன் ஸ்மித் மேலும் தெரிவித்திருந்தார். (சி)

வவுனியா வைத்தியர் படுகொலைக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி கண்டனம்

கொழும்பு, ஏப்ரல், 25

வைத்திய கலாநிதி மீரா மொஹிதீன் படுகொலையை தமிழர் விடுதலைக் கூட்டணி வன்மையாகக் கண்டித்துள்ளது.

அன்னார் வவுனியா மக்களுக்கு இன, மதபேதமின்றி சேவையாற்றி நற்பெயர் பெற்றவர். அவரின் இக்கொலையானது மக்களின் சிந்தனையைத் திசைதிருப்பும் நோக்கோடு செய்யப்பட்டிருக்கின்றது என்பது எவராலும் மறுக்கமுடியாத உண்மை யாகும் என்று கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரி வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார். இது குறித்து அதில் மேலும் தெரிவித்தவை வருமாறு :-

வவுனியா பிரதேசத்தில் மகப்பேற்று வைத்திய நிபுணராக இவர் ஒருவரே இருந்தமையால், இவரின் சேவையை இழந்த மக்கள் இனி அநுராதபுரம்வரை பல சிரமங்களுக்கு மத்தியில் பிரயாணம் செய்தே வைத்திய சேவையைப் பெறும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

சிரமத்தைப் பாராது இரவு பகலாகக் கடமையாற்றிய மீரா மொஹிதீன் அண்மைக்காலமாக இடம்பெயர்ந்த மக்கள் வவுனியாவிற்கு பெருமளவில் வந்தபோதும் சளைக்காது இரவு பகலாகக் கடமையாற்றியவர்

மனச்சாட்சியற்ற, முட்டாள்தனமான இக்கொலை பல மக்களுக்கு துன்பத்தையும் அசௌகரியத்தையும் ஏற்படுத்தியுள்ளது. நன்றியோடு போற்றப்படவேண்டிய வைத்தியரைக் கொலை செய்ததன் மூலம் தமிழர்கள் வெட்கித் தலைகுனியும் அளவிற்கு ஈனச் செயலைப் புரிந்திருக்கிறார்கள்.

1994 ஆம் ஆண்டு ஒருதடவை இவர் ஆயுதக் குழுவால் கடத்திச் செல்லப்பட்ட போது மக்கள் பெரும் கண்டனம் தெரிவித்திருந்தனர். இன்று இவரைப் பலி எடுத்தமையை இன, மத வேறுபாடின்றி சகல இன மக்களும் கண்டிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக என்று தெரிவிக் கப்பட்டுள்ளது.

கொடிகாமத்தில் தங்கியிருந்தவர்களில் ஒரு தொகுதியினர் வடமராட்சிக்கு மாற்றம்

யாழ்ப்பாணம், ஏப்.25

இடம் பெயர்ந்த மக்கள் தங்கவைக்கப் பட்டுள்ள கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் இருந்து ஒருதொகுதி மக்கள் நேற்று வடமராட்சியில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள நலன்புரி முகாமிற்கு மாற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்கள் பெரும் இடநெருக்கடியைத் தவிர்க்கும் பொருட்டு மக்கள் இடம் மாற்றப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களின் தேவைகளை இனங்கண்டு அரசசார்பற்ற நிறுவனங்கள் அரச திணைக்களங்கள் செயற்பட்டு வருகின்றன.

செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்கள் மலசலகூடம் அமைப்பதிலும் அகதிகளுக்கான ஐ.நா தூதரகம் பொதுமக்களுக்கு தேவையான பொருள்களான பாய், தண்ணீர் பெரல், வாளி, கைலாம்பு, படுக்கை விரிப்பு, சாப்பாட்டுத் தட்டுகள் என்பவற்றை வழங்குவதில் ஈடுபட்டுள்ளன.

முகாமின் சுத்திகரிப்புப் பணிகள், குடி தண்ணீர் வசதிகள், மக்கள் குளிக்கும் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டதுடன் மக்களுக்கான காலை, மதிய உணவுகளும் வழங்கப்படுகின்றன. ஆனால் உணவு வகைகள் காலையிலும் நண்பகலும் உரிய நேரத்திற்கு வழங்கப்படுவதில்லை எனவும் மக்களால் தெரிவிக்கப்படுகிறது. (1-207-131)

மரண அறிவித்தல்

செல்லையா சிவரத்தினம்

உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சீவரத்தினம் நேற்று (24.04.2009) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - தங்கம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் மாலினி, மனோகரன் (நல்லூர் பிரதேசசபை), பத்மலோசனி (ஆசிரியை, நீர்வேலி சி.சி.த.க.பாடசாலை), கமலதாஸ் (ஆசிரியர் அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் பிரபாகரன் (ஆசிரியர், யாழ். மத்திய கல்லூரி) வசந்த மாலா (கணக்காளர் வலி.கிழக்குப் பிரதேச செயலகம்), காந்தரூபன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் பரமலிங்கம் (டென்மார்க்), திருப்பதி, இராசலட்சுமி, காலஞ்சென்ற இராஜரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.04.2009) சனிக்கிழமை காலை 8மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முற்பகல் 10 மணியளவில் நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி மத்தி,
நீர்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்.

லயன்ஸ் கழக நிதியத்தின் ஆரம்ப நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம், ஏப்.25

சர்வதேச லயன்ஸ் கழக நிதிய ஆரம்ப நிகழ்வு இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மாவட்ட இணைப்பாளர் லயன் க.மு.பத்மநாதன் தலைமையில் யா/நாவலர் மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிதியத்தால் ஒவ்வொரு உதவி அரசாங்கப் பிரிவுகளில் இருந்தும் பாடசாலை செல்லாத விழிப்புலனற்ற மாணவர்களின் விவரங்கள் சேகரிக்கப்பட்டு அவர்களுக்கு கல்வி கற்கத் தேவையான உதவிகள் வழங்கப்படவுள்ளன.

இந்த நிதியத்தின் யாப்பும் இன்றைய தினம் ஆராய்ந்து அங்கீகரிக்கப்படவுள்ளது. (06)

தேசிய இளைஞர் மன்ற போட்டிகள்

நல்லூர், ஏப்.25

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் இளைஞர் விருது வழங்கும் போட்டிகள் யாழ்.மாவட்டத்தில் தற்சமயம் நடத்தப்பட்டுவருகின்றன.

யாழ்ப்பாணம் விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தில் இன்று சனிக்கிழமை ஓகன், மௌன நடிப்புக்கான போட்டிகளும் நாளை ஞாயிற்றுக்கிழமை பரதநாட்டியம், கிராமிய நடனப் போட்டிகளும் நடைபெறும் என மாவட்ட இளைஞர் சேவை மன்ற அதிகாரி ஏ.சக்திவேல் தெரிவித்தார். (1-111)

மரண அறிவித்தல்கள்

சிவசம்பு நாகராசா

மண்கும்பான், 4ஆம் வட்டாரத்தை நிரந்தர வதிவிடமாகவும் கொட்டடி, சீனிவாசகம் வீதியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட சிவசம்பு நாகராசா நேற்று (24.04.2009) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசம்பு-இராசம்மா ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்லையா-நாகம்மா தம்பதியினரின் மருமகனும் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் பேரின்பநாதன், அருணகிரிநாதன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் காந்தரூபி, விஜிதா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.04.2009) சனிக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வில்லூன்றி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சீனிவாசகம் வீதி,
கொட்டடி.

தகவல்:
அருணன் (மகன்).

வேலுப்பிள்ளை நடராசா

சங்கத்தானை, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் குஞ்சுப்பரந்தன், நீவிலை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை நடராசா நேற்று (24.04.2009) வெள்ளிக்கிழமை வவுனியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - செல்லாச்சி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சின்னத்தங்கத்தின் அன்புக் கணவரும் பேரின்பநாதன் (ராசன்), தேவபாலன் (கிளியன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் புஸ்பதேவி (லதா), ஞானாம்பிகை (ஞானம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் தனுஷா, தர்ஷணா, தர்ஷன், கஜானி, கிருஸ்ணாயினி, கஜவதனன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.04.2009) சனிக்கிழமை வவுனியாவில் நடைபெறவுள்ளன. இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பேரின்பநாதன் (ராசன்),
தேவபாலன் (கிளியன்)
(மகன்மார்).

சவரிமுத்து அலோசியஸ் (தங்கையா அண்ணன்)

சில்லாலையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சவரிமுத்து அலோசியஸ் நேற்று (24.04.2009) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சவரிமுத்து-அக்னேஸ் தம்பதிகளின் அருமை மகனும் விபீனா மரியறாணியின் அன்புக் கணவரும், றமேஸ், டிலான், றஜித்தா, டினேஸ், பிரியந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சியாமளா, சுரேஸ், ஜீவனி, தனுஜா ஆகியோரின் மாமனாரும் S.A.யோசவ், ஜோன் ஒவ் ஆர்க், வுளோறிமெ்ன்ட், ராணியோசவ் (Rev.FR), பீற்றர் பொன்கலன் (O.M.I), பற்றிமாராஜா, ஜெகநாதன், அன்ரன், ஜொய்சி ஆகியோரின் அருமைச் சகோதரருமாவார்.

அன்னாரின் பூதவுடல் பொறளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு நாளை (26.04.2009) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

201/1, 3ஆம் குறுக்குத்தெரு,
O.L.R *அவென்யூ,*
யாழ்ப்பாணம்.

தகவல்:
ராணியோசவ்
(சகோதரி).

தமிழர்களிடம் வாக்குக் கேட்க சோனியாவுக்குத் தகுதியில்லை!

எரிமலையாய்ச் சீறுகிறது தமிழ்த் திரையுலகம்

சென்னை, ஏப்.25

இலங்கையில் போர் நிறுத்தம் செய்ய உத்தரவிடாமல் தமிழ்நாட்டுக்கு வந்து தமிழர்களின் வாக்குகளைக் கேட்க காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, பிரதமர் மன்மோகன், அமைச்சர் பிரணாப் முகர்ஜி ஆகியோருக்குத் தகுதி இல்லை. மீறி அவர்கள் தமிழ்நாட்டுக்கு வந்தால், எங்கள் முழு எதிர்ப்பைக் காட்டுவோம் - என்று இயக்குநர் பாரதிராஜா தலைமையில் நடந்த தொடர் முழக்கப் போராட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பாரதிராஜா தலைமையில் தொடர் முழக்கப் போராட்டம் நேற்றுமுன்தினம் தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபை (பிலிம்சேம்பர்) வளாகத்தில் நடந்தது.

இதில் தமிழ்த் திரைப்பட இயக்குநர்கள் அனைவரும் நேற்றுமுன்தினம் காலை 9 மணிக்கு அங்கு திரண்டு வந்தார்கள்.

சட்டத்தரணிகள், மாணவர்கள், உதவி இயக்குநர்கள், திரைப்படத் தொழிலாளர்கள் ஆகியோர் திரளாக இந்தப் போராட்டத்தில் பங்கேற்றனர்.

இலங்கையில் கொல்லப்பட்ட ஈழத் தமிழர்களுக்கு, அனைவரும் எழுந்து நின்று ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தினர்.

இதில் நடிகர் சத்தியராஜ் பேசும்போது -

விடுதலைப் போராட்டம் இலங்கையில் நடந்துகொண்டுதான் இருக்கும். தமிழர்களை படுகொலை செய்பவர்கள் நிம்மதியாக வாழவே முடியாது. ஈழம் வெளிநாடு அல்ல. நம் நாடு. அங்கு போக ஆசைப்படுகிறேன் - என்றார்.

இயக்குநர் அமீர் பேசும்போது -

இதைப் பேசக்கூடாது, அதைப் பேசக்கூடாது, பேசினால் இறையாண்மைக்கு எதிரானது என்று மிரட்டுகிறார்கள். நாங்கள் வாக்குப் போடுவது அரசியல் வாதிகளுக்குத்தானே. உங்களிடம்தானே எங்கள் கோரிக்கையை வைக்க முடியும். ஜப்பான்காரனிடமும், ஐ.நா. சபையிலுமா கேட்க முடியும்?

அழிந்துகொண்டிருக்கும் ஈழத் தமிழர்களை காப்பாற்ற கடைசி நிமிட வாய்ப்பு இருக்கிறது. அதை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் - என்றார்.

இயக்குநர் சேரன் பேசும்போது -

தமிழனை வாழவிடு. தமிழன் வாழ்வதற்கு வழி ஏற்படுத்திக்கொடு. இல்லையென்றால, எங்களைத் தனியே விடு. இதுதான் எங்களுக்கு வேண்டும். நாம் முக்கியமான முடிவு எடுக்க வேண்டிய தருணத்தில் இருக்கிறோம். தேசத்தைச் சுரண்டுகின்ற அரசியல்வாதிகளைத் தூக்கி எறிய வேண்டும் - என்றார்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை பாரதிராஜா படித்தார். அந்தத் தீர்மானங்கள் வருமாறு -

இலங்கையில் யுத்தத்தை நிறுத்துவதற்கு இந்திய அரசு எந்த முயற்சியும் எடுக்காமல், அழித்தொழிக்கும் இந்த இனப்போருக்கு ஆயுதம் கொடுத்து உதவுகிறது என்பது எந்த வரலாறும் மன்னிக்க இயலாத துரோகம்.

இப்போதும் ஒரு வாய்ப்பிருக்கிறது. இந்த நொடி போர் நிறுத்தம் வேண்டுமென்று இந்திய அரசு, இலங்கை அரசுக்கு ஆணையிட முடியும். இன்று இந்தியாவை ஆண்டுகொண்டிருக்கும் ஆளும்கட்சி அதை செய்துவிட்டு, தமிழகத்துக்கு வந்து தமிழக மக்களிடம் வாக்குகளை. கேட்பதுதான் நியாயமானது. நேர்மையானது.

போர் நிறுத்தம் செய்து இனப்படுகொலையைத் தடுத்து நிறுத்தாமல் இந்திய அரசின் பிரதமர் மன்மோகன்சிங்கும், வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜியும், ஆட்சியில் இருக்கும் கட்சியின் தலைவர் சோனியா காந்தியும் தாங்களாகவே தமிழகத்துக்கு வந்து வாக்குக் கேட்கும் முயற்சியை மனச்சாட்சியின் பேரால் நிறுத்திக்கொள்ள வேண்டும் என ஒருமித்த குரலில் முன்மொழிகிறோம்.

இந்த எங்களது உணர்வுபூர்வமான. கோரிக்கையை நிராகரித்துவிட்டு நீங்கள் தமிழகம் வந்தால், எங்கள் முழு எதிர்ப்பை காட்டவேண்டிய சூழ்நிலைக்கு. நாங்கள் தள்ளப்படுவோம் என்பதை எச்சரிக்கையாக தெரிவிக்க விரும்புகிறோம்.

எங்கள் தீர்மானத்தில் ததும்பும் உணர்வுகளை அறிந்துகொண்டு, உணர்ந்துகொண்டு, புரிந்துகொண்டு உடனடி போர் நிறுத்தம் செய்ய உத்தரவிட வேண்டுமென வற்புறுத்துகிறோம்.

இலங்கைப் பிரச்சினைக்காக யாரும் தீக்குளிக்க வேண்டாம் - ஜெயலலிதா

மதுரை, ஏப். 25

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக யாரும் உயிர்துறக்க வேண்டாம் - என்று அ.தி.மு.க. பொதுச் செயலரும் முன்னாள் முதல்வருமான ஜெயலலிதா கூறியுள்ளார்.

மதுரை மக்களவைத் தொகுதி மார்க்சிஸ்ட் வேட்பாளரை ஆதரித்து வியாழக்கிழமை நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் அவர் பேசியவை வருமாறு -

தி.மு.க. சார்பில் அறிவிக்கப்பட்டுள்ள வேலை நிறுத்தம் இலங்கைத் தமிழர்களுக்காக அல்ல. சிவகாசி, மதுரையில் நடைபெறும் அ.தி.மு.க. கூட்டணி தேர்தல் பிரசாரத்தை முடக்கிடவே ஆகும்.

தமிழகத்தில் 5 முறை முதல்வராகி இருந்தவர் இவ்வாறு செயற்படுவது வருத்தம் அளிக்கிறது. அ.தி.மு.கவை குறைகூறவும், அரசியல் ஆதாயம் தேடவும் வேலைநிறுத்தம் அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில் வேலைநிறுத்தத்தைக் கண்டித்து அ.தி.மு.க. தொண்டர் பண்ருட்டி மணி தீக்குளித்து உயிர் நீத்துள்ளார். அவரது குடும்பத்துக்கான பாதுகாப்பை நானும், கட்சியும் வழங்குவோம்.

இவ்வாறு கூறிவிட்டு 2 நிமிடம் மணிக்காக அனைவரும் எழுந்து மௌன அஞ்சலி செலுத்துமாறு அவர் கேட்டுக்கொண்டதால் அனைவரும் அஞ்சலி செலுத்தினர். பின்னர் பேச்சைத் தொடர்ந்தார்.

உயிர்த்தியாகம் செய்தவருக்கு நிதி அளிக்கப்படும். ஆனால், இத்தகைய செயலில் யாரும் ஈடுபடக் கூடாது. நாம் அனைவரும் உயிருடன் இருந்து இலங்கைத் தமிழர் நலனுக்காக பாடுபடவேண்டும் - என்றார்.

ராஜிவ்வின் ஒருயிருக்கு இன்னும் எத்தனை லட்சம் ஈழத்தமிழர் இரையாக வேண்டும்?

சோனியாவே சொல்லிவிடுக என்கிறார் புலமைப்பித்தன்



சென்னை, ஏப். 25

ஒரு ராஜிவ் உயிருக்கு இன்னும் எத்தனை லட்சம் ஈழத் தமிழர்கள் இரையாக வேண்டும்? புறந்தே வெளுத்து அகத்தே 'கறுத்துள்ள சோனியாவே சொல்லிவிடுங்கள் - என்று கவிஞர் புலமைப்பித்தன் கேள்வியெழுப்பியுள்ளார்.

திரையுலகத் தமிழீழ ஆதரவு இயக்கத்தின் சார்பில் இலங்கையில் போர் நிறுத்தம் வலியுறுத்தி சென்னையில் நேற்றுமுன்தினம் நடந்த தொடர் முழக்கப்போராட்டத்தில் பேசும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

திரைப்பட இயக்குநர் மணிவண்ணன் பேசியவை வருமாறு -

புலியை நான் நம்புகிறேன் புலியை எனக்கு பிடிக்கும். புலியை நேசிக்கிறேன். புலிகளை வாழ வைக்க வேண்டும். நான் புலிகளை ஆதரிப்பேன். ஏனென்றால் புலி நமது தேசிய விலங்கு என நகைச்சுவையாகப் பேசினார்.

திரைப்படப் பாடலாசிரியர் தாமரை பேசியவை வருமாறு -

கலைஞர்கள், எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் ஆளுங்கட்சிக்கு ஆதரவான நிலையையே எடுக்கின்றனர்; நான் அப்படியில்லை; எதையும் வெளிப்படையாகப் பேசுவேன். தமிழ் ஒரு இனம்; மலையாளி ஒரு இனம். இந்தியன் எப்படி ஒரு இனமாகும்? இதைக் கேட்டால் இந்திய இறையாண்மைக்கு எதிராக பேசுகிறேன் என்கின்றனர். சின்னதாகக் கூட உணர்வுகளை வெளிப்படுத்த முடியவில்லை.



இலங்கைப் பிரச்சினை பற்றி பேசும்போது, ஜெயலலிதா எதிர்க்கட்சியில் இருப்பதால் எப்படி வேண்டுமென்றாலும் பேசலாம்; ஆட்சியிலிருப்பவர்கள் அப்படி பேச முடியாது என்று கருணாநிதி கூறுகிறார். இலங்கைப் பிரச்சினையில் இங்குள்ள மக்கள் நம்மால் எதுவும் முடியவில்லையே என்று சொல்லலாம்; முதல்வராக இருக்கும் கருணாநிதி, 'என்னால் முடியாது' என்று சொல்லலாமா? பதவியை இராஜினாமா செய்துவிட்டு மத்திய அரசிற்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தால் உங்கள் மதிப்பு மக்கள் மனதில் உயர்ந்திருக்கும்.

ஈழப் பிரச்சினையைப் பொறுத்தவரை ஜெயலலிதா அமாவாசை என்றால் கருணாநிதி அமாவாசைக்கு மறுநாள். சோனியா தான் எல்லாவற்றுக்கும் சூத்திரதாரி - என்றார்.

ஈழத்தமிழரைக் காக்க இலங்கைக்கு இந்திய இராணுவத்தை அனுப்புங்கள்

விஜயகாந்த் வலியுறுத்து

சேலம், ஏப். 25

இலங்கையில் தமிழர்களைக் காக்க இந்தியாவில் இருந்து இராணுவத்தை அனுப்ப வேண்டும் - என்று தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் கேட்டுக்கொண்டார்.

சேலத்தில் கட்சியின் தேர்தல் அறிக்கையை வியாழக்கிழமை வெளியிட்ட பின் செய்தியாளர்களுக்கு அவர் அளித்த பேட்டியிலேயே இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

மத்தியில் யார் ஆட்சி அமைப்பார்கள் என்று தற்போது கூற முடியாது. ஆனால், மாநிலக் கட்சிகளின் உதவியோடுதான் மத்தியில் ஆட்சி அமையும்.

இலங்கைத் தமிழர்களுக்காக தமிழகத்தில் நடைபெற்ற பொது வேலைநிறுத்தம் கண் துடைப்பு. கருணாநிதி நேரில் டில்லி சென்று பிரதமருடன் பேசியிருக்க வேண்டும். எதிர்க்கட்சிகள்தான் இதுபோன்ற வேலைநிறுத்தத்தைச் செய்ய வேண்டும்.

இலங்கைத் தமிழர்களுக்காக இரண்டாவது முறையாக அனுப்பிய பொருள்கள் அவர்களைச் சென்றடையவில்லை. இனியாவது உணவுப் பொருள்கள், மருந்துகளை விமானம் மூலம் போட வேண்டும்.

அங்கு தமிழர்கள் மிகவும் இன்னலுக்கு ஆளாகியுள்ளனர். ஐ.நா. வலயம் இருந்தால் தமிழர்கள் அடைக்கலம் அடைவார்கள்.

இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்பட அரசியல் தீர்வுதான் நிரந்தர முடிவு. அங்குள்ள தமிழர்களைக் காக்க இந்தியாவில் இருந்து ராணுவத்தை அனுப்ப வேண்டும் - என்றார்.

கள்ளக்குறிச்சியில் தே.மு.தி.கவுக்கு எதிராக டி.ராஜேந்தர் நிற்கிறாரே என்று கேட்டதற்கு யார் வேண்டுமானாலும் தேர்தலில் போட்டியிடலாம் - என்றார்.

வெயில் தாங்காமல் 2 தேர்தல் அதிகாரிகள் ஒரிசாவில் மயங்கி விழுந்து உயிர் துறப்பு!

புவனேஸ்வர், ஏப்.25

ஒரிசா மாநிலத்தில் வெயில் கொடுமையால் தேர்தல் பணியில் ஈடுபட்டிருந்த 2 அதிகாரிகள் பலியாகினர்.

ஒரிசா மாநிலத்தில் வெயில் கடுமையாக உள்ளது. மாநிலத்தில் மக்களவைத் தேர்தலோடு சட்டப் பேரவைக்கும் நேற்றுமுன்தினம் 2ஆவது கட்டத் தேர்தல் நடந்தது. மயூர்பஞ்ச் மாவட்டத்தில் தேர்தல் பணியில் ஈடுபட்டிருந்த பித்ரா மோகன் முதுலி என்ற அதிகாரி வெயில் தாங்காமல் மயக்கமடைந்தார். சிறிது நேரத்தில் அவர் இறந்தார்.

இதேபோல, கியோன்ஜ்ஹார் மாவட்டம் கசிபுரா என்ற இடத்தில் தேர்தல் பணியில் இருந்த சோம்நாத் மொஹந்தி என்ற அதிகாரியும் வெயிலுக்கு பலியானார். இதைத் தொடர்ந்து ஒரிசாவில் கடந்த சில நாள்களாக வெயிலுக்குப் பலியானோர் எண்ணிக்கை 30ஆக உயர்ந்துள்ளது.

மயூர்பஞ்ச் மாவட்டம் உடாலா தொகுதியில் பணியாற்றிய 2 அதிகாரிகள் வெயில் தாங்காமல் மயக்கமடைந்தனர். அவர்களுக்கு சிகிச்சை அளிக்க [illegible] படுகிறது.

விளம்பரத்துறையில் ரூ.100 கோடி குவித்தார் உலக அழகி ஐஸ்வர்யா!

நடிப்பு வருமானம் தவிர்த்து

மும்பை, ஏப். 25

முன்னாள் உலக அழகியும் பொலிவுட் நடிகையுமான ஐஸ்வர்யா ராய், சர்வதேச அளவில் விளம்பரத் துறையில் தொடர்ந்து முதலிடம் வகிக்கிறார்.

உலகப் புகழ் பெற்ற பல்வேறு நிறுவனங்களுக்கு விளம்பரத் தூதராக ஐஸ்வர்யாராய் இருந்து வருகிறார். இவர் சுவிட்ஸர்லாந்தின் கைக்கடிகாரமான லாங்கின்ஸ், லக்ஸ் சோப் ஆகியவற்றுக்கு தொடர்ந்து 10 ஆண்டுகளாக விளம்பர அழகியாக உள்ளார்.

இதுதவிர, கோக்ககோலா, நக்ஷத்திரா, ஓரிஸ் உள்ளிட்ட விளம்பரங்களில் தொடர்ந்து தோன்றுகிறார். விளம்பரங்களில் நடித்ததன் மூலம் மட்டும் இதுவரை ரூ.100 கோடி சம்பாதித்துள்ளார்.

இதுதவிர பொலிவுட் மற்றும் ஹொலிவுட் படங்களில் நடிப்பதன் மூலம் இவர் பல கோடி ரூபா குவித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை விவகாரத்தில் கரிசனை காட்டுவதை மட்டுமே செய்யலாம்; வாய்ப்புக்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன

பிரதி வெளிவிவகார அமைச்சர் ஆனந்சர்மா

கொழும்பு, ஏப்ரல் 25

இலங்கையின் வன்னிப் பகுதியில் காணப்படும் மனிதாபிமான அவலம் குறித்த இந்தியாவின் கரிசணையை நேரடியாகத் தெரிவிப்பதற்காக இந்திய வெளிவிவகார செயலாளர் சிவ்சங்கர் மேனனும், தேசிய பாதுகாப்புச் ஆலோசகர் எம்.கே. நாராயணனும் நேற்று கொழும்பிற்கு திடீர் விஜயமொன்றை மேற்கொண்டனர்.

இதற்கிடையில் இலங்கை விவகாரத்தில் கரிசனை காட்டுவதை விட, அதற்கு அப்பால் எதனையும் செய்ய முடியாது. எமக்குள்ள வாய்ப்புக்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன என்று பிரதி வெளிவிவகார அமைச்சர் ஆனந்சர்மா தெரிவித்திருக்கிறார்.

வெள்ளிக்கிழமை 11.30 மணிக்கு கொழும்பை வந்தடைந்த இந்திய - தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணனும், வெளிவிவகார செயலாளர் சிவ்சங்கர் மேனனும் உடனடி பேச்சுகளுக்காக ஹெலிக்கொப்டர் மூலம் அலரிமாளிகைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இலங்கையின் வன்னிப் பகுதியில் காணப்படும் பேரவலம் குறித்து ஆராய்வதற்காக நேற்றுக் கொழும்பிற்கு திடீர் விஜயம் மேற்கொண்ட இந்திய வெளிவிவகார செயலாளர் சிவ்சங்கர் மேனனும், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணனும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் பலமணி நேரம் முக்கிய பேச்சுகளை மேற்கொண்டனர்- இதற்கிடையில்

இலங்கையின் வட பகுதியில் மோதல் நடைபெறும் பகுதிகளில் சிக்குண்டுள்ள மக்கள் எதிர்கொள்ளும் பாரிய மனிதாபிமான நெருக்கடி குறித்து வலியுறுத்தவே இந்தியா தனது பிரதிநிதிகளை அனுப்பியுள்ளது என புதுடில்லித் தகவல்கள் தெரிவித்துள்ளன. இதற்கிடையில்-

இலங்கை அரசை யுத்தநிறுத்த மொன்றை மேற்கொள்ளுமாறு புதுடில்லி கடுமையாக வலியுறுத்தி வருவதாக புதுடில்லிச் செய்திகள் தெரிவித்துள்ளன.

வெளிவிவகார செயலாளர் சிவ்சங்கர் மேனனும், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணனும் மோதல்களை முடிவிற்குக் கொண்டுவருமாறு அழுத்தங்களைக் கொடுப்பார்கள் எனத் தெரிவித்துள்ள புதுடில்லித் தகவல்கள் எனினும் இலங்கை அரசு இந்தியாவை செவிமடுக்குமா என்ற கேள்வியையும் எழுப்பியுள்ளன.

இலங்கையில் மோசமடையும் நிலை குறித்த தனது கரிசனையைத் தெரிவிப்பதற்கு அப்பால் புதுடில்லியால் எதனையும் செய்யமுடியாது. இந்தியாவிற்கான வாய்ப்புகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன என இந்திய பிரதி வெளிவிவகார அமைசசர் ஆனந் சர்மா என்.டி.டி. விக்கு தெரிவித்துள்ளார்.

இது அழுத்தம் கொடுக்கும் விடயமல்ல. நாங்கள் எங்கள் கவலையைத் தெரிவிக்க விரும்புகிறோம் என மேலும் தெரிவித்துள்ள அவர் இதற்குமேல் நாங்கள் என்ன இராஜதந்திர நடவடிக்கையை எடுக்க முடியும்? நாங்கள் காத்திரமான சகல இராஜதந்திர வழிமுறைகளையும் எடுத்து விட்டோம் எனத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜி வியாழக்கிழமை இலங்கையில் தொடரும் கொலைகள் குறித்து இந்தியா கவலையடைந்துள்ளது எனவும் - அனைத்து கொலைகளும் நிறுத்தப்பட வேண்டுமெனவும் அவர் தெரிவித்திருந்தார்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் சகலமோதல்களும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் ஒரு வார காலப்[illegible]ல் [illegible]விடுத்துள்ள மூன்றாவது உத்[illegible]பூர்வ அறிக்கை இதுவென்பது குறி[illegible]த்தக்கது. (அ)

கிராம அலுவலர்களைப் பதவி உயர்த்தும் நேர்முகப் பரீட்சை திங்களன்று செயலகத்தில்

யாழ்ப்பாணம், ஏப்.25

யாழ். மாவட்டத்தில் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் அடிப்படையில் கிராம அலுவலர்களை தரம் IIல் இருந்து தரம் Iற்கு பதவி உயர்த்துவதற்கான நேர்முகப்பரீட்சை நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9மணிமுதல் யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது. இந்த நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளவர்களின் விவரம் வருமாறு:-

- வேலணை - கே.பரமேஸ்வரன், எஸ்.இரத்தினேஸ்வரன், என்.தனபால சிங்கம், ஆர்.யோகேஸ்வரன்.
- காரைநகர் - ஆர்.திருப்புகலூர் சிங்கம், எஸ்.ஞானசேகரம்.
- யாழ்ப்பாணம் - கே.செல்வன்குமார், கே.விஜயரட்ணம்.
- நல்லூர் - திருமதி. ஆர்.இராகினி, திரு.எஸ்.சிறிஸ்கந்தராஜா.
- சண்டிலிப்பாய் - திரு.எல். அருள்ராஜ், திரு.எஸ்.அருள்ஞானந்தன்.
- சங்கானை - திருமதி. கே. லலிதாம்பாள், திரு. எஸ்.ஜீவராஜா.
- உடுவில் - திரு.பொ.ஜெயகரன், திரு. பி.பாலபத்மன், திரு.என்.தவயோகராஜன்.
- தெல்லிப்பழை - திரு.ஆர்.இந்திரஜித், திரு.என்.ரவீந்திரன்.
- தென்மராட்சி - திரு.கே.சுபாஸ் சந்திரபோஸ், திரு.கே.பரமானந்தன்.
- பருத்தித்துறை - திரு.எஸ்.டி.தேவகுமார், திரு.பி.குமரேசன்.
- மருதங்கேணி - திரு. எஸ்.தோமஸ் யூட்

(அ-1)

வன்னிக்கு ஐ.நா. மதிப்பீட்டுக் குழுவை அனுமதிக்கும் கோரிக்கைக்கு அரசிடம் இருந்து வியாழன் வரை பதில் இல்லை

கொழும்பு, ஏப். 25

ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான மதிப் பீட்டுக் குழுவை இலங்கைக்கு அனுப்பு வது தொடர்பாகவே கடந்த வாரம் இலங் கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த ஐக் கிய நாடுகள் செயலாளர் நாயகத்தின் பிர தம அதிகாரி விஜய் நம்பியார் அங்கு பேச்சினை மேற்கொண்டார் என ஐ.நா. தெரி வித்துள்ளது.

எனினும், இலங்கை அரசிடமிருந்து வியாழன் வரை சாதகமான பதில் கிடைக்கவில்லையென மனிதாபிமான விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் நாயகம் கத்தரின் பிரக் செய்தியாளர்களுக்கு வியாழக்கிழமை கருத்துத் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு வலயத்தினுள் சிக்கியுள்ள மக்களை வெளியேற்றுவது மற்றும் நிவாரண நடவடிக்கைகளை ஆரம்பிப்பது போன்ற நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்காக மதிப்பீட்டுக் குழுவொன்றிற்கு அனுமதி வழங்குமாறும் அவர் இலங்கை அரசைக் கோரியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் மதிப்பீட்டுக் குழுவிற்கு அனுமதி வழங்கப்பட்டால், இலங்கையிலுள்ள ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான ஒருங்கிணைப்பாளர் நீல் புஹுனே அதற்கு, தலைமை தாங்குவார் என்றும் தெரிவித்துள்ள அவர், மனிதாபிமான குழு வொன்று செல்வதற்கு முன்னர் பாதுகாப்பு மதிப் பீட்டு குழுவொன்று செல்லவேண்டியிருக்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

நலன்புரி நிலையங்களுக்கு கொண்டுவரப்படும் குடும்பங்கள் பிரிக்கப்படுவது, அவர்களது சுகாதார நிலை உட்பட பல்வேறு விடயங்கள் குறித்துக் கருத்து தெரிவித்துள்ளார். ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான உதவிச் செயலாளர் நாயகம் கத்தரின் பிரக், இலங்கை இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான மோதலில் சிக்குண்டுள்ள வன்னி மக்களின் நிலை குறித்து ஆழ்ந்த கவலை வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

இதுவரை முடிவு தெரிவிக்கப்படவில்லை

ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்தின் தலைமையதிகாரி விஜய் நம்பியார் ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான குழுவிற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராய்வதற்காகவே கடந்த வாரம் இலங்கை சென்றார்.

எனினும், மோதல் நடைபெறும் பகுதிகளுக்குச் செல்வதற்கோ அல்லது மோதல் நடைபெறும் பகுதிகளிலிருந்து தப்பிய மக்களை சோதனையிடுவதைக் கண்காணிப்பதற்கோ இதுவரை ஐக்கிய நாடுகளுக்கு அனுமதி வழங்கப்பட வில்லை.

ஐக்கிய நாடுகளின் மதிப்பீட்டுக் குழுவை அனுமதிப்பது குறித்த முடிவுகள் எதுவும் தென்படவில்லை. வெகுவிரைவில் மதிப்பீட்டுக் குழு அப்பகுதிக்குச் செல்ல முடியுமென கருதுகிறோம்.

மோதல் தீவிரமடைந்துள்ளது எனத் தகவல் வெளியாகியுள்ளதைத் தொடர்ந்து அங்கு நிலைமை மிகவும் நெருக்கடிகரமானதாக மாறியுள்ளது.

ஒரு லட்சம் பேர் வெளியேறியதை உறுதிசெய்ய முடியவில்லை

பொதுமக்கள் வாழும் பகுதிகளின் மீது இராணுவம் தொடர்ந்து ஷெல் தாக்குதலை மேற்கொள்ளும் அதேவேளை, விடுதலைப் புலிகளும், பொதுமக்கள் வெளியேறுவதை தடுக்கின்றனர்.

ஒரு இலட்சம் பேர் மோதல் நடைபெறும் பகுதிகளிலிருந்து வெளியேறியுள்ளனர் என அரசு மதிப்பிடுகின்றது. எனினும், இதனை உறுதி செய்ய எம்மிடம் வழியில்லை.

ஐக்கிய நாடுகளும், செஞ்சிலுவைக் குழுவும் மோதல் நடைபெறும் பகுதிகளுக்குச் செல்வதற்கான அனுமதியைத் தொடர்ந்து கோருகின்றன. மேலும் முகாம்களுக்குச் செல்லும் மக்கள் எவ்வாறு நடத்தப்படுகின்றனர் என்பதை அவதானிப்பதற்கான அனுமதியையும் கோரியுள்ளனர்.

மனிதாபிமான விவகாரங்களுக்கான ஒருங்கிணைப்பு அலுவலகம் வன்னியிலும், முகாம்களில் உள்ளவர்களின் போஷாக்கு, சுகாதார நிலை குறித்து கவலையடைந்துள்ளது.

முகாம்களுக்குச் சென்றதும் குடும்பங்கள் பிரிக்கப்படுவது குறித்தும் அறிந்துள்ளோம். அரசைக் குடும்பங்களை ஒன்றாக வைத்திருக்க முயலுமாறு கோரியுள்ளோம்- என்றார்.

(அ-சி)

நாடாளுமன்றத் தேர்தலைக் கருத்தில் கொண்டே இந்திய அரசு இலங்கைக்கு விசேட தூதுவரை அனுப்பியது

"ரைம்ஸ் ஓவ் இந்தியா" தகவல்

கொழும்பு, ஏப். 25

இந்திய நாடாளுமன்றத் தேர்தலை, குறிப்பாக தமிழ் நாட்டில் காணப்படும் சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு காங்கிரஸ் கட்சி கொடுத்த அழுத்தங்கள் காரணமாகவே மத்திய அரசு தனது இரு தூதுவர்களை கொழும்பிற்கு அனுப்பத் தீர்மானித்தது என 'ரைம்ஸ் ஓவ் இந்தியா' செய்தி வெளியிட்டுள்ளது.

இது குறித்து அச்செய்தித்தாளில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள சிவ்சங்கர் மேனனும், எம்.கே.நாராயணனும் யுத்த நிறுத்தம், அரசியல் தீர்வை நோக்கிய நடவடிக்கைகள் மற்றும் சர்வதேச சமூகத்தை அரவணைத்து மனிதாபிமான நடவடிக்கைகளை முன்னெடுத்தல் போன்றன குறித்து வலியுறுத்துவர்.

இலங்கையில் உருவாகிவரும் சூழ்நிலை தமிழ்நா[illegible] தக்கூடிய தாக்கத்தை எதிர்கொள்வதற்காக காங்கிரஸ் தலைமை எடுத்துவரும் தொடர் முயற்சிகளில் முக்கியமானதாகவே இவர்களின் கொழும்பு விஜயம் அமைந்துள்ளது.

அவசர தலையீட்டின் பயன் குறித்து விவாதங்கள் உள்ளன. கொழும்பு அழுத்தங்களுக்கு அடிபணிவதற்கான சமிஞ்ஞையை இதுவரை வெளியிடவில்லை.

எனினும், தமிழ்நாட்டில் காயப்பட்டுள்ள உணர்வலைகளை சுகப்படுத்த இது உதவும் எனக் காங்கிரஸ் தலைமை கருதுகின்றது.

காங்கிரஸ் தலைவி சோனியா காந்தியே இந்த நடவடிக்கைக்கு பொறுப்பாகவுள்ளார்.

மத்தியில் மீண்டும் அதிகாரத்தை வெல்வதற்கு தமிழ்நாடு மாநிலம் காங்கிரஸ் கட்சிக்கு மிகவும் அவசியமானது.

பாதுகாப்பு வலயத்திலிருந்து வெளியேற முடியாத தமிழ் மக்களின் நிலை 39 ஆசனங்களை கொண்ட தமிழ் நாட்டில் உணர்ச்சிகரமான விடயமாக மாறி வருகிறது.

[illegible] மனித கேடயங்களாக வைத்திருக்க விரும்பும் விடுதலைப் புலிகளே இதற்[illegible] காரணம்.

விடுதலைப் புலிகளின் பொறுப்புணர்வு ஏற்றுக்கொள்ளப்படும் அதேவேளை, இலங்கை அரசை யுத்தத்தை நிறுத்துமாறு கோருவதன் மூலம் மத்திய அரசு இதனை சமப்படுத்த முயல்கிறது.

இதேவேளை, இலங்கையும் புதுடில்லிக்குத் தனது நிலைப்பாட்டை தெளிவுபடுத்த விசேடபிரதிநிதியை அனுப்புகின்றது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசகர் பஸில் ராஜபக்ஷ அடுத்தவார இறுதியில் இந்தியாவிற்கு விஜயம் மேற்கொண்டு இலங்கையின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்துவார்.

இலங்கை ஜனாதிபதியின் விசேட பிரதிநிதியாக பஸில் ராஜபக்ஷ இந்தியா வருவது இது இரண்டாவது தடவையாகும்.

வியாழக்கிழமை உள்துறை அமைச்சர் இலங்கை அரசை அதிகளவில் குற்றஞ்சாட்டி வெளியிட்ட கருத்துகளால் மத்திய அரசு தனது நிலைப்பாட்டை கடுமையாக்கியுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ-சி)

இந்தியாவின் கவலையை இலங்கை கவனத்தில் எடுத்து சாதகமான முடிவுகளை மேற்கொள்ளும்

எம்.கே.நாராயணன் நம்பிக்கை வெளியிடுகிறார்

சிவ்சங்கர் மேனன் ஜனாதிபதியைச் சந்தித்த போது.....

இலங்கையின் வடக்கில் உள்ள அப்பாவி மக்களின் நிலை 'குறித்து இந்தியாவின் கவலைகள் தொடர்பாக இலங்கை அரசு சாதகமான முடிவுகளை எடுக்கும். இவ்வாறு நம்பிக்கை தெரிவித்துள்ளார் இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணன்.

பாரதப் பிரதமர் மன்மோகன் சிங் தலைமையில் கூடிய அவசரக் கூட்டத்தின் பின்னர், இலங்கை பிரச்சினை குறித்து விவாதிக்கவென இந்தியாவின் வெளியுறவு அமைச்சின் செயலர் சிவ்சங்கர் மேனன் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணன் ஆகியோர் நேற்று அவசரமாக கொழும்புக்கு விஜயமொன்றை மேற்கொண்டனர்.

இந்த விஜயத்தின்போது இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்த பின்னர் நேற்று மாலையே அவர்கள் டில்லி திரும்பி விட்டனர்.

இந்நிலையில், சென்னை விமான நிலையத்தில் ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவித்த எம்.கே. நாராயணன் மேலும் கூறியவை வருமாறு:-

பிரதமர் மன்மோகன்சிங்கின் வேண்டுகோளுக்கமைய நானும் சிவ்சங்கர் மேனனும் கொழும்பு சென்று இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்துப் பேசினோம்.

வடக்கில் பொதுமக்களின் உயிரிழப்புக்கள் குறித்து இந்தியாவின் கவலையை நாம் அவரி டம் தெரிவித்தோம். போர்ப் பிரதேசத்திலிருந்து வெளியேறிய ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் குறித்தும் அவர்களின் மனிதாபிமான நிலை குறித்தும் இந்தியா தனது கவலையைத் தெரிவித்தது.

நாம் கூறியதை இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மிகக் கவனமாகக் கேட்டார்.

இந்தியாவின் கவலைகள் குறித்து இலங்கை அரசு சாதகமான முடிவுகளை எடுக்குமென நாம் நம்புகிறோம் - என்றார்.

(அ-சி)

மேல் மாகாணசபைத் தேர்தல் இன்று; 17 கட்சிகள், 2,375 வேட்பாளர் களத்தில்!

கொழும்பு, ஏப். 25

மேல் மாகாணசபைக்கான தேர்தல் இன்று இடம்பெறுகின்றது. 102 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக 2 ஆயிரத்து 378 பேர் போட்டியிடுகின்றனர். 38 லட்சத்து 20 ஆயிரத்து 214 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். அவர்களுள் கொழும்பு மாவட்டத்தில் 15 லட்சத்து 60 ஆயிரத்து 593 பேரும், கம்பஹா மாவட்டத்தில் 14 லட்சத்து 58 ஆயிரத்து 295 பேரும், களுத்துறை மாவட்டத்தில் 8 லட்சத்து ஆயிரத்து 326 பேரும் அடங்குகின்றனர்.

இத்தேர்தலில் 38 அரசியல் கட்சிகளும், 23 சுயேச்சைக்குழுக்களும் போட்டியிடுகின்றன. கொழும்பில் 17 அரசியல் கட்சிகளும், கம்பஹாவில் 11 அரசியல் கட்சிகளும், களுத்துறையில் 10 அரசியல் கட்சிகளும் போட்டியிடுகின்றன. அதேபோல் கொழும்பில் 13 சுயேச்சைக் குழுக்களும், கம்பஹாவில் 4 சுயேச்சைகக் குழுக்களும், களுத்துறையில் 6 சுயேச்சைக் குழுக்களும் போட்டியிடுகின்றன.

தெரிவு செய்யப்படவுள்ள 102 உறுப்பினர்களுள் 43 உறுப்பினர்கள் கொழும்பிலும், 39 உறுப்பினர்கள் கம்பஹாவிலும், 20 உறுப்பினர்கள் களுத்துறையிலும் அடங்குவர்.

மூன்று மாவட்டங்களிலும் இரண்டாயிரத்து 769 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கொழும்பில் ஆயிரத்து 15 நிலையங்களும் கம்பஹாவில் 978 நிலையங்களும் களுத்துறையில் 776 நிலையங்களும் இவற்றுள் அடங்குகின்றன. மூன்று மாவட்டங்களில் 319 வாக்கு எண்ணும் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

வாக்கெடுப்பு காலை 7 மணிமுதல் பிற்பகல் 4 மணிவரை நடைபெறும். இதற்கென 17 ஆயிரம் பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொழும்பு கோட்டை நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்ட பின்னர் ''உதயன்'' ஆசிரியர் ந.வித்தியாதரன் ஊடகங்களுக்கு பேட்டி அளித்தபோது. சிரேஷ்ட சட்டத்தரணி கே.வி.தவராஜாவும் காணப்படுகிறார்.

வன்னியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தூதரகங்கள் மத்தியில் விநியோகிக்கப்பட்டு வெளிநாட்டு ராஜதந்திரி ஒருவரினால் ஊடகங்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அசோசியேட்டட் பிரஸ் செய்திச் சேவை மூலமே இந்தத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜனவரி 20ஆம் திகதி முதல் 6 ஆயிரத்து 432 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். 13 ஆயிரத்து 946 பேர் காயமடைந்துள்ளனர் என ஐ.நா. அறிக்கையை மேற்கோள் காட்டி செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

'உதயன்' ஆசிரியர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குற்றத்தடுப்பு பிரிவினர் தெரிவித்தனர்.

வித்தியாதரன் சார்பாக சிரேஷ்ட சட்டத்தரணி கே.வி.தவராசா, எஸ்.கலுப்பான ஆகியோர் ஆஜராகினர்.

'உதயன்' ஆசிரியர் என். வித்தியாதரன் பெப்ரவரி 26ஆம் திகதி கல்கிஸை மலர்ச்சாலையில் நடைபெற்ற மரணச்சடங்கொன்றில் கலந்துகொண்டிருந்தவேளை கடத்தல் பாணியில் கைதுசெய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. பின்னர் கொழும்பில் இடம்பெற்ற விமானத்தாக்குதல்களுடன் இவர் தொடர்புபட்டிருந்தார் என்ற குற்றச் சாட்டு இவர்மீது சுமத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

(அ)

வலைஞர்மடத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீது வெள்ளிக்கிழமை அதிகாலை முதல் அகோர எறிகணைத் தாக்குதல்கள் படையினரால் நடத்தப்பட்டன. அதிகளவில் கொத்துக்குண்டுகள் மக்கள் மத்தியில் வீழ்ந்து வெடித்தன. வலைஞர் மடம் மாதா கோவில் பகுதிகளில் ஷெல்கள் செறிவாக வீழ்ந்து வெடித்துள்ளன.

காயமடைந்தவர்களில் 228 பேரை மாத்திரமே வலைஞர்மடத்தில் இருந்து உடனடியாக முள்ளிவாய்க்கால் மருத்துவமனைக்கு கொண்டு செல்ல முடிந்தது. அகோரமான தாக்குதல்களைத் தொடர்ந்து முள்ளிவாய்க்கால், வட்டுவாகல் பகுதிகளை நோக்கி வலைஞர்மடம் பகுதிகளில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்து கொண்டிருந்தனர்.

மாலை 6 மணி தொடக்கம் முள்ளிவாய்க்கால் மக்கள் குடியிருப்புக்கள் மீது படையினர் செறிவான பீரங்கித் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

இத்தாக்குதல்களில் 12 பேர் காயமடைந்துள்ளனர்.

நேற்றுக் காலை 9.10 மணிக்கும் பின்னர் 10.20 மணிக்கும் வான் படையின் வானூர்திகள் வட்டுவாகல் பகுதியில் மக்கள் வாழ்விடம் மீது குண்டுத் தாக்குதல்களை நடத்தின. இதில் மூன்று பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் நான்கு பேர் காயமடைந்துள்ளனர்.

இதேவேளை சிறிலங்கா கடற்படையினர் கடலில் இருந்து கரையை நோக்கி நேற்றுப் பீரங்கித் தாக்குதல்களை நடத்தினர் -என்று இணையத்தளங்கள் தெரிவித்தன.

ஜோன் ஹோம்ஸ்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜோன் ஹோம்ஸ் நாளை இலங்கை வரக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வார இறுதியில் அனேகமாக நாளை ஞாயிற்றுக்கிழமை ஜோன் ஹோம்ஸ் இலங்கை செல்லலாம் என்றும் இடம்பெயர்ந்த மக்களின் நிலைமை தொடர்பாகப் பேச்சுக்களை நடத்துவார் என்றும் ஐ.நாவின் பேச்சாளர் மாரி ஒக்காபி தெரிவித்தார்.

வன்னி சென்று....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் இந்தப் பகுதிக்கு ஐ.நா.வின் மனிதாபிமானப் பணியாளர்களின் குழு ஒன்றை அனுப்பிவைக்கப்போவதாக அறிவித்திருந்தார்.

இது தொடர்பாக நேற்று வெள்ளிக்கிழமை ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிட்ட அனர்த்த முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் விவகார அமைச்சர், ''கொழும்பில் பணிபுரியும் ஐ.நா. அலுவலர்கள் பாதுகாப்பு வலயத்துக்குச் செல்வதற்கான அனுமதியை வழங்க அரசாங்கம் கொள்கையளவில் இணங்கியிருப்பதாகத் தெரிவித்தார்.

''பாதுகாப்பு வலயத்துக்குச் செல்லவிருக்கும் குழுவில் யார் இடம்பெறுவார்கள், எவ்வளவு காலத்துக்கு அவர்கள் அங்கு தங்கியிருக்கத் திட்டமிட்டுள்ளார்கள், அங்கு அவர்கள் எவ்வாறான பணியை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளார்கள் என்பன போன்ற விடயங்களை முதலில் எமக்குத் தெரிவிக்க வேண்டும்'' எனத் தெரிவித்த அமைச்சர் மகிந்த சமரசிங்க, ''அதன் பின்னரே அதற்கான இறுதி அனுமதி எம்மால் வழங்கப்படும்'' எனவும் குறிப்பிட்டார்.

கொழும்பைத் தளமாகக் கொண்டுள்ள ஐ.நா. அலுவலர்கள் அங்கு செல்வதற்கான நடைமுறை ஏற்பாடுகள் தொடர்பாக அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ள போதிலும், அந்தப் பகுதியில் போர் நடைபெற்றுக்கொண்டிருப்பது இதனைச் சாத்தியமற்றதாக்கி விடலாம் எனவும் சுட்டிக்காட்டினார்.

(அ)

கப்பல் சேவை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்.மாவட்ட செயலகத்தில் பிரயாணத்திற்கான பதிவுகளை மேற்கொண்டு (6வது கப்பலிற்கும் 7வது கப்பலிற்கும்) அனுமதிச் சீட்டினைப் பெற்றுக்கொண்டவர்களும் அவசர தேவையின் நிமிர்த்தம் செல்ல இருப்பவர்களும் இன்று காலை 9.00 மணிக்கு யாழ். ரயில் நிலையத்துக்கு சமுகமளிக்குமாறு அரச அதிபர் அறிவித்துள்ளார்.

(1-9)

வனாந்தரமாகக் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தங்கியுள்ளவர்களை செய்தியாளர்கள் சந்தித்துக் கலந்துரையாடினர்.

படையினரால் அங்கு கட்டாந்தரையில் தங்கவைக்கப்பட்டுள்ள ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு குடிதண்ணீர் வசதி, உணவுவசதி செய்யப்பட்டுள்ளது. அங்கு இடம்பெறும் விசாரணைகளின் பின் இரண்டு, மூன்று தினங்களில் நலன்புரி நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்படுவர் என்று செய்தியாளர்களிடம் தெரிவிக்கப்பட்டது.

கட்டடங்களைக் காணமுடியவில்லை

அங்குள்ள நிலைமைதொடர்பாக சர்வதேச நிறுவன செய்தியாளர் ஒருவர் தெரிவித்ததாவது :

பரந்தனில் இருந்து புதுக்குடியிருப்பு வரை செல்லும் பாதையில் கட்டடங்கள் எதையும் காணமுடியவில்லை. இடை இடையே அமைந்திருந்த நகரங்கள் கூட அங்கு இருந்த இடமே தெரியாது அழிந்து விட்டன; அழிக்கப்பட்டுவிட்டன. அங்கு உக்கிரமான போர் ஒன்று இடம் பெற்றதன் தோற்றமும் காணப்படுகின்றது.

கம்பீரமாகக் காட்சி தந்த கட்டடங்கள், வீடுகள் எல்லாம் இருந்த இடமே தெரியாத அளவு வெட்டைவெளியாகக் காட்சி அளிக்கின்றது. போரின் உக்கிரத்தை உணரக்கூடிய எச்சங்களையே காண முடிகின்றது. - என்றார். '

ஷெல் தாக்குதல்களாலேயே தாம் இடம்பெயர்ந்ததாகவும் பாதிக்கப்பட்ட தாகவும் கூறும் மக்கள் எந்தத் தரப்பினது ஷெல் தம்மைத் தாக்கியது என்பதையும் கூற மறுத்துவிட்டனர். - என்றார் அந்தச் செய்தியாளர்.

(அ-1)

Raveens English Medium Classes
Karaveddy
மேற்படி நிறுவனத்துக்குரிய Grade 11 மாணவர்கள் பங்குபெறும்
IMPROMPTU ORATORY (ENGLISH)
முன் ஆயத்தமில்லாப்பேச்சு (ஆங்கிலம்)
குறிப்பு: சபையோர் வழங்கும் தலைப்புகளுக்கே பேசுவதற்கு அனுமதிக்கப்படுவர்.
இடம்: யா/மாணிக்கவாசகர் வித்தியாலயம். - கரவெட்டி [அருகாமை]
காலம்: நாளை [26.04.2009] ஞாயிற்றுக்கிழமை காலை 8.30
தலைவர்: இ.இராகவன் [அதிபர், யா/மாணிக்கவாசகர் வித்தியாலயம், கரவெட்டி.]
பிரதமவிருந்தினர்
திரு.வை. செல்வராசா
[வலயக்கல்விப் பணிப்பாளர், வடமராட்சி வலயம், புலோலி]
ஆர்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம்
நிர்வாகத்தினர்.
English is a Global Language
விழா சிறப்புற வாழ்த்துவோர்.
* NEW ABIRAMI VILAS
(RAMANATHAN ROAD - THIRUNELVELI)
* HS COMPUTER EDUCATION CENTER
(KODIKAMAM ROAD - NELLIADY.)
* RUHBINS BUILDING CONSTRUCTORS
(THUNNALI NORTH, KARAVEDDY)

மரண அறிவித்தல்

பொன்னம்பலம் சீவரத்தினம்

கொக்குவில் மேற்கு, மணியர்பதி வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் சீவரத்தினம் 24.04.2009 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம்- பொன்னம்மா தம்பதிகளின் புத்திரனும் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை- ஆசைப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான இராசையா, குணரத்தினம், தங்கம்மா, அன்னம்மா, இராசரத்தினம் மற்றும் இரத்தினம், ஞானரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சோமசுந்தரம், தையல்நாயகி, கணேசு, இராஜேஸ்வரி, சுப்பிரமணியம், சரோஜினி ஆகியோரின் அன்பு மைத்துனரும் கணேசலிங்கம் (சவுதி அரேபியா), விக்கினேஸ்வரி, கோணேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும் லீசா, சந்திரகுமார், (சுங்கத் திணைக்களம், யாழ்ப்பாணம்), தயாளன் (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலீசா, கிலோசிகா, கிலோனிகா, கிரோஸ், கிரியராஜ், (தரம் 10 கொக்கு வில் இந்துக் கல்லூரி), திவியன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.04.2009) சனிக்கிழமை பகல் 1மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
தொ.பே: 021 222 2935.

தகவல்: குடும்பத்தினர்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.04.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.